
# தன்னந் தனிமையிலே...

முத்துலட்சுமி ராகவன்



# தன்னந் தனிமையிலே...!

## 1

"ஸ்ரீ ஹரிஹர கோகுல ரமணா

உந்தன் திருவடி சரணம் கண்ணா..."

ஹாலில் இருந்த சிடி பிளேயரில் பாடல் ஒலித்துக் கொண்டிருக்க... பூஜையறையில் அமர்ந்து... கண்மூடி தியானத்தில் அமர்ந்திருந்தார் சுந்தரம்...

சமையலறையில் இருந்து வந்து எட்டிப் பார்த்த விசாலம்... அவரது தியானத் தோற்றத்தைக் கண்டதும்... மீண்டும் சமையலறைக்குச் சென்றாள்.

"என்னடி விசாலம்... குட்டி போட்ட பூனை போல் இங்கேயும்... அங்கேயும் உலாத்திக்கிட்டு இருக்கிற..."

கையில் இருந்த காய்கறிப் பையை... சமையலறை மேடையில் வைத்துவிட்டு வினவினான் கோவிந்தன்.

''பிள்ளைகளை பள்ளிக்கூடத்துக்கு அனுப்ப னும்யா... ஐயா பூஜையை முடிச்சிட்டாருன்னா... அம்மாவுக்கு சாப்பாடைக் கொண்டு போய் வைத்துவிட்டு ஒரு எட்டு வீட்டுப்பக்கம் ஓடிவிட்டு வந்திரலாம்... அதான் அப்போதிருந்து எட்டியெட்டிப் பார்க்கிறேன்.... அவர் பூஜையை இன்னும் முடித்த பாடாய் இல்லை...''

''பொறுடி... அவர் மனசில் எத்தனை வேதனையிருக்கோ...? இந்த வீடு எப்படியிருந்த வீடு...? ஆளும் பேருமாய்... கூடிக் குழுமி.... ஒற்றுமையாய் எல்லோரும் வாழ்ந்த வீடு... இப்ப ஆளுக்கொரு திசையில் அத்தனை பேரும் பிரிஞ்சு போயிட்டாங்க...''

''பிரிஞ்சு போனாங்களா.... பிய்ச்சுக்கிட்டுப் போயிட்டாங்கன்னு சொல்லுய்யா...''

''என்னத்தையோ ஒன்னை செய்துவிட்டுப் போயிட்டாங்க... இப்ப வீடே அமைதியாய்... ஆளரவம் இல்லாமல் இருக்கு... அம்மா... இப்பவோ... எப்பவோன்னு கிடக்கிறாங்க... இவர் ஒருத்தரா அவங்களைக் கவனிச்சுக்கிட்டு... அவங்க பக்கத்தில்... இருபத்தி மூன்று மணி நேரமும் இடைவிடாமல் இருக்கிறாரு...''



''ஏன்ய்யா... ஒரு நாளைக்கு இருபத்தி நாலுமணி நேரமில்லையா.''

''ஆமாண்டி... அதுக்கென்ன இப்ப...?''

''நீ இருபத்தி மூன்று மணி நேரம்கிறயே...''

''இப்ப அதுதாண்டி ரொம்ப முக்கியம்... ஒரு மனுசனுக்கு குளிக்க... பூஜை பண்ணன்னு நகர... இருபத்தி நாலு மணி நேரத்தில் ஒருமணி நேரமாவது வேண்டாமா...?''

''ஓ... நீ அப்படி வருகிறாயா...? ஆனால் பூஜை ரூமில் தியானத்தில் உட்கார்ந்தால்தான் ஐயாவுக்கு எழுந்திருக்கவே மனம் வரமாட்டேங்குது...''

''என்னடி செய்வாரு... அவர் மன வேதனையை யாருகிட்ட சொல்வாரு...? அந்த சாமிகிட்டத்தானே சொல்ல முடியும்... அம்மாவைப் பார்த்துக்க இவர் இருக்காரு.... ஆனால்... இவரைப் பார்த்துக் கொள்ள யாரிருக்கா...? அந்த சாமிதான் பார்த்துக்கணும்... ஆமாம்... காலைக் காபியை கொடுத்துவிட்டாயா...?''

''அதை இப்ப வந்து கேளு... அதெல்லாம்... அப்பவே கொண்டு போய் கொடுத்துவிட்டேன்...''

''நீ இங்கே வேலையைப் பாரு... நான் போயி... பிள்ளைகளைப் பள்ளிக் கூடத்துக்கு கிளப்பி.... அனுப்பி வைத்து விட்டு வருகிறேன்....''

"ஏன்ய்யா... என் பிள்ளைகள் கூடக் கொஞ்ச நேரம் செலவளிக்கக் கூட நீ விடமாட்டாயா...?"

"போதும்டி... நீ பிள்ளை வளர்த்தது... இப்ப படுக்கையில் கிடக்கிறாங்களே.... அந்த அம்மா... அவங்களும் இப்படித்தான் உயிரையெல்லாம் பிள்ளைகளின் மேல் வைத்துப் பாசமாய் வளர்த்தாங்க... நமக்காவது இரண்டு... இவங்களுக்கு ஆண் இரண்டு... பெண் ஒன்றுன்னு... அருமையருமையாய் மூன்று பிள்ளைகள்... பிள்ளைகள் கிட்ட பாசத்தைக் கொட்டி வளர்த்தவங்க நிலைமையைப் பார்த்தாயா...? இப்பக் கட்டிலில் நடக்க முடியாமல் விழுந்து கிடக்கிறாங்க... பெத்த பிள்ளைகள் அதது வழியில் தனித்தனியாய் போயிருச்சுங்க... இதில் யாரைக் குற்றம் சொல்லி என்ன ஆகப்போகுது...? இதையெல்லாம் பார்த்த பின்னாலும் நீ பிள்ளை... பிள்ளைன்னு உருகாதே..."

"அப்படியே கரண்டியைத் தூக்கி... மண்டையில் நாலுபோடு போட்டு விடுவேன்... யோவ்... உன் ஆம்பளை புத்தி இப்படித்தான் போகும்... தாய் மனசைப் பத்தி உனக்கென்னய்யா தெரியும்...? பெத்த பிள்ளைகள் பதிலுக்கு பாசம் காட்டினால்தான்.... தானும் பாசம் காட்ட வேண்டும்ன்னு... ஒரு தாய் நினைச்சாள்ன்னா... அவள் தாயே இல்லை... பத்து மாசம் சுமந்து... பெத்தவளுக்குத் தெரியும்ய்யா... பிள்ளைகளின் அருமை... அதுகள் கிட்ட மனசில் பொங்கி வருகின்ற பாசத்தை அவள் கொட்டி வளர்ப்பது இயற்கை... தாய் சிறகுகளுக்கு அடியிலேயே காலம் பூராவும் குஞ்சுகள் இருக்க முடியுமா...? அதது துணை சேர்ந்தா... அதது வழியில்... வாழ்க்கையை வாழத்தான் பார்க்கும்... இதுக்காக... பெத்தவங்க மேல.... அதுகளுக்கு பாசம் வற்றிப் போயிருச்சுன்னு அர்த்தமா..? இல்லை... அதுக்காக பெத்தவதான்... பிள்ளைகளை வெறுத்து விடுவாளா...?"



"நீ காபி குடிச்சிட்டியாடி விசாலம்...?"

"என்னய்யா... கரிசன மழை பொங்கி வருது...?"

"குடிச்சாலும் பரவாயில்லை... இன்னொரு தம்ளர் குடி..."

"சரி குடு... உன் ஆசையைக் கெடுப்பானேன். இதைக் குடித்து வைக்கிறேன்..."

"இல்லை... இவ்வளவு நீளமா... மூச்சுவிடாமல்... தாய்க் குலத்தின் பெருமையை... அள்ளி வீசிக் கொண் டிருக்கிறாயே... அதனால் உன் தொண்டைத் தண்ணீர் வற்றிப் போய்... நாக்கு வறண்டு போயிருக்குமேங்கிற... அக்கறையில் சொன்னேன்... இந்த வீட்டில்... நாமளும்... நம்ம பிள்ளைகளும் சாப்பிட்ட... மிச்சம் தானே... ஐயாவுக்கும்... அம்மாவுக்கும் கிடைக்குது..."

"நீ ஒரு ஆள்தான் பாக்கி... நீயும் இதைச் சொல்லிவிட்டாயா? இதுக்குத்தான் நான் ஆரம்பத்தி லேயே... தலைப்பாடாய் அடித்துக்கிட்டேன்... நம்ம வயிற்றுக்கு... நம்ம வீட்டில் ஆக்கிச் சாப்பிடலா முன்னு... ஐயாவும்... அம்மாவும் விட மாட்டேன்னு சொல்லிட்டாங்க..."

"அட விளையாட்டுக்கு ஒரு பேச்சுப் பேசினால்... அதுக்குப்போயி இவ்வளவு சலிச்சுக்கிறவ... காலையில் பொழுதுவிடிஞ்சு... ஜாமம்வரைக்கும்... இந்த வீட்டிலேயே வேலை செய்துவிட்டு... சோத்தை மட்டும் தனியாய் ஆக்கினால்... அதுக்கு ஐயாவும்... அம்மாவும் எப்படி சரின்னு சொல்லுவாங்க...?"

"நீ இங்கிட்டும் பேசுவ... அங்கிட்டும் பேசுவ... உன் பேச்சையெல்லாம் ஒரு பேச்சுன்னு கணக்கில் எடுத்துக்க முடியாது."

"ஆமாண்டி... அம்மா ஒரு வார்த்தை சொன்னாங்கன்னு... மறு பேச்சில்லாமல்... உன் கழுத்தில் தாலியைக் கட்டினேன் பாரு... எனக்கு இதுவும் வேண்டும்... இன்னமும் வேண்டும்..."

"நான் மட்டும் என்னவாம்.. அம்மா சொன்ன அதே ஒரு வார்த்தைக்குக் கட்டுப்பட்டுத்தான் என் கழுத்தில் உன் கையால் தாலியைக் கட்டித் தொலைத்தேன்... மனசில் வைச்சுக்க..."



"ஏண்டி... அடித்துத் துரத்திவிட்டால் போவதற்கு அப்பன்... ஆத்தா இல்லாதபோதே... உன் வாய் இந்தக் கிழி... கிழியுதே... உனக்கு தங்குவதற்கு ஒரு தாய் வீடு இருந்துச்சுன்னா... கையில் பிடிக்க முடியுமா...? ஆடிப் பார்த்துடமாட்டே...?"

"யோவ்... அப்படி ஒரு இளக்காரத்தை உன் மனசில் வைச்சுக்கிட்டு அலையறயா...? எனக்கு அப்பன்.. ஆத்தாதான் இல்லை... ஆனால்... ஆயி அப்பன் வாழ்ந்த ஊர் இருக்கு... அவங்களோட பூர்விகக் குடிசை இருக்கு... பொழைக்கிறதுக்கு... வளமான பூமி இருக்கு... பாடுபட எனக்கு அத்தனை விவசாயத் தொழிலும் தெரிஞ்சிருக்கு... களை யெடுக்கிறதில் ஆரம்பித்து... நாற்று நடவு... கதிர் அறுக்கறதுன்னு... அத்தனை விவசாயத் தொழிலை யும்... என் கைக்குள் அடக்கி வைச்சிருக்கேன்... கற்ற வித்தை... காலத்துக்கும் உதவும்ய்யா... இப்ப களை யெடுப்புக்கு கூலி எவ்வளவுன்னு தெரியுமா...? இப்ப ஊம்ன்னு ஒரு வார்த்தை சொல்லு... நான் சேலையை இழுத்துச் செறுக்கிட்டு... என் புள்ளைகளை கையில பிடிச்சுக்கிட்டு கிராமத்துக்கு வண்டி ஏறிடுறேன்... நானா உழைச்சு... என் பிள்ளைகளை வளர்த்துக் காட்டவா...?"

"அது என்னடி புள்ளைகளை கைல பிடிச்சுக் கிட்டு போறவ... புள்ளைக என்ன... நானில்லாமலா வந்திருச்சுக.... அதுக என் பிள்ளைகடி... நடையைக் கட்டுவதாக இருந்தால்... நீ மட்டும் நடையைக் கட்டு... என் பிள்ளைகளை ஏன் கூட்டுச் சேர்க்கிறவ..."

அது நேரம்வரை கணவனுக்குச் சரியாக வழக்கடித்துக் கொண்டிருந்த விசாலத்தின் முகம் குங்குமமாய் சிவந்துவிட்டது... கோவிந்தனின் முதுகில் உண்மையிலேயே... கரண்டியால் ஒரு போடு போட்டாள்.

"தூ... நீயும் உன் பேச்சும்... போய்யா... காலங் கார்த்தாலே வம்புக்கு வந்துக்கிட்டு..."

"அடிக்கள்ளி... நீ வெட்கப்படும்போது தாண்டி... கொள்ளை அழகாய் இருக்கே..."

கோவிந்தன் மனைவியிடம் ஆவலுடன் நெருங்கி... கட்டியணைக்க... ஹாலில் இருந்து... மிகச் சரியாக... அந்த நேரத்தில்... சுந்தரத்தின் குரல் ஒலித்தது.

"கோவிந்தா..."

"ஐயையோ... ஐயா கூப்பிடுகிறார்டி..."

அவசரமாய் மனைவியை விட்டு விட்டு... ஹாலுக்கு ஓடினான் கோவிந்தன்... கணவனை



நினைத்து மனதிற்குள் காதல் பொங்க... பாத்திரங் களில் காலைச் சிற்றுண்டியை எடுத்து வைக்க ஆரம்பித்தாள் விசாலம்...

"ஐயா..."

"எனக்கும்... அம்மாவிற்கும் காலை டிபனை எடுத்துக் கொண்டு மாடிக்கு வா..."

"சரிங்கய்யா..."

"பிள்ளைகளை ஸ்கூலுக்கு அனுப்ப விசாலம் போகட்டும்..."

"ஆகட்டும்ய்யா..."

சுந்தரம்... மாடிப்படிகளில் ஏற... கோவிந்தனிடம்... பாத்திரங்களையும்... தட்டுக்களையும் கொடுத்துவிட்டு... அந்த பங்களாவின் பக்கவாட்டு வாயில் வழியாக... தோட்டத்தில் இருந்த அவுட் ஹவுஸிற்கு விரைந்தாள் விசாலம்...

கோவிந்தன்... விசாலம்... இருவருமே... சுந்தரத்தின் பூர்விகக் கிராமத்தைச் சேர்ந்தவர்கள்... தமிழ்நாட்டின் நெற்களஞ்சியமான.... தஞ்சை மாவட்டத்தில்... சோறு கொடுக்கும் விவசாயத் தொழிலின் பிரதான இடமான கிராமங்களின்... வயல்களில் வேலை செய்து பிழைப்பவர்கள்...

சுந்தரத்தின் மனைவிக்கு உடல் நிலை சரியில்லாமல் போய்... வீட்டோடு இருக்கும்

வேலையாள்கள் தேவைப்பட்டார்கள். அறிமுக மில்லாத ஆள்களை வீட்டுக்குள் சேர்ப்பதற்கு யோசித்த சுந்தரம்... தன் பூர்வீகக் கிராமத்தில் இருந்து... அவர்கள் இருவரையும் வேலைக்கு அழைத்துக் கொண்டு வந்தார்.

திருமண வயதில் இருந்த.. இருவரும்... ஒரே கிராமத்தில் பிறந்து வளர்ந்து ஒற்றுமை மனதில் இருக்க... காதல் வயப்பட்டு விட்டார்கள்...

கோவிந்தனுக்கு வயதான தாத்தா மட்டும் இருந்தார். விசாலத்திற்கு பெற்றவர்கள் இல்லை... உறவினர்கள் ஒதுங்கி நின்றனர்... சுந்தரமும்... அவரது மனைவியும்... முன்னே நின்று அவர்களின் திருமணத்தை முடித்து வைத்து... தங்கள் பங்களா வின் காம்பவுண்டுக்குள்ளேயே இருந்த அவுட் ஹவுஸையும் அவர்களின் பெயருக்கு எழுதித் தந்தார்கள்.

இது குறித்து... சுந்தரத்தின் வாரிசுகள் கோபக் குரலை எழுப்பினார்கள்... கோவிந்தனும்... விசாலமும் ... நன்றிக் கடனில் சிக்கினார்கள்... இந்தக் காலத்தில் ... இப்படிப்பட்ட மனிதர்களைப் பார்ப்பது அரிது என்ற உண்மை உறைத்ததால்... அவர்களது நிழலை விட்டு ஒதுங்க எண்ணமில்லாமல் அங்கேயே தங்கி விட்டார்கள்.



## 2

"ஒரே ஒரு ஊரிலே...
ஒரேஒரு ராஜா...
ஒரே ஒரு ராஜாவுக்கு...
ஒரே ஒரு ராணி..."

பழைய காலத்துத் திரைப்படப் பாடல் இது... அந்த ராஜாவையும்... ராணியையும் போல்தான் சுந்தரமும்... அவரது மனைவியோடு செல்வாக்காய் வாழ்ந்து வந்தார்... அவர் பெற்ற பிள்ளைகள் ஆளுக்கொரு திசையில்... பிரிந்து சென்றார்கள்.

ஆனால்... அவர் ஆதரித்து வளர்த்த பிள்ளைக ளான கோவிந்தனும்... விசாலமும்... அவரது காலடியை சுற்றி வந்தனர்.

*"எங்கிருந்தோ வந்தான்*
*இடைச்சாதி நானென்றான்...*
*இங்கிவனை யான் பெறவே...*
*என்ன தவம் செய்துவிட்டேன்..."*

பாரதி அன்று உருகி பாடிவைத்ததை உணர்ந்து உயிர் கொடுப்பவனய்... கோவிந்தன்... சுந்தரத்தின் வேலைக்காரன் என்றபெயரில்... அவரது நிழலாக மாறினான்... விசாலம்... சமையல்காரி என்ற

பெயரில்... அந்தப் பெரியவர்களைத் தாங்கும் தாய் மடியாக மாறினாள்...

அவர்களுக்கும் ஆண் ஒன்றும்... பெண் ஒன்றுமாக இரண்டு குழந்தைகள் பிறந்தன... அனைவருக்கும்... அந்தப் பங்களாவில் சமைக்கும் சாப்பாடுதான் என்றாகிப் போனது... தனித்து சமையல் செய்ய சுந்தரம் அனுமதிக்கவில்லை...

"ஏண்டா கோவிந்தா... தனியாய் சமைக்கிற அளவுக்கு நீயும் இந்த வீட்டை... வேற்று மனிதர்களின் வீடாக நினைத்து விட்டாயா...?"

"ஐயா... அப்படி ஒரு நினைப்பு... என் மனசில் ஆயுசுக்கும் வருமாய்யா...?"

கார் ஓட்டுவதில் ஆரம்பித்து தோட்டத்தை பராமரித்து ... வீட்டுக்கு காவலாளியாக மாறி... கடைத் தெருவில் வாங்க வேண்டிய சாமான்களையும் வாங்கி வந்து... மோட்டார் ரிப்பேரில் இருந்து... கரண்ட் வயர் வரை அனைத்தையும் பழுதுபார்த்து... சுந்தரத்தின் கணக்குப் பிள்ளையாக... கிராமத்தின் வயல்களில் வரவேண்டிய குத்தகைப் பணத்தையும் வசூலித்து... பேங்கில் மாதா மாதம் வட்டிப் பணத்தை வாங்கி வந்து... குடும்ப வரவு... செலவு கணக்கைப் பழுதில்லாமல் எழுதி வைத்து... அந்த வீட்டில் சுந்தரத்தின் வலது கையாக மாறிப் போயிருந்தான் கோவிந்தன்.

மேல் வேலை செய்ய தினமும் வந்து போகும் பெண்ணை.... அதட்டி வேலை வாங்கி... வீட்டையும்... தோட்டத்தையும், தூசு... தும்பில்லாமல் பராமரித்து...



சுந்தரத்தின் துணிகளையும்... அவரது மனைவியின் துணிகளையும் துவைக்க வைத்து... எடுத்து மடித்து அயர்ன் பண்ணி அவர்களது அலமாரியில் அடுக்கி வைத்து... காலைக் காபியில் இருந்து... இரவுப் பால்வரை... குறைவில்லாமல்.. வாய்க்கு ருசியாய் வகை வகையாய் சமைத்துப் போட்டு... அந்த வீட்டின் ஜீவநாடி குறையாமல் பார்த்துக் கொள்பவளாக மாறிப் போயிருந்தாள் விசாலம்...

இப்படிப்பட்ட விசுவாசமிக்க வேலையாள்கள் கிடைப்பதற்கும்... பாக்கியம் செய்திருக்க வேண்டும்... அந்தப் பாக்கியத்தைப் பெற்ற பாக்கியசாலியான சுந்தரம்... மாடியில் இருந்த அவரது படுக்கையறைக் கதவைத் திறந்து உள்ளே சென்றார்...

மிகப்பிரமாண்டமாய்... பல அறைகளை உள்ளடக்கியதாய் பரந்து விரிந்திருந்தது... அந்தப் படுக்கையறை...

முன்னால் பெரிய வரவேற்பறை இருந்தது... அதைத் தாண்டி... உள்ளே போனால்... நீள் வடிவத்துடன்... இருபக்கமும்... கண்ணாடி அலமாரிகளுடன் இருந்த படிக்கும் அறை இருந்தது... அலமாரிகளில்... வரிசையாக புத்தகங்கள் அடுக்கி வைக்கப்பட்டிருந்தன... அதற்கு அடுத்து விசாலமாய் விரிந்திருந்த படுக்கையறை...

அறையின் நடுமையத்தில் பிரம்மாண்டமாய் இருந்த கட்டில்கள்... கட்டிலை ஒட்டிப் போடப்பட்டிருந்த

சோபாக்கள்... கட்டிலுக்கும்... சோபாவுக்கும் இடையில் ஒரு டீப்பாய் இருந்தது.

கட்டில்களின் தலைமாட்டில்... மர அலமாரி ஒன்று அழகாக வடிவமைக்கப்பட்டு... கண்ணாடிக் கதவுகளுடன் இருக்க... அவற்றில் அணி வகுத்து... மாத்திரை... மருந்துப் பாட்டில்கள் இருந்தன...

அறையின் ஒரு பக்கம் முழுவதும்... ஜன்னல்கள் இருக்க... அதை மறைத்து... கனமான... கெட்டித் திரைச் சீலைகள் தொங்கின... அதையொட்டி ஒரு நவீன சக்கர நாற்காலி... நின்று கொண்டிருந்தது...

படுக்கையறையின் பக்கவாட்டுக் கதவைத் திறந்தால்... மிகப் பெரிய உடைமாற்றும் அறை இருந்தது... அதில் ஒருபக்க சுவர் முழுவதும் கண்ணாடி இருக்க... அறையின் சுவர்கள் முழுவதும்... அலமாரிகள் காணப்பட்டன...

உடைமாற்றும் அறைக்குள் அட்டாச்சுடு பாத்ரூம்... அதையொட்டி அமைந்திருந்தது...

ஒரு மேல்தட்டு அபார்ட்மெண்டின் அனைத்து வசதிகளையும்... அறைகளையும்... அடக்கிய அந்த படுக்கையறையின் பிரம்மாண்டமான கட்டில்களின் நடு மையத்தில்... படுத்து... கண்களை மூடியிருந்தாள் அனுபமா... சுந்தரத்தின் மனைவி...

அறுபதைத் தாட்ட வயதிலும்.. அவள் முகத்தில் மாறாத அழகு சுடர் விட்டுப் பிரகாசித்துக் கொண்டிருந்தது...



அவள் இளம் வயதில் மிகப் பிரமாதமான அழகியாக இருந்திருப்பாள் என்பதை உணர்த்திய முக லட்சணத்துடன்... சோர்வாய் கண் மூடிப் படுத்திருந்தாள் அனுபமா...

கட்டிலின் முன்னாலிருந்த டீப்பாயில் தான் கொண்டு வந்த பாத்திரங்களை வைத்து விட்டு கோவிந்தன் அகன்றுவிட... கட்டிலில் அமர்ந்து... தன் கையிலிருந்த... விபூதியையும் குங்குமத்தையும்.. அவள் நெற்றியில் இட்டுவிட்ட சுந்தரம்... மெதுவான குரலில்...

''அனு...'' என்று மிக... மிக... மிக... அன்பாகவும்... காதலாகவும் அழைத்தார்.

அந்த அழைப்பிற்குத்தான் எத்தனை சக்தி...? கண்மூடிப் படுத்திருந்த அனுபமா... சட்டென்று கண் விழித்தாள்... தன் முன் அமர்ந்து... முகம் பார்த்துக் கொண்டிருந்த கணவனின் முகத்தை... அவருக்குக் குறையாத காதலுடன் பார்த்தவள்.. லேசாக சிரித்தாள்...

''என்னம்மா.. முகம் வாடியிருக்கு...''

''ஒன்று மில்லையே...''

''சாப்பிட்டு விடலாமா...''

''ம்ம்ம்...''

''எழுந்து கொள்...''

சுந்தரம் அவள் பக்கத்தில் அமர்ந்து... அவளை மெதுவாகத் தூக்கி... கட்டிலின் தலைமாட்டில் சாய்வாக தலையணைகளை அடுக்கி வைத்து... அவள் முதுகிற்கு இதமாக அண்டைக் கொடுத்து... அவளை அமரவைத்தார். அவளுடன் பேசிய வண்ணம் தட்டில் காலைச் சிற்றுண்டியை பரிமாற ஆரம்பித்தார்.

"இன்றைக்கு என்ன டிபன்னு சொல்லு பார்க்கலாம்..."

"வெண் பொங்கல்... வடை..."

"எப்படிக் கண்டுபிடித்தாய்...?"

"வாசனை சொல்லுதே..."

"கெட்டிக்காரி..."

"சாப்பாட்டு ராமின்னு சொல்லுங்க..."

"ஊஹூம்... உலகப் பேரழகின்னு வேண்டும்ன்னா சொல்லுவேன்..."

"போதுமே..."

வெட்கத்தில் முகம் சிவந்த அனுபமாவின் கூந்தல்... இடையைத் தாண்டி... முழங்கால்களைத் தொட்டுக் கொண்டிருந்தது... அவளின் மடிமேல்... சிறு டவலை விரித்து விட்டு... அதன் மேல் சாப்பாட்டுத் தட்டை வைத்தார் சுந்தரம்...

"சாப்பிடு..."



"நீங்களும் சாப்பிடுங்க..."

"பின்னே...? உன்னை விட்டுத் தனியாக என்றைக்கு நான் சாப்பிட்டிருக்கிறேன்...?"

சுந்தரம்... டீப்பாயை அருகில் இழுத்துப் போட்டுக் கொண்டு மனைவியின் அருகே... தானும் கட்டிலில் அமர்ந்தார்... பேசிக் கொண்டே இருவரும் சாப்பிட ஆரம்பித்தனர்... சுந்தரம் நையாண்டியாய் பேசிய ஒவ்வொரு வார்த்தையையும் ரசித்துச் சிரிக்க ஆரம்பித்தாள் அனுபமா... முகமெல்லாம் மலர... தலையை ஒருபுறமாய் சாய்த்து அவள் சிரிக்கும்போது... அவளது கண்களும் சேர்ந்து சிரித்தன...

அவளைப் பார்த்த முதல் நாளில் அவளிடம் சுந்தரம் உணர்ந்த வசீகரத்தை... அப்போதும் உணர்ந்தவர்... சொக்கிப்போய் மனைவியைப் பார்த்தார்...

"என்ன அப்படிப் பார்க்கறீங்க...?"

"உனக்கு அறுபது வயதுன்னு சொன்னால் யாரும் நம்ப மாட்டாங்கடி..."

"உங்களுக்குக் கூடத்தான்... எழுபத்தொரு வயதுன்னு சொன்னால் யாரும் நம்ப மாட்டாங்க... பிள்ளைகளைப் பெற்று... பேரன் பேத்தி எடுத்தும் விட்டோம்... இப்போதும் கூட உங்களுக்கு... என்னைப் பார்க்க அலுப்பதில்லை..."

"எதற்காக அலுக்க வேண்டும்...?"

"ம்ம்... ஓர்அளவுக்கு மேல்... கட்டின பெண்டாட்டி உலக அழகியாக இருந்தாலும்... ஆண்களுக்கு அலுத்துவிடுமாம்..."

"எனக்கு அலுக்காது..."

"அதுதான் ஏன்...? இப்படிப் படுக்கையில் விழுந்துவிட்டேன்... எழுந்து நடக்கக் கூட உங்களின் துணை தேவைப்படுகிறது... கொஞ்சம் கூட முகம் சுளிக்காமல்... என்னை பாத்ரூமுக்கு அழைத்துச் சென்று... குளிப்பதற்கு உதவி செய்து... டிரஸ் மாற்றிவிட்டு... போதாத குறைக்கு... தலையை வாரிப் பின்னல் போட்டுன்னு... அத்தனையையும் செய்கிறீங்களே... அது கூட உங்களுக்கு அலுக்கவில்லையா?"

"அலுக்கவில்லை..."

குனிந்து மனைவியின் கன்னத்தில் முத்தமிட்ட சுந்தரம்... அவள் கைழுவ தண்ணீர் ஊற்றினார்... அவளுக்கு வாய் துடைத்து விட்டு... சாப்பிட்ட பாத்திரங்களை டீப்பாயின் மேல் வைத்துவிட்டு அவளருகே வந்து குனிந்து... அவள் இடுப்பில் கை கொடுத்துத் தூக்கினார்...

"ரொம்ப யோசிக்கறே... வா... தோட்டத்துப் பக்கம் போய் விட்டு வரலாம்..."

அவளை சக்கர நாற்காலியில் உட்கார வைத்து... அதை ஒட்டிக் கொண்டு... அறையை விட்டு வெளியே வந்தவர்... முன்புறமாய் நீண்டு சென்ற வராண்டாவின்... மறு கோடியிலிருந்த லிப்டை நோக்கி வண்டியைத் தள்ளிக் கொண்டு சென்றார்...



"பெண்டாட்டிக்காக வீட்டிற்குள் லிப்ட் வைத்துக் கட்டும் மனிதரை எங்கேயாவது பார்த்திருக்கிறோமா..?"

"பெண்டாட்டிக்காக... தாஜ்மஹால் கட்டிய மனிதன் வாழ்ந்த நாட்டில் பிறந்தவன்டி நான்..."

"எதற்கு இந்த வீண் செலவும்... சிரமமும்... பேசாமல் கீழ்ப் புற பெட்ரூம்களில்... ஏதாவது ஒன்றில்... நாம் தங்கியிருக்கலாமே... முகுந்தனும் அதைத்தானே சொன்னான்..."

இதைச் சொல்லும்போது... அனுபமாவின் கண்கள் லேசாய் கலங்கின... சுந்தரத்தின் முகம்... கோபத்தில் சிவந்தது...

## 3

"இது என் வீடு அனு.... நான் உழைத்து சம்பாதித்தது... என் சுய சம்பாத்தியத்தில் கட்டியது..."

"இப்போது அதை... யார் இல்லையென்று சொன்னாங்க..."

"நமது பெட்ரூமை.... உனக்காகன்னு நான் பார்த்துப் பார்த்துக் கட்டினேன்டி... உனக்குப் படிக்கப் பிடிக்கும்ன்னு அங்கேயே லைப்ரரி... தோட்டத்தைப் பார்க்க உனக்குப் பிடிக்கும்ன்னு... ஒரு சுவர் பூராவும்... ஜன்னல்கள்ன்னு... நான் உனக்காக இழைச்ச வசந்த

மாளிகைடி அந்த ரூம்... அதை விட்டு நீ... வேறு ரூமுக்கு மாறுவதா...?"

"என் காலம் முடிவது வரைக்கும்... அந்த ரூமில் இருந்து அனுபவித்து விட்டேனே... அது போதாதா...?"

"அடித்து விடுவேன் அனுபமா... உன் காலம் முடியவில்லை... அது முடியவும்... நான் விட மாட்டேன்.."

"ம்ம்... நடை தளர்ந்து விட்டது... எல்லாவற்றிற்கும் உங்கள் உதவியை எதிர் பார்த்துக் கொண்டு... இன்னும் எத்தனை நாள் உங்களை... என் பாரத்தை சுமக்க வைப்பது...?"

லிப்ட் தரையைத் தொட்டுவிட்டது... கதவு திறக்க... அதை விட்டுவெளிப்பட்ட சுந்தரம்... மனைவியை குற்றம் சாட்டும் பாவனையில் பார்த்தார்.

"யாருக்கு யார் பாரம் அனு...? எனக்கு நீ பாரமா? நீவேறு... நான் வேறா...?... நீ என் உயிரோடு கலந்தவள் அனு... என் சுவாசக் காற்று..."

அதை உணர்ந்தவள்தான் அனுபமா... இருபத்தி இரண்டு வயதில் சுந்தரத்தின் மனைவியாகி அவருடன் வாழ்க்கையை ஆரம்பித்தவள்... இந்த முப்பத்தியெட்டு வருட மணவாழ்க்கையில்... சுந்தரம்... அவள் மேல் கொண்டிருந்த காதலை... ஒவ்வொரு நொடியும் அறிந்து... அதை ருசித்து... அதில் திளைத்தவள்...



சுந்தரத்திற்கு அனைத்துமே... அவள்தான் என்பதை தெளிவாக தெரிந்து வைத்திருப்பவள்....

இருந்தபோதும்.... சில சமயம் தன்னிரக்கம் பொங்க வார்த்தைகளை இப்படிச் சிதறவிட்டுவிடுவாள்... சுந்தரம் கடிந்து கொண்டதும்... பழையபடி இயல்பு நிலைக்கு திரும்பி விடுவாள்.

சுந்தரம்... சக்கரநாற்காலியை பங்களாவின் பக்கவாட்டு வாசலில்... சாய்வாக தோட்டத்தை நோக்கி அமைக்கப்பட்டிருந்த சிமிண்ட் பாதையில் திருப்பினார்...

எதிரே வந்து கொண்டிருந்த விசாலம்... மரியாதையுடன் ஒதுங்கி நின்றாள்... அவளைப் பார்த்துப் பரிவுடன் சிரித்த அனுபமா...

"என்ன விசாலம்... உன் பிள்ளைகளை ஸ்கூலுக்கு அனுப்பிவிட்டாயா...?" என்று கேட்டாள்.

"அனுப்பி விட்டுத்தான் வருகிறேன்ம்மா... மதியத்திற்கு என்ன சமையல் செய்ய...?"

"உனக்குத் தோன்றியதைச் செய்..."

அவர்கள் பேச்சில் தலையிடாமல்... நின்றிருந்த சுந்தரம் மெதுவாக சக்கர நாற்காலியை உருட்ட ஆரம்பிக்க... விசாலம் வீட்டிற்குள் சென்று... மாடிப்படி ஏறினாள்.

"எங்கேடி போகிற...?" எதிரே வந்த கோவிந்தன் கேட்டான்...

"ஐயாவும்... அம்மாவும்... சாப்பிட்டு விட்டு வைத்திருக்கும் பாத்திரங்களை எடுத்துட்டு வரப்போகிறேன்..."

"இப்பத்தானே அவங்களுக்கு சாப்பாடு கொடுத்து விட்டு வருகிறேன்... அதுக்குள்ளேயா சாப்பிட்டு விட்டாங்க...?"

"உன்னைப் போலன்னு நினைச்சயா...? ஐயா... அம்மாவை சக்கர நாற்காலியில் உட்காரவைத்து... தள்ளிக் கொண்டு... தோட்டத்துப் பக்கம்... இப்போதுதான் போகிறார்..."

"வயசான பின்னாலும்... காதல் குறையாமல் வாழ்கிற மகராசங்கடி... இவங்க... இந்த வீட்டில்... இவங்க நிழலில் வாழ... நாம் கொடுத்து வைத்திருக்கனும்..."

"நிஜம்தான்ய்யா..."

விசாலம்... மாடிப்படியில் ஏற ஆரம்பிக்க... கோவிந்தன் வாசல்பக்கம் சென்று காரைத் துடைக்க ஆரம்பித்தான்...

இளம் வெயில் ஏற ஆரம்பித்திருந்த அந்த வேளையில்... அடர்ந்த அந்தப் பூமரத்தின் அடியில் சக்கர நாற்காலியை நிறுத்திவிட்டு...மனைவியின் இடுப்பில் கைகொடுத்துத் தூக்கி... அங்கேயிருந்த சாய்வான சிமிண்ட் பெஞ்சில் அமர வைத்தார் சுந்தரம்...

"என்னால் கொஞ்ச தூரம் நடக்க முடியும்ங்க..."



"தனியாய் நடந்து விடுவாயா...?"

"தோள் கொடுக்க நீங்கள் வரமாட்டிங்களா..."

அருகில் அமர்ந்திருந்த கணவரின் தோள் சாய்ந்து இதைக் கேட்டாள் அனுபமா... அவர் நெகிழ்ந்து போனார்...

"நீ சாய்ந்து கொள்ளத்தாண்டி இந்தத் தோள்கள் இருக்கு..."

"அப்புறம் ஏன்... என்னை நடக்க விடமாட்டேன் கறீங்க..."

பதில் சொல்லாமல்... புல்வெளியை வெறித்தார் சுந்தரம்... அவரது மனக் கண்ணில்... முதன் முதலில்.. அனுபமாவைப் பார்த்தபோது... அவள் புள்ளி மான் போல்... தரையில் கால் பாவாமல்... துள்ளிக் குதித்து ஓடி வந்த தோற்றம் தோன்றியது...

"எப்படியிருந்தவள் நீ அனு... ஒரு இடத்தில் ஒரு நிமிடம் கூட... அடங்கி நிற்க மாட்டாயே... நடனமாடுவதுபோல... உன் கால்கள் தரையில் சதிராடுமே... நீ நடக்க முடியாமல் என் தோள்பற்றி... அடிமேல் அடியெடுத்து வைக்கும் கொடுமையை என்னால்... எப்படிக் கண்கொண்டு பார்க்க முடியும்...?"

"உங்களிடம் அன்றைக்கும் சரி... இன்றைக்கும் சரி... நான் ரசிக்கும் விசயம் இதுதான்..."

"எது...?"

"இப்படி... அமைதியாய் யோசிப்பது... உங்கள் மனதில் என்ன இருக்கிறதென்று... யாராலும் கண்டு பிடிக்க முடியாது... ஏன்... இத்தனை வருடங்கள் உங்களுடன் சேர்ந்து வாழும் என்னாலேயே உங்கள் மனதில் என்ன இருக்கிறதென்று முழுமையாகத் தெரிந்து கொள்ள முடியவில்லையே..."

அனுபமா... அவரது விரலோடு விரல் கோர்த்து... இதைச் சொன்னாள்... சுந்தரத்திற்கு 'சுருக்'கென்று மனம் வலித்தது... அவர்... ஆறாத மன ரணத்துடன்... மௌனமாக மனைவியைப் பார்த்தார்... அவர் மனம் புலம்பியது...

"வேண்டாம் அனு... என் மன ஆழத்தைக் கண்டு கொள்ள முயலாதே... அது உனக்குக் கடைசிவரை தெரியவே... வேண்டாம்... தெரிந்தால்... என்னை நீ வெறுத்து விடுவாய்... என்னால் அதைத் தாங்கிக் கொள்ள முடியாது... ஒற்றுமையான காதல் ஜோடிகளின் உன்னதமான வாழ்வை... நாம் வாழ்ந்து கொண்டிருப்பதாய்... இந்த ஊரும்... உலகமும் சொல்கிறது... அது நிலைக்க வேண்டுமானால் என் மனதில் புதைந்திருக்கும் ரகசியங்களை நீ அறியவே கூடாது..."

"எனக்கு சோர்ந்து போய் வருதுங்க..."

"அதிகமாக அலட்டிக் கொண்டால் இப்படித் தான்... வா... வந்து... கொஞ்ச நேரம் தூங்கு... சரியாகப் போய்விடும்..."



மீண்டும் மனைவியைத் தூக்கி சக்கர நாற்காலியில் உட்கார வைத்து... அவர் தள்ள... அனுபமா மெல்லப் பாடினாள்...

*"பொன்னை விரும்பும் பூமியிலே...*
*என்னை விரும்பும் ஓர் உயிரே...*
*புதையல் தேடி... அலையும் உலகில்...*
*இதயம் தேடும் என்னுயிரே..."*

சுந்தரத்தின் இதயம் ஆடியது... அவருடைய அருமைக் காதலி... ஆருயிர் மனைவி...அவருக்கு இரண்டு மகன்களையும்... ஒரு மகளையும் பெற்றெடுத்து தந்தவள்... அவரை நினைத்து மனம் உருகிப் பாடுகிறாள்...

*"பறந்து செல்லும் பறவையைக் கேட்டேன்...*
*பாடிச் செல்லும் காற்றையும் கேட்டேன்.*
*அலையும் நெஞ்சை அவரிடம் சொன்னேன்...*
*அழைத்து வந்தார்... என்னிடம் உன்னை..."*

அனுபாமா... சக்கர நாற்காலியைத் தள்ளிக் கொண்டிருந்த சுந்தரத்தின் முகத்தை... அண்ணாந்து பார்த்துப் பாடினாள்... அவளது கை காதலுடன்... சக்கர நாற்காலியை பற்றிக் கொண்டிருந்த... சுந்தரத்தின் கையை பற்றிக் கொண்டது...

*"இந்த உறவும்... இந்த உணர்வும்...*
*என்றும் வேண்டும் - என்னுயிரே..."*

அறுபதில் இருந்த அனுபமா... எழுபத்தியொரு வயது சுந்தரத்திடம்... என்னவோ... ஆயிரம் கோடி

ஆண்டுகள் வாழப் போவது போலவும்... அத்தனை ஆண்டுகளிலும்... அவர்... அவருடைய அன்பை... இப்போது போலவே... எப்போதும் குறையாமல் அள்ளித்தரவேண்டும்... என்று வேண்டிக் கொண்டு பாடியதைப் போலிருந்தது... அவளுடைய பாட்டு...

அனுபமா நல்ல பாடகி... இசை ஞானம் உள்ளவள்... அவளைப் பாடவைத்துக் கேட்பதில் சுந்தரத்திற்கு தனி ஆர்வம் உண்டு... அப்படியொரு நாள் அவள் பாட... அவர் கேட்டுக் கொண்டிருப்பதைப் பார்த்து... அவர்களின் மூத்த மகன் முகுந்தனின் மனைவி நீபா... கணவனிடம் அவர்களின் காதுபடக் கூறினாள்.

"உங்க அப்பாவுக்கும்... அம்மாவுக்கும்... இப்போது என்ன வயதா திரும்பிவிட்டது...? கண்ணதாசன் கூட... ஐம்பதிலும் ஆசை வரும்ன்னு தான் பாடியிருக்கிறார்... எழுபதிலும் ஆசை வரும்ன்னு பாடவில்லை...."

அதைக் கேட்ட அனுபமா துடித்துப் போய் விட்டாள்.... நீபா சொன்னதைவிட... அதைக் கேட்ட முகுந்தன்... மனைவியைக் கண்டிக்காதது தான் அவளைப் பாதித்தது...

மருமகள் சொன்னதைத் துளிக் கூட சட்டை செய்யாமல்... சுந்தரம்... மனைவியை சமாதானப் படுத்தியதுதான்.... அவளுக்கு ஆச்சரியமாக இருந்தது.



"அவள் என்ன வார்த்தை சொல்லிவிட்டாள்...?"

"யாரைப் பார்த்துச் சொன்னாள்...? புருசன்... பெண்டாட்டியைப் பார்த்துத்தானே சொன்னாள்... சொன்னால் சொல்லிவிட்டுப் போகட்டுமே..."

"உங்களைப் போல் என்னால் இதை எளிதாக எடுத்துக் கொள்ள முடியாது... என் மனம் பதறுகிறது..."

"எதற்குப் பதறவேண்டும்? போடி பைத்தியம்... ஐம்பதில்தான் ஆசை வரவேண்டுமா...? எழுபதில் வரக்கூடாதா...? நூறு வயதானாலும் - உன் மேலிருக்கும் என் காதல் வற்றாது..."

"மாமனார்... மாமியார் என்ற மரியாதை வேண்டாமா...?"

"அதை அவளாக கொடுக்க வேண்டும்... நாம் கேட்டு வாங்கக் கூடாது... ஒன்றை மனதில் வைத்துக் கொள் அனு... அவளுக்கு அடி மனதில் நம்மேல் பொறாமை இருக்கலாம்..."

"எதனால் பொறாமைப் படவேண்டும்...?"

"நம் வயதில் நம் முகுந்தன்... நான் உன் மேல் காட்டும் காதலை... அவள் மேல் காட்டுவானா... என்ற சந்தேகம் வந்திருக்கலாம்..."

"அடக்கடவுளே... என் மகன் அவளை நன்றாகத் தானே வைத்துக் கொள்கிறான்..."

"இருந்தாலும் அனு... இதை நான் மனதில் வைத்துக் கொள்கிறேன்... எனக்கு என்னவோ... நம்

முத்த மருமகள் வேண்டுமென்றே நம்மிடம் வம்பு வளர்ப்பது போல் தோன்றுகிறது... இதற்கு கட்டாயம் வேறு ஏதாவது காரணம் இருக்க வேண்டும்...''

சுந்தரம் யூகித்தது சரியாக இருந்தது... நீபாவின் திட்டம் ஒருநாள் வெளிவந்தது... ஆனால்...அதற்கு முன் அனுபமா சின்ன மருமகளின் மனஸ்தாபத் திற்கும் ஆளாக நேரிட்டது...

## 4

அனுபமாவின் இளைய மகன் வைகுந்த் தாயின் மேல் அதிகப் பாசம் கொண்டவன்... அதனாலேயே நீபாவைப் போல் கணவனிடமே அவனுடைய தாய்... தந்தையரைப் பற்றிக் கேலிபேச வைகுந்தின் மனைவி ரேகாவிற்கு தைரியம் வரவில்லை.

எனவே கணவன் இல்லாத நேரம் பார்த்து... தன் கை வரிசையை மாமியாரிடம் காட்டினாள் அவள்...

''அத்தை.., நேற்றைக்கு என் அம்மா... உங்க ரூமிற்கு வந்திருந்தாங்களாமே...''

''ஆமாம்... ரேகா...''

''நீங்க அவங்களிடமே முகம் கொடுத்துப் பேசவில்லையாமே...''



''அப்படியெல்லாம் இல்லையேம்மா... நான் நன்றாகத்தான் பேசினேன்...''

''என் அம்மா என்னிடம் பொய் சொல்வாங்களா... நீங்கள் என்ன... என் அம்மாவிற்கு பொய்காரின்னு பட்டம் கட்டுகிறீங்களா...?''

''ஐயையோ... அப்படியெல்லாம் இல்லையம்மா... நீயாக எதையாவது கற்பனை பண்ணிக்கொண்டு பேசாதே...''

''இது கடவுளுக்கே அடுக்காது அத்தை...''

''எதும்மா...?''

''என்னை பைத்தியக்காரின்னு நீங்கள் சொல்வது...''

''ஐயையோ... நான் எப்போதும்மா அப்படிச் சொன்னேன்...?''

''இப்போது நானாக கற்பனை பண்ணிக் கொண்டு... பினாத்துகிறேன்னு நீங்கள் சொல்ல வில்லையா...? இதுக்கு என்ன அர்த்தம்...?''

''நீ சொல்வது போல் அர்த்தம் இல்லைம்மா...''

''என் அம்மா பொய்காரி... நான் பைத்தியக்காரி... இன்னும் என்னையும்... என் வீட்டினரையும் என்ன வெல்லாம் சொல்லக் காத்திருக்கிறீங்களோ...''

ரேகா அத்துடன் அந்தப் பிரச்னையை விடாமல்... மாலையில் ஹாலில் பஞ்சாயத்துக் கூட்டி நியாயம் கேட்க... அப்போதுதான் அலுவலகத்திலிருந்து...

அலுத்துக் களைத்துப் போய்... திரும்பியிருந்த வைகுந்த்... மனைவியின் கன்னத்தில் ஓங்கி ஒரு அறை விட்டான்...

''ஏண்டி... எவ்வளவு தைரியமிருந்தால்... என் முன்னாலேயே என் அம்மாவைக் குறை சொல்வாய்...? பேச வாயில்லாமல் செய்து விடுவேன்... பார்த்து நடந்துகொள்...''

''ஐயோ... ஐயோ... இந்த அறியாயத்தைக் கேட்பாரில்லையா... காலம் போன கடைசியில்... வயசானதுகள் எல்லாம் கொஞ்சி... குழாவிக் கொண்டு... வாழ வேண்டிய வாலிப வயசில் இருக்கிற எங்களைப் பிரிக்கப் பார்க்குதுகளே...''

''அடித்துப் பல்லைக் கழட்டி விடுவேன் ராஸ்கல்... இப்படி அநாகரிகமாய் பேச... எங்கே கற்றுக் கொண்டாய்...?''

''என் வீட்டில்... எங்கள் கண்ணுக்கு எதிரில்... என் அப்பாவின் பக்கத்தில் கூட அம்மா உட்கார மாட்டாங்க... அவங்க நாகரிகமான மனிதர்கள்... அங்கே எனக்கு நாகரிகமாய் பேச வந்தது... இங்கேதான்... எல்லாமே அநாகரிகமாய் இருக்குதே... இங்கே அநாகரிகமாகத்தானே பேச வருகிறது...?''

''நீ திருந்த மாட்டாய்டி... உனக்கு இந்த வீட்டில் இடமில்லை... உன் அப்பா வீட்டிற்கு ஓடிப்போ...''

''நீங்க இருக்கச் சொன்னாலும் யார் இங்கே இருக்கப்போகிறது... நான் போகிறேன்...''



தயாராக வைத்திருந்த பெட்டியைத் தூக்கிக் கொண்டு ரேகா நடக்க... வைகுந்த் அவளது விழிகளுக்குள் பார்த்துக் கொண்டு கேள்வி கேட்டான்...

''ஸோ... நீ வெளியேற ரெடியாய்... பெட்டியை கட்டி வைத்துக் கொண்டுதான் சண்டையை ஆரம்பித்திருக்கிறாய்... ஆனால் ரேகா... உனக்கு இவ்வளவு புத்திசாலித்தனம் திடீரென்று எங்கேயிருந்து வந்தது...? நீ இப்படியெல்லாம் பேசுகிற ஆள் இல்லையே... யார் சொல்லிக் கொடுத்து... இதையெல்லாம் நீ செய்கிறாய்...?''

அது நேரம் வரை நடப்பதை... உதடுகளின் ஓரமாக ஒதுக்கி வைத்திருந்த விசமச் சிரிப்புடன் கவனித்துக் கொண்டிருந்த நீபாவிற்கு ரோசம் வந்துவிட்டது... அவள் கணவனை... முழங்கையில் இடித்து உஷார் படுத்தினாள்... அவன் புருவங்களை உயர்த்தி தம்பியைப் பார்த்தான்...

''வைகுந்த்... உன் மனைவியைத் திட்டுவது உன் சொந்த விசயம்...''

''தெரிந்தால் சரி...''

''ஆனால்... தேவையில்லாமல்... அடுத்தவர்கள் மேல் வீண்பழியைப் போடாதே...''

''சொந்த புத்தியில் இவள் இப்படிப் பேசவில்லை... இதைச் செய்யவில்லை... சொல் புத்தியைக் கேட்டுக் கொண்டு ஆடுகிறாள்... அதைக் கண்டிக்கிறேன்... உனக்கு இதில் என்ன வந்தது...?''

"சொல் புத்தி... சொல் புத்தின்னா... யார் உன் மனைவிக்கு சொல்லிக் கொடுத்தது...?"

"ஏன்... அது உனக்குத் தெரியாதா...?"

"தெரியாததால்தானே கேட்கிறேன்..."

"அடேங்கப்பா... உனக்குத் தெரியவில்லையா...? இது அதிசயம்தான்... தெரியாவிட்டால் பரவாயில்லை... அண்ணியிடம் கேட்டுத் தெரிந்து கொள்..."

"வைகுந்த... அண்ணியை ஏன் இந்தப் பேச்சில் இழுக்கிறாய்?"

"அவங்க ஏன் தேவையில்லாமல் என் வொய்ப் மனதைப் போட்டுக் குழப்புகிறாங்க...?"

"உன் வொய்பிற்கு சுயபுத்தி இல்லையா...? நீபா சொல்லித்தான்... உன் மனைவிக்கு நல்லது கெட்டது தெரியனுமா..? அவள் படித்த பெண்...அறிவாளி... அவளுக்குத் தெரியும்டா... எந்த நேரம் என்ன செய்யனும்கிறது..."

வைகுந்த் திரும்பி முகுந்தனைப் பார்த்த பார்வையில் அனல் பறந்தது...

"ச்சே... நீயெல்லாம் என் கூடப் பிறந்தவனா...? அம்மாவின் வயிற்றில்தான் நீயும் பிறந்தாயா...?"

"அதிகமாய் பேசாதே வைகுந்த்..."

"உன்னிடம் குறைவாகப் பேசுவது கூடத் தவறுடா..."



"அப்படி நான் என்னடா குற்றம் செய்து விட்டேன்..."

"பெண்டாட்டியை அடக்கத் தெரியாமல் இருப்பதைக் கூட மன்னித்துவிடலாம்... அவளுடைய கைப்பாவையாய் இருப்பதை ஒருபோதும் மன்னிக்க முடியாது..."

"இதோ பாருங்க... நீங்க என்ன வேண்டுமானாலும் பேசுங்க... நீங்க எனக்குத் தாலி கட்டிய ஹஸ்பெண்ட்... கழுத்தை நீட்டிவிட்ட பாவத்திற்காக நான் பொறுத்துப் போகிறேன்... ஆனால் என்னை எப்படி உங்கள் தம்பி குற்றம் சாட்டிப் பேசலாம்...? அண்ணி என்கிற மரியாதை வேண்டாமா...?"

"ஓஹ்ஹோ... நீங்கள் மட்டும் 'அண்ணி' என்கிற பதவிக்கு மரியாதையை எதிர்பார்ப்பீங்க... ஆனால்... என் அம்மாவிற்கு மட்டும், மாமியார்...! என்கிற மரியாதையை கொடுக்க மறுப்பீங்க... இது என்னங்க புது நியாயமாய் இருக்கு...? ஆமாம்டா... முகுந்தா... அது என்ன... அண்ணியார் உனக்கு கழுத்தை நீட்டியது பெரிய பாவம்ன்னு சொல்கிறாங்க... நீயும் அதைக் கேட்டுக் கொண்டு நிற்கிற... இதையெல்லாம் கண்டு கொள்ளவே மாட்டாயா...?"

"என்னைப் பேசுவதோடு நிறுத்திக் கொள் வைகுந்த்... உன் அண்ணியைப் பேசாதே..."

"அதே போல்... அவங்களும் உன்னோடு பேசுவதோடு நிறுத்திக் கொண்டிருக்கனும்... தேவையில்லாமல் அம்மாவைப் பேசியிருக்கக்

கூடாது... என் பெண்டாட்டியை தூண்டி விட்டிருக்கக் கூடாது..."

"இது பெண்கள் பிரச்சனை... நீயேன் டென்சன் ஆகிறாய்...?"

"அடப்பாவி... அவங்க நம்மைப் பெற்ற தாய்டா..."

அண்ணனும்... தம்பியும் வழக்கடித்துக் கொண்டிருக்க... நேரம் காலம் தெரியாமல் நீபா... சத்தமாக முணுமுணுத்து வைத்தாள்...

"நாங்க மட்டும்... பேய்ன்னா சொன்னோம்..."

அவ்வளவுதான்... வைகுந்த் ஆவேசத்துடன் சுட்டு விரலை உயர்த்திக் காட்டி... நீபாவை எச்சரித்தான்...

"அண்ணி ஜாக்கிரதை... இனி ஒருவார்த்தை இது போல நீங்கள் பேசினால்... நான் சும்மாயிருக்க மாட்டேன்..."

கிடைத்தது சாக்கென்று நீபா... பயந்து போனவள் போல் தன் கணவனின் பின்னால் போய் அவனை வைகுந்தின் பக்கம் தள்ளி விட்டாள்..."

"பார்த்தீங்களா... உங்க கண் முன்னாடியே... உங்க தம்பி... என்னை அடிக்க வருவதை... இனியும் இந்த வீட்டில் நான் இருந்தால்... என்னவெல்லாம் நடக்குமோ...? நான் இப்போதே என் பிறந்த வீட்டிற்குப் போகிறேன்..."

மனைவியின் சொற்களில் வீரியம் பெற்ற முகுந்தன்... வைகுந்தின் மேல் பாய... இருவரும் கட்டிப்



புரண்டார்கள்... வெளியே போயிருந்த சுந்தரம் அப்போதுதான் வீட்டுக்குள் வர... வாசலிலேயே அவருக்கு அனைத்துத் தகவல்களையும் சொல்லி விட்டான் கோவிந்தன்... அதைக் கேட்ட சுந்தரம்...

"அனுபமா எங்கே...?" என்றுதான் முதலில் கேட்டார்..."

"அவங்க ரூமை விட்டு எப்படி வெளியே வரமுடியும் ஐயா..."

"அந்த மட்டிலும் பிழைத்தேன்..."

சுந்தரம்.. வேகமாக வீட்டிற்குள் போய்... மகன்கள் இருவரையும் பிரித்து நிறுத்தினார்...

"முகுந்த்... வைகுந்த்... இதுதான் நீங்கள் கற்றுக் கொண்ட பண்பாடா...? நான் நன்றாகத்தானேடா உங்களை வளர்த்தேன்...? அண்ணனும்... தம்பியும் அடித்துக் கொள்வது வேறு எந்த வீட்டிலும் நடக்கலாம்... நம் வீட்டில் நடக்கலாமா...?"

"அப்பா... இவனைப் பற்றி உங்களுக்குத் தெரியாது... இவன் பெண்டாட்டி சொல்லைக் கேட்டுக் கொண்டு ஆடும் பிறவி..."

"வைகுந்த்... கன்ட்ரோல் யுவர்செல்ப்... முகுந்த்... இங்கே என்ன நடக்கிறது...?"

"அப்பா... ரேகாவிற்கும்... அம்மாவிற்கும் ஏதோ பிரச்னை... அவள் கோபித்துக் கொண்டு...அவளுடைய அம்மா வீட்டிற்குப் போகிறாள்.... அதற்கு வைகுந்த்... நீபாவின் மேல் குற்றம் சொல்கிறான்..."

"வைகுந்த்... இது நிஜமா...?"

"அது எதனால் என்றால் அப்பா...?"

"விளக்கம் வேண்டாம் வைகுந்த்... நீ சொல்வது உண்மையோ... உண்மையில்லையோ... எனக்குத் தெரியாது... அது எதுவாக வேண்டுமானாலும் இருந்து விட்டுப் போகட்டும்... ஆனால்... அதற்காக நீ உன் அண்ணியை குற்றம் சாட்டுவது தவறு..."

"அவங்க மட்டும் அம்மாவைக் குற்றம் சொல்லலாமா...?"

"கூடாதுதான்... ஆனால் அதைக் கேட்க வேண்டியது யார்...? உன் அண்ணன்...."

"அவன் கேட்க மாட்டான் அப்பா..."

"அப்படியானால் நாம் விலகி நிற்போம்..."

"அப்பா..."

"முகுந்த்... அண்ணியென்கிற மரியாதை இல்லாமல் வைகுந்த் பேசியதை நான் சரியென்று ஒருபோதும் சொல்ல மாட்டேன்... அதே நேரத்தில் நீபாவிற்கு ஏனோ... உன் அம்மாவின் மேல் விரோத மனப்பான்மை தோன்றிவிட்டது... அதனால் வீட்டின் பிரச்னைகள் ஆரம்பித்துவிட்டன... இதை வளர விட என்னால் முடியாது..."

சுந்தரம் ஒரு முடிவை எடுத்து விட்டால்... அதை நிறைவேற்றியே தீருவார் என்பது... அனைவரும் அறிந்த ஒன்று...



# 5

என்னதான் மனைவியின் மேல் மையல் என்றாலும்... முகுந்தன்... சுந்தரத்தின் வளர்ப்பு... தகப்பனின் கண்டிப்பை உணர்ந்தவன் சங்கடத்துடன் தந்தையை ஏறிட்டான்...

"அப்பா.. நீபா என்ன பீல் பண்ணுகிறாள்ன்னா..."

"ம்ம்... சொல்லு..."

"அம்மாவுக்கோ நடக்க முடியவில்லை..."

"அதனால்..."

"அவங்களுக்காக... வீண் செலவு செய்து... மாடியிலிருந்து கீழே வர லிப்ட் வைக்காவிட்டால் என்ன என்று கேட்கிறாள்...?"

"வீண் செலவா...? ஓ..! அது சரி முகுந்த்... அந்த வீண் செலவைச் செய்யச் சொல்லி உன்னை நான் கேட்டேனா... ஐ மீன்... உன் சம்பாத்தியத்தையோ... இல்லை... உன் மனைவியின் பிறந்தவீட்டுச் சீதனத்தையோ நான் கேட்டேனா...?"

"இது இரண்டும் இல்லாவிட்டாலும் செலவாவது... நம்வீட்டுப் பணம்தானே அப்பா..."

''நம்!' இந்த ஒற்றுமையை குடும்ப ஒற்றுமையில் காட்டு முகுந்த்... பணத்தின் மேலிருக்கும் உன் உரிமையில் காட்டாதே...''

''இந்த வீட்டுப் பணத்தில் எனக்கு உரிமை யில்லையா...?''

''முதலில் இந்த வீடே உனக்கு உரிமையில்லாத ஒன்றுதான்... அதை நீ முதலில் புரிந்து கொள்...''

''அப்பா...''

''பரம்பரைச் சொத்தில்தான் நீ உரிமை கொண்டாட முடியும்... என் சுய சம்பாத்தியத்தில் நீ உரிமை கொண்டாட முடியாது...''

''அனுபமா என் மனைவி... உனக்குத் தகப்பன் ஆவதற்கு முன்னாலேயே... அவளுக்கு நான் கணவன் ஆகிவிட்டேன்...''

''அதற்காக... எங்களுக்கு எதுவுமே இல்லை யென்று சொல்லி விடுவீங்களா...?''

''இல்லை... நான் அப்படிச் சொல்லப் போவது இல்லை... முகுந்த்... நான் பரம்பரைப் பணக்காரன்... என் அப்பா... அதுதான் உன் தாத்தா... இரும்பு வியாபாரம்தான் பண்ணிக் கொண்டிருந்தார்... நான் பொறுப்புக்கு வந்தபோது... என் பரம்பரைப் பணத்தில் குளிர் காய எனக்கு விருப்பமில்லை... என் அப்பாவிடம் அறுபது லட்சம் கடன் கேட்டேன்... தனியாக எக்ஸ்போர்ட் கம்பெனியை ஆரம்பித்தேன்... என் அப்பாவிடம் வாங்கிய பணத்தை வட்டியுடன்...



நன்றாகக் கவனி முகுந்த்... வட்டியுடன் திருப்பிக் கொடுத்தேன்... அந்தக் கம்பெனி முழுக்க முழுக்க... என் சுய சம்பாத்தியம்...''

முகுந்தனின் முகத்தில் ஈயாடவில்லை...

''எக்ஸ்போர்ட் கம்பெனிக்கு அடுத்து... டிபார்ட்மென்டல் ஸ்டோர் ஒன்றை ஆரம்பித்தேன்... இந்த தஞ்சாவூர்... பழமையான சுற்றுலா ஸ்பாட்... அதனால்... கலைப் பொருள்கள் விற்கும் கடை யொன்றையும் ஆரம்பித்தேன்... அதில் கிடைக்கும் தஞ்சாவூர் பெயிண்டிங்கிற்கு வெளிநாட்டில் ஏகப்பட்ட டிமான்ட் இன்றைக்கும் உண்டு...''

முகுந்தனின் தலை லேசாய் கவிழ்ந்தது...

''இது அத்தனைக்கும் மேலாக... இந்த தஞ்சாவூரில் இருக்கும் குறிப்பிடத்தக்க இன்ஜினியரிங் காலேஜ்களில் ஒன்றான 'எஸ்.எஸ்' இன்ஜினியரிங் காலேஜைக் கட்டினேன்... என் அப்பா சோமேஸ்வரனின் பெயரையும்... என் பெயரையும் இணைத்துத்தான் அந்த 'எஸ். எஸ்' என்ற பெயரை வைத்தேன்... அன்றைக்கு... பெற்றவனுக்கு பெயர் தேடித் தந்துவிட்டேன்னு... என் அப்பா அவ்வளவு பெருமைப் பட்டார்... சந்தோசப்பட்டார்... அந்தப் பெருமையையும் சந்தோசத்தையும்... நீ எனக்குக் கொடுத்திருந்தா யானால்... நீ என் மகன் என்று சொல்லிக் கொள்வதில் அர்த்தமுண்டு... ஆனால் நீ...?''

சுந்தரம் பேச்சை முடிக்காமல்... கைகளை விரித்து தோள்களைக் குலுக்க... இப்போது முகுந்தனின் தலை முற்றிலும் கவிழ்ந்திருந்தது...

"உன்னை நம் என்ஜினியரிங் காலேஜிலேயே சேர்த்துவிட்டேன்... ஏதோ படித்தாய்... என் செல்வாக்கை உபயோகப்படுத்தி ஒரு வேலையும் வாங்கிக் கொடுத்து... நீ விரும்பிய பெண்ணையே கல்யாணமும் பண்ணி வைத்தேன்... ஆனால் கல்யாணம் வரைக்கும் ஒழுங்காக வேலைக்குப் போய் கொண்டிருந்த நீ... கல்யாணத்திற்கு அப்புறம்... வேலைக்குப் போக மறுத்தாய்... காரணம் கேட்டபோது... 'நம் கம்பெனி இருக்க... நான் ஏன் இன்னொருவரிடம் கை கட்டி நிற்கவேண்டும்' என்று கேட்டாய்... அது நீயாக கேட்ட விசயமில்லை..."

அதுவரை பல்லைக் கடித்துக் கொண்டு பொறுமை காக்க முயன்று கொண்டிருந்த நீபா... அனல் பார்வையுடன் நிமிர்ந்தாள்..

"முகுந்தன்... உங்க அப்பா... என்னைத்தான் ஜாடையாக சொல்கிறார்... நான் தூண்டி விட்டு நீங்கள் கேட்டதாக நினைக்கிறார் இது சரியில்லை..."

சுந்தரத்தின் கண்களில் தீப்பொறி பறந்தது... மகனை சுட்டெரிப்பது போல் அவர் பார்க்க... அவன் மனைவியிடம் தாழ்ந்த குரலில் கெஞ்சினான்...

"நீபா... பேசாமல் இரு..."



"நான் ஏன் பேசாமல் இருக்கவேண்டும்...? உங்க அப்பா என்னை மறைமுகமாய் திட்டுவார்... உங்கள் தம்பி நேரடியாய் திட்டுவார்... இதையெல்லாம் கேட்டுக் கொண்டு பொறுமையாய்... இங்கே இருக்க என்னால் முடியாது..."

"இருக்காதே... போய் விடு..." என்றான் முகுந்தன் எரிச்சலுடன்...

அவனும்தான் எத்தனை முறை பொறுத்துப் போவான்...? எவ்வளவு தூரம் தாழ்ந்து போவான்...? பொறுமையிழந்தவனாய் அவன் பேசவும்... நீபா... தன் பெட்டியைக் கட்டக் கிளம்பி விட்டாள்...

தன் கண்களை ஒரு முறை மூடித்திறந்த சுந்தரம்... தன் மகன்களைப் பார்த்தார்...

"முகுந்த்... நீ கேட்டதும் பேக்டரியின் பொறுப்பை உன்னிடம் கொடுத்தேன்..."

"ஆனால்.. எம்.டி. இன்னும் உங்கள் அப்பா தான்... நீங்கள் வெறும் ஜி.எம். தான்... மறந்து விடாதீங்க..."

பெட்டியைக் கட்டப்போன நீபா...அதை மறந்து... திரும்பி நின்று கணவனைப் பார்த்து இதைக் கூறினாள்.... அவள் அங்கே இல்லாததைப் போல... அவள் பேச்சை லட்சியம் செய்யாமல் தன் பேச்சைத் தொடர்ந்தார் சுந்தரம்.

"உன் தம்பியும் உன்னைப் போலவே... நம் காலேஜில் என்ஜினியரிங் படித்தான்... அவனுக்கு

கேம்பஸ் இன்டர்வியூவில் வேலை கிடைத்தது. ஆனால் உன் அம்மா... அவனைப் போக விட வில்லை... மூத்த பிள்ளைக்கு நம் கம்பெனியில் பொறுப்பை கொடுத்துவிட்டு... இளையவனை மட்டும்... வெளியே வேலைக்கு அனுப்புவதா என்று கேட்டாள்... அவனுக்கு எக்ஸ்போர்ட் கம்பெனியின் பொறுப்பைக் கொடுத்தேன்...''

''அங்கேயும்... என் கணவரைப் போல... உன் கணவரும் ஜி.எம். போஸ்டில்தான்இருக்கிறார் ரேகா... எம்.டி.யாக இல்லை... இதை மறந்து விடாதே...''

நீபா... ரேகாவிடம் கூற... பதில் சொல்ல வாய் திறந்த ரேகா... கணவனது முறைப்பைக் கண்டதும்... அவசரமாய் வாய் மூடிக் கொண்டாள்...

''நமக்கு தஞ்சாவூரில் நான்கு பங்களாக்கள் இருக்கின்றன முகுந்த்... அதில் இரண்டு பரம்பரையாய் வரும் நம் பூர்வீகச் சொத்துக்கள்... இரண்டு புதியதாக நான் கட்டியது... இது போக சென்னையிலேயும் ஒரு பங்களா உண்டு...இந்த வீட்டை... எனக்கும்... உன் அம்மாவிற்கும் கல்யாணம் நிச்சயமானவுடன்... அவளுக்காக நான் பார்த்துப் பார்த்துக் கட்டினேன்...''

''கேட்டுக்க ரேகா... இந்த வீடு வசந்த மாளிகையாம்...''

''நிச்சயமாக இந்த வீடு வசந்த மாளிகைதான் முகுந்த் இந்த வீட்டில் இருக்கும் ஒவ்வொரு செங்கல்லும்... என் காதலின் கதையைக் கூறும்... என் அனுவிற்கென்று நான் வடிவமைத்த அறைதான்



மாடியறை... அவள் விரும்பும் லைப்ரரியில் இருந்து... எல்லாவற்றையும் யோசித்துக் கட்டிய அறை அது... அவளின் கடைசி மூச்சு வரை... அவள் அங்குதான் இருப்பாள்...''

''அப்போ... அறைக்குள்ளேயே அடைந்துவிட வேண்டியதுதானே... வீட்டுக்குள் லிப்ட் வைப்பது ஓவரில்லையா ரேகா...''

''அண்ணா... உன் மனைவி எது சொல்ல வேண்டுமானாலும் உன்னிடம் சொல்லிக் கொள்ளட்டும்... என் பெண்டாட்டியைக் கூப்பிட்டுச் சொல்ல வேண்டாமென்று சொல்லு...''

''வைகுந்த்...''

''என்னால் தாங்க முடியவில்லைப்பா... இவன் பெண்டாட்டியால்... என் பெண்டாட்டியும் பாய்சன் ஆகி விட்டாள்.. ரேகா நல்ல பெண் அப்பா...''

கணவனின் வாயிலிருந்து வெளிப்பட்ட வார்த்தை களைக் கேட்டதும் ரேகா... ஆனந்த அதிர்ச்சியோடு அவனை நிமிர்ந்து பார்த்தாள்... அவள் விழிகள் கேட்டன....

என் மேல் இவ்வளவு நல்ல அபிப்ராயமா...?

'ஆமாம்...' என்பது போல் வைகுந்தின் விழிகள் மூடித் திறந்தன....

அவர்களின் அன்யோனிய சங்கேத உரை யாடலைக் காணாதவர் போல் கண்ட சுந்தரம்... மனத்திருப்தி கொண்டார்.

'அந்த மட்டிலும்... இளையவனுக்காவது... அவனைப் புரிந்து நேசிக்கும்... மனைவி கிடைத்திருக்கிறாள்...'

''முகுந்த்... என் அனு அறைக்குள் அடைந்து கிடக்க வேண்டிய அவசியமில்லை... இது அவள் வீடு... அவள் நினைத்தால் மாடியிலிருந்து கீழே வருவாள்... தோட்டத்தைச் சுற்றுவாள்... லிப்ட் என்னடா... அவளுக்காக ஒரு குட்டி விமானத்தையே வாங்க நான் உத்தேசித்து இருக்கிறேன்...''

'அடக்கடவுளே... லிப்டிற்கு பணம் செலவாகுதேயென்று கணக்குப் போட்டால்... பிளேன் வந்து இறங்கி விடும் போல இருக்கே....!' நீபா அவசரமாய் வாய் மூடிக் கொண்டாள்...

''வைகுந்த்...''

''அப்பா...''

''நாளைக்கு காலையில் நம் பேமிலி லாயரை வரச் சொல்லிவிடு... சென்னைக்கு போன் போட்டு... உன் தங்கை லாவண்யாவை... அவளுடைய கணவனுடன்... இன்றைக்கு இரவே கிளம்பிவிடச் சொல்... நாளைக் காலையில்... அவளும் இங்கே இருக்க வேண்டும்...''

''இது தேவையா அப்பா...''

''தேவைதான் வைகுந்த்.... உடைந்த கண்ணாடி என்றைக்குமே ஒட்டாது...''



''விரிசல் விழுந்த கண்ணாடியை விலக்கி வைக்கலாம்... என்னை ஏன்ப்பா தள்ளி வைக்கிறீர்கள்... நான் என்ன பாவம் பண்ணினேன்...?''

இளைய மகனை கட்டிக் கொண்ட சுந்தரத்தின் தோளை வைகுந்த் விட்ட கண்ணீர் நனைத்தது.

# 6

''தோளுக்கு மேல் வளர்ந்து விட்டால்... பெற்ற மகன்களைக் கூடத் தோழனாகத்தான் நினைக்க வேண்டும் வைகுந்த்... தாய்ப் பறவை குஞ்சுகளுக்கு பாதுகாப்பாய் தன் சிறகுகளைக் கொடுக்கும்... எது வரை...? குஞ்சுகள் வளர்ந்து... சிறகுகள் முளைக்கும் வரை... குஞ்சுகள் சிறகுகள் முளைத்து பறக்க ஆரம்பித்தவுடன்... அவை தனக்கென்று தனிக் கூட்டை உருவாக்கிக் கொள்ளத்தான் வேண்டும்...''

''எனக்குச் சிறகுகள் முளைக்கவேயில்லை என்று நினைத்துக் கொள்ளுங்கள் அப்பா... உங்களை விட்டுப் பிரிந்து... பறந்து போக உதவும் சிறகுகள் எனக்கு வேண்டாம்...''

''நீ உணர்ச்சி வசத்தில் பேசுகிறாய்... நீ தனி மனிதனல்ல... உன்னை நம்பி உன் மனைவி இருக்கிறாள்... நீ அவளுடைய உணர்வுகளை மதிக்க

வேண்டாமா...? அவளுக்கு அனுபமாவுடன் இருக்க விருப்பமில்லை..."

"ரேகா சொல்வார் பேச்சைக் கேட்டுக் கொண்டு ஆடுகிறாள் அப்பா... நான் எடுத்துச் சொன்னால் கேட்டுக் கொள்வாள்..."

"கட்டிக் கொடுத்த சோறும்... சொல்லிக் கொடுக்கும் சொல்லும் எத்தனை நாள் நிலைத்து நிற்கும் வைகுந்த... சுயசிந்தனை வேண்டாமா...? இப்போது நீ என் தோளில் சாய்ந்து... பிரிந்து போக மாட்டேனென்று சொல்லிக் கண்ணீர் வடிக்கிறாயே... இதே உணர்வு உன் மனைவிக்கு தானாய் வரவேண்டாமா...?"

"நாளடைவில் வந்து விடும் அப்பா..."

"உன் அம்மா நாள்களை எண்ணிக் கொண்டிருக்கிறாள் வைகுந்த் அவளது இறுதி நாள்களில் அவளுக்கு நிம்மதியைக் கொடு..."

"அப்பா..."

"உன் மனைவி அனுபமாவிடம் இன்று அதிகம் பேசிவிட்டாள்."

"இனி அதுபோல் நடக்காது அப்பா..."

"இன்றைக்கு நடந்தது நடந்ததுதானே.... இதை மாற்ற முடியுமா? உனக்குத் தெரியாது வைகுந்த்... உன் அம்மாவை நான் தங்கத்தட்டில் வைத்துத் தாங்கினேன்... பிள்ளைகளைப் பெற்றெடுத்ததினா



லேயே அந்தப் பிள்ளைகளைக் கல்யாணம் செய்து கொண்ட மருமகள்களுக்கு அவள் இளப்பமாகப் போய்விட்டாளா?"

வைகுந்த் திரும்பி ரேகாவைப் பார்த்த பார்வையில் அவள் நடுங்கிப் போய்விட்டாள்...

"முகுந்தனின் மனைவியும் சரி... உன் மனைவியும் சரி... ஒன்றை மிகச் சரியாக கணித்து வைத்திருக்கிறார்கள்... அதுதான் பெற்ற தாயின் பாசம் எதையும் சகித்துக் கொள்ளும் என்பது... அவர்கள் என்ன பேசினாலும்... உங்கள் இருவரின் முகத்திற்காக அனுபமா பொறுத்துக் கொண்டுபோய் விடுவாள் என்பது அவர்களின் கணக்கு... அதுதான் உண்மையும்கூட... இந்த வீட்டில் இப்போது அதுதான் நடந்து கொண்டிருக்கிறது... ஆனால்... என் உடம்பில் உயிர் இருக்கும் வரை என் அனுவை யாரும் இளப்பமாய் நினைக்கவோ... பேசவோ நான் விடமாட்டேன்..."

வைகுந்தின் கண்ணீர் வற்றியிருந்தது... இளைய மகனின் கன்னம் தட்டி... அவனைத் தூக்கி நிறுத்திய சுந்தரம்... லேசாக முறுவலித்தார்...

"முகுந்தனிடம் பாசம் வற்றிவிட்டது போல்... உன்னிடம் வற்றிவிடவில்லை... எங்களுக்கு இது போதும்..."

"ஆனால் அப்பா... பிரிவினை இப்போது வேண்டாமே..."

''இப்போது அது அவசியம் வைகுந்த்... என்றேனும் ஓர் நாளில் இது நடக்க வேண்டிய ஒன்று தானே... யாருக்காக நான் சம்பாதித்து சொத்து சேர்த்து வைத்திருக்கிறேன்? என் பிள்ளைகளுக்குத்தானே... என் காலத்திலேயே... அவற்றை இன்னார்க்கு இது என்று பிரித்துக் கொடுத்துவிட்டால்... எனக்கும் அது நிம்மதியைத் தரும்தானே...''

சுந்தரம் தீர்மானமாகச் சொல்லிவிட்டார்... அன்று இரவு அந்த வீட்டில்... யாருமே சரியாக உறங்கவில்லை... ஒவ்வொருவர் மனதிலும் ஒவ்வொரு விதமான எண்ணங்கள் ஓடிக் கொண்டிருந்தன.

''ஏங்க... உங்க அப்பா... நமக்கு எந்த வீட்டைக் கொடுப்பார்?''

''தெரியவில்லையே நீபா...''

''எதைக் கொடுத்தாலும் இந்த வீட்டுக்கு ஈடாகாது...''

''நீ இந்த ஆசையை இன்னும் விட வில்லையா...?''

''எப்படி விடமுடியும்...? வீடா இது...? உங்க அப்பா சொன்னது போல இது வசந்த மாளிகையாச்சே...''

''அதுக்கு இப்ப என்ன செய்யனும்கிற...?''

''எனக்கு ஒருநாள் ஒரு பொழுதாவது... உங்க அம்மாவின் பெட்ரூமை... நம் பெட்ரூம்மாகிக் கொள்ளனும்...''



''என் அப்பா... அம்மா காலம் வரை அது நடக்காது...''

''அப்படி எத்தனை நாள் அவர்கள் இருந்துவிடப் போகிறார்கள்...?''

இதைச் சொல்லி வாய் மூடுமுன்... கன்னத்தில்... முதல் முறையாக... 'பளார்...' என்ற ஒரு அறையை முகுந்தனிடமிருந்து வாங்கினாள் நீபா...

இதுவரை கடிந்து ஒரு சொல் சொல்லாதவன்... கை நீட்டி அடிக்கும் அளவிற்கு சென்றுவிடவும்... தன் தவறான பேச்சை எண்ணி... 'கப் சிப்' என்று வாய் மூடிக் கொண்டாள் அவள்...

''நானும் போனால் போகுது... போனால் போகுதுன்னு பார்த்தால் ஒரேயடியாய் நீ தலைக்கு மேலே ஏறுகிறாயே... என்னை யாருன்னு நினைத்தே... நான் அவங்க பெற்ற மகன்டி...''

நீபா அடங்கிப் போய் அவசரமாய் தூங்குவது போல் கண்களை மூடிக் கொண்டாள்...

**வைகுந்தின்** அறையிலோ... அவன் ரேகாவிடம் முகம்கொடுத்துக் கூடப் பேசவில்லை... முதன் முதலாய் கணவனின் புறக்கணிப்பைக் கண்ட ரேகா... கண்ணீருடன் அவனிடம் மன்னிப்புக் கேட்டு மன்றாடிப் பார்த்தாள். அவன் மனம் இறங்கவில்லை...

''நான் தெரியாமல் பேசி விட்டேன்ங்க..''

''இல்லைடி... இதனால் என் அம்மாவின் மனம் புண்படும் என்பதைத் தெரிந்தேதான் பேசினாய்.''

''இந்த அளவுக்கு இந்த விவகாரம் முற்றிவிடும் என்று எனக்குத் தெரியாமல் போச்சு...''

''சும்மா நடிக்காதேடி... பெட்டியை அடுக்கி... பிறந்த வீட்டிற்குப் போக ரெடியாக வைத்துவிட்டு... அதற்குக் காரணம் தேடி என் அம்மாவை வம்புக்கு இழுத்தவள்தானே நீ...''

''நீபாக்காதான்... நாம் இரண்டு பேரும் ஒற்றுமையாய் இருக்கனும்னு சொன்னாங்க...''

''வெட்கமாயில்லை இதைச் சொல்ல...? அறிவு கெட்டவளே... உனக்குச் சொல்லிக் கொடுத்துவிட்டு... அவங்க ஒன்றும் தெரியாதது போல் புருசனுக்கு பின்னால் ஒதுங்கி விடுவாங்க... மாட்டிக்கிட்டு கெட்ட பெயர் வாங்கியது யார்...? நீ தானே...''

''இது எனக்குத் தோன்றாமல் போய்விட்டதே...''

''எனக்கு என் அம்மான்னா உயிர்டி... என் மேல் கொஞ்சமாவது ஆசையிருந்திருந்தால்... என் அம்மாவின் மனம் நோக நீ பேசியிருப்பாயா...?''

''அப்படிச் சொல்லாதீங்க... நான் உங்கள் மேல்... உயிரை வைத்திருக்கிறேன்... நீபாக்காதான் சொன்னாங்க... நான் உங்கள் மேல் ஆசையாய் இருந்தால்... அதை நீங்கள் சட்டை செய்யாமல்... உங்கள் அம்மாவின்மேல் பாசமாய் இருக்கீங்கன்னு... அந்தப் பொறாமையில்தான் இப்படிச் செய்துவிட்டேன்..''

''பைத்தியக்காரி... என் அம்மாவின் மேல் நான் வைத்திருக்கும் பாசமும்... உன் மேல் வைத்திருக்கும்



ஆசையும் ஒன்றாடி? தாய்க்கும்... தாரத்திற்கும் இருக்கும் வித்தியாசம் தெரிய வேண்டாமா...? முட்டாள்...''

''நீங்கள் என்னை என்ன வேண்டுமானாலும் திட்டுங்கள்... ஆனால் வெறுத்து விடாதீங்க...''

வைகுந்த பதில் சொல்லாமல் விலகிப் படுத்துவிட்டான்... அவனுக்குத் தெரியும்... ரேகா குற்றமில்லாத பிள்ளை மனம் கொண்டவள் என்பது... ஆனால் அவள் அறியாமல் செய்தாலும்... சொல்வார் பேச்சைக் கேட்டு... சுய புத்தியில்லாமல் அனுபமாவின் மனதை புண்படுத்திவிட்டது பெரும் பிழையல்லவா...? நாளை இது தொடராமல் இருக்க வேண்டுமானால்... அவளுக்கு தண்டனை தரவேண்டியது அவசியமான ஒன்று.

அவனது புறக்கணிப்பை விட மிகப் பெரிய தண்டனை அவளுக்கு எதுவுமேயில்லை... என்பதை நன்கு அறிந்திருந்த வைகுந்த்... ரேகாவை புறக்கணித்தான்...

கத்தியெடுக்காமல் அறுவை சிகிச்சை செய்ய முடியாது... இதுவும் அதைப் போலத்தான்... ரேகாவை நல்வழிப்படுத்த... சிறிது நாள் அவளிடமிருந்து விலகியிருந்தாலே போதும் என்று வைகுந்த் முடிவு செய்திருந்தான்...

அதையறியாத ரேகா... இந்த விலகல் நிரந்தரமாகிவிடக் கூடாது என்ற பயத்தில்... விடியும் வரை அழுது கொண்டிருந்தாள்...

கண் மூடிப் படுத்திருந்தாலும் அனுபமாவின் மனம் அலைபாய்ந்து கொண்டிருந்ததை சுந்தரத்தால் உணர முடிந்தது... அவர் பரிவுடன் அனுபமாவின் நெற்றியை வருடினார்...

"தூங்கு அனு..."

"நான் தூங்கவில்லையென்று எப்படிக் கண்டு பிடித்தீங்க..."

"எனக்கு உன்னைத் தெரியாதா...?"

"தெரிந்தும் என் பிள்ளைகளை என்னிடமிருந்து பிரிக்கப் பார்க்கறீங்களே..."

"லாவண்யாவும் நீ பெற்ற மகள்தானே... அவளைப் பிரிந்து நீ இருக்கவில்லையா...?"

"பெண்களின் தலைவிதியே வேறு... அவங்க பிறந்த வீட்டை மறந்து... இன்னொருவர் வீட்டில் போய் வாழ வேண்டியவங்க..."

"நீயும் அப்படித்தான். விதியேன்னு என்னைக் கல்யாணம் பண்ணிக் கொண்டு வந்தாயா...?"

"பேச்சை மாற்றாதீங்க..."

"ஒன்றைப் புரிந்துகொள் அனு... நம் பிள்ளைகளுக்கு அவர்களுக்கு என்று... வாழ்க்கைத் துணை வந்துவிட்டது... நாம் விலகி நின்று கொள்வதுதான் நல்லது... நீபா வினயம் பிடித்தவள்...



ரேகா எடுப்பார் கைப்பிள்ளை... இவர்கள் இருவரையும் சேரவிட்டால்... வீட்டின் நிம்மதிபோய் விடும்... உன் பிள்ளைகளின் நிம்மதியும் போய் விடும்..."

"அப்படியா சொல்கிறீங்க..."

"ஆமாம்... இதுவே இவர்கள் இருவருக்கும் சொத்தை பிரித்துக் கொடுத்து தனித்தனியாய் வாழ்க்கையை அமைத்துக் கொடுத்துவிட்டால் ரேகாவை நீபா அணுகவிடாமல் வைகுந்த் பார்த்துக் கொள்வான்... ரேகாவிற்கும் சுயபுத்தி வரும். முகுந்தனும்... நீபாவை கண்டித்து வைப்பான்... சொத்து வந்துவிட்டால்... அவனுக்கும் அவளை அடக்கி வைக்கத் தோன்றும் இல்லையா...? அவளும் பணிந்து போவாள்..."

இதில் இத்தனை இருக்கிறதா என்று மனம் சமாதானமாகி... லேசாக விழி மூடினாள் அனுபமா.

# 7

ஹாலில் குழுமியிருந்த அனைவரும் அமைதியாக இருந்தனர்... அதிகாலையிலேயே கணவனுடன் வந்துவிட்ட லாவண்யா... தாயின் பக்கத்தில்... அவள் கைபிடித்து அமர்ந்திருந்தாள்... பிறந்த வீட்டின் சொத்துக்கள் பிரிக்கப்பட்டு... குடும்பம்

ஆளுக்கொரு திசையில் போகப் போகிறது என்ற வேதனை... அவள் முகத்தில் தெரிந்தது...

குடும்ப வக்கீல் கோதண்டராமன்... தான் தயாரித்துக் கொண்டு வந்திருந்த பத்திரங்களைக் காட்டி... சுந்தரத்திடம் ஆலோசனை கேட்டுக் கொண்டிருந்தார்...

முகுந்தன் குற்ற உணர்வில் குறுகிப் போய் நிற்க... வைகுந்த் அவனை வெறுப்புடன் முறைத்துக் கொண்டிருந்தான்...

எதையோ பேசுவதற்காக... ரேகாவின் அருகில் நீபா நகர்ந்து நிற்க... அவசரமாய் அவளிடமிருந்து விலகி... கணவனின் அருகில் போய் நின்று கொண்டாள் ரேகா...

மனைவியை ஒரு பார்வை பார்த்த வைகுந்தின் விழிகளில் கோபம் போய்விட்டதா என்ற இறைஞ்சல் பார்வை பார்த்தாள் ரேகா...

முகுந்தனின் விழிகள் நடந்ததைக் கவனித்து நீபாவை உறுத்துப் பார்க்க.. அவள் உதட்டைக் கடித்துக் கொண்டு பார்வையைத் திருப்பிக் கொண்டாள்.

எல்லோருக்கும் சூடாக காபியை கொடுத்துக் கொண்டிருந்த விசாலத்தின் முகத்தில் ஈயாட வில்லை... இங்கும் அங்கும் நடந்து கொண்டிருந்த கோவிந்தனின் முகத்தில் கவலைக்குறி தென்பட்டது...

சுந்தரத்தின் ஒப்புதலை பெற்று முடித்த குடும்ப வக்கீல் தொண்டையை கனைத்துக் கொண்டார்...



நீபாவும்... லாவண்யாவின் கணவன் சுகுமாரனும் ஆவலுடன் அவரைக் கவனிக்க... மற்றவர்கள் அசட்டையாக இருந்தார்கள்...

"சுந்தரம் சாரின் மூத்த மகன் முகுந்தன் ஜெனரல் மேனேஜராக இருக்கும் பேக்டரியை... அவருக்கே கொடுத்துவிட்டார் சார்... இனி முகுந்தன்தான் பேக்டரியின் எம்.டி.. இதுபோக... தஞ்சாவூரில் இருக்கும் பூர்வீக வீடுகளில் ஒன்றும்... புதிதாய் கட்டிய வீடுகளில் ஒன்றும் அவர் பெயருக்கு வருகின்றது..."

நீபாவின் முகம் மலர்ந்து விட்டது... அவள் அவசரமாய் கணவனிடம் எதையோ கூற முயல... அவன் வெறுப்புடன் விலகி நின்றான்... அவள் முகம் விழுந்துவிட்டது...

"சாரின் இளைய மகன் வைகுந்த் ஜி.எம்.ஆக இருக்கும் எக்ஸ்போர்ட் கம்பெனியை ... அவருக்கு கொடுத்துவிட்டார் சுந்தரம் சார்... இனி வைகுந்த் எக்ஸ்போர்ட் கம்பெனியின் எம்.டி. மூத்தவருக்கு கொடுத்தது போலவே... பூர்வீக வீடுகளில் ஒன்றையும்... புதிய வீடுகளில் ஒன்றையும்... வைகுந்தின் பெயருக்கு எழுதிக் கொடுக்கிறார்...."

கோடி ரூபாய் சொத்து வந்தாலும் அது என்னைப் பாதிக்காது... உன் கடைக்கண் பார்வை ஒன்றே போதும் என்ற உணர்வுடன்... ரேகா வைகுந்தை ஏக்கத்துடன் பார்க்க... பதிலுக்கு அவளை வெறுமை யாகப் பார்த்தான் வைகுந்த்...

''தஞ்சையில் இருக்கும் டிபார்ட்மென்டல் ஸ்டோரையும்... கலைப் பொருள்கள் விற்கும் கடையையும்... மகள் லாவண்யாவின் பெயருக்கு எழுதிக் கொடுக்கிறார் சுந்தரம் சார்... இதுபோக சென்னையில் இருக்கும் வீடு... லாவண்யாவிற்கே வருகிறது....''

லாவண்யாவின் கணவன் சுகுமாரன்.... இதை நம்ப முடியாமல் விழி விரித்தான்... மனைவியின் பங்கிற்கு சொத்து வரும் என்று அவன் அறிவான்... ஆனால் இவ்வளவு அதிகமான சொத்துக்கள் வரும் என்பதை அவன் நினைத்துப் பார்க்கவில்லை...

சென்னை வீடு கண்டிப்பாய் லாவன்யாவிற்குத் தான் கிடைக்கும் என்று ஏற்கனெவே அவன் கணக்குப் போட்டு வைத்திருந்தான்....

அவனும்... லாவண்யாவும் சென்னைவாசிகள்... அவனுக்கு டைடல் பார்க்கில் சாப்ட்வேர் என்ஜினியர் வேலை... தஞ்சையில் செட்டிலாகி விட்ட மைத்துனர்கள் உள்ளூர் வீடுகளைத்தான் விரும்புவார்கள்... சென்னையில் ஒரு சிறிய அபார்ட்மெண்டை சொந்தமாக வாங்கியிருக்கும் கணவனுடன் குடித்தனம் செய்யும் லாவண்யாவிற்கு கட்டாயம் சென்னை வீட்டை விட்டுத் தந்து விடுவார்கள் என்று மனக் கணக்கு போட்டிருந்தான் சுகுமாரன்....

ஆனால் கூடுதல் போனஸாக... நன்றாக நடந்து கொண்டிருக்கும் இரண்டு தொழில்கள் கிடைக்கப் பெற்றதும் சிறகேயில்லாமல் பறக்கும் உணர்வை அனுபவித்தான்... அதைப் பகிர்ந்து கொள்ள ஆவலாய்



மனைவியின் முகம் பார்த்தான்... அவளோ... கணவனைக் கவனிக்காமல்... தாய்க்கு ஆறுதல் சொல்லிக் கொண்டிருந்தாள்...

'மீதம் இருக்கும் சொத்துக்கள் யாருக்கு...?'

நீபாவின் நெஞ்சம் வினவிய இந்தக் கேள்விக்கு பதிலை கோதண்டராமன் தொடர்ந்து கூறினார்.

''சுந்தரம் சாரின் பூர்வீகத் தொழிலான இரும்புக் கடையும்... அவர் ஆரம்பித்த எஸ். எஸ். இன்ஜினியரிங் காலேஜும் அவர் பொறுப்பில் இப்போது இருப்பதுபோல... தொடர்ந்து இருக்கும்... கிராமத்தில் இருக்கும்... வயல்களின் வருமானமும் அவரையே சேரும்... அவர் குடியிருக்கும் இந்த வீடும்... அவரது பொறுப்பிலேயே இருக்கும்... அவருடைய காலத்திற்குப் பிறகு இவற்றையெல்லாம்... யார் யாருக்கு கொடுக்க வேண்டுமென்று அவர் உயில் எழுதி வைப்பார்...''

சிங்கம்... எப்போதுமே சிங்கம்தான் என்பதை பெற்ற பிள்ளைகளுக்கு உணர்த்தி விட்டார் சுந்தரம்... அவர்கள் வாழும் காலத்தில் அனைத்தையும் கொடுத்துவிட்டு... ஒதுங்கிக் கொள்ளாமல்... கொடுக்க வேண்டியதை நிறைவாக கொடுத்து அவர்களை தனித்து வாழவைத்தார்...

அதே சமயத்தில்... அள்ள அள்ளக் குறையாத செல்வத்துடன் வாழ்ந்துவரும்... அனுபமாவின் வாழ்க்கைக்குத் தேவையான வசதிகளை தன்னிடம் நிறுத்தி வைத்துக் கொண்டார்...

ஆட்சேபிக்க எதுவும் இல்லாததால்... தன் கணவன் பேக்டரியின் முதலாளியென்ற கர்வத்தோடு தங்களுக்கென்று கிடைத்திருக்கும் தனிவீட்டில் பால் காய்ச்சி... புதுக்குடித்தனம் போய் விட்டாள் நீபா...

சுந்தரத்தின் அதட்டலுக்குப் பணிந்து... மனைவியுடன் வேண்டா வெறுப்பாக... போகவே மனமில்லாமல் தனிக் குடித்தனம் போனான் வைகுந்த்.

''சொன்னால் கேள் வைகுந்த்... நீ எங்கே தொலை தூரத்தில் இருக்கும் அந்நிய தேசத்திற்கா போகிறாய்...? உள்ளூரில்தானே இருக்கப் போகிறாய்...? தினமும் வந்து உன் அம்மாவை பார்த்துவிட்டுப் போ...''

சுந்தரம் சொன்னதைக் கேட்டுக் கொண்டான் வைகுந்த்... அவன் தினமும் எதைச் செய்ய மறக்கிறானோ... இல்லையோ... அனுபமாவை பார்க்க வருவதை மறக்கவில்லை...

''திருப்தி தானே லாவண்யா...''

மகளிடம் சுந்தரம் வினவியபோது... அவள்... அவர் மார்பில் தலைசாய்த்து விம்மினாள்...

''என்னம்மா... உனக்கு என்ன மனக் குறை...?''

''இதுநாள் வரைக்கும் நான் தஞ்சாவூருக்கு வரும்போது அப்பா... அம்மா... அண்ணன்கள்... அண்ணிகளைப் பார்க்கப் போகிறோம் என்ற சந்தோசத்தில் வருவேன்... இனிமேல் அது இருக்காதே



அப்பா... இப்படி ஆளுக்கொரு திசையில் பிரிந்து குடித்தனம் ஆரம்பித்து விட்டாங்களே...''

''இதற்கெல்லாம் அழக்கூடாது... இந்த வீடு உனக்கு அப்பா... அம்மாவின் வீடு... நாங்கள் எப்போதும் போல் இங்கேதான் இருப்போம்... நீங்கள் மூன்று பேரும் அவங்கவங்க லைப் பார்ட்னரோடு வாழ்க்கைப் பயணத்தை ஆரம்பித்துவிட்டிங்க... நேரம் கிடைக்கும்போது... வந்து... என்னையும்... அம்மாவையும் பார்த்து விட்டுப் போங்க...''

லாவண்யா வெகுநேரம் சமாதானமடையவில்லை... ஒரு வழியாய் அவள் கிளம்பிப் போனதும்... வீடு வெறிச்சென்று ஆகிப் போனது... அனுபமா சோர்ந்து போய் விட்டாள்...

''ஆளும் பேருமாய்... கலகலவென்று இருந்த வீடு... இப்ப இப்படி ஆகிவிட்டதே...''

''ஏன்... என்னைப் பார்த்தால் உனக்கு ஆளாய் தெரியவில்லையா...? உன் பிள்ளைகளைப் பார்த்தால் தான் ஆள்போல் தெரிகின்றதா...?''

''போதுமே... பிள்ளைகளை துரத்திவிட்டு கேலிப்பேச்சு என்ன வேண்டியிருக்கிறது...?''

''அவர்கள் வாழ வேண்டிய வயதில்... அவரவர் வாழ்க்கையை தனியே வாழ்ந்து பார்க்கட்டும்டி... கூட்டுக் குடும்பத்தில் கும்மி அடித்தால்... அவர்களுக்குள் புரிதல் எப்படி வரும்... சொல்லு...''

''கதை சொல்கிறீங்களா...?''

"இது கதையில்லை... நிஜம்... நீயும் நானும் வாழ்க்கையை ஆரம்பிக்கும்போது... கூட யார் இருந்தாங்க சொல்லு...? தனிக்காட்டு ராஜாவாக நான் இருந்தேன்..."

"வெறும் ராஜாவா...? அடாவடி ராஜா..."

"இந்த அடாவடி ராஜாவின் உள்ளங் கவர்ந்த மகாராணியாக இந்த வீட்டுக்குள் நீ வந்தாய்..."

"ஆமாம்... அதுவும் தனிக்காட்டு ராணியாக..."

"நீ காட்டு ராணியில்லைடி... என் வீட்டு ராணி..."

"இப்படிக் கொஞ்ச பிள்ளைகள் இடைஞ்சலாய் இருக்கிறாங்கன்னுதானே அவங்களைத் துரத்தி விட்டீங்க..."

"ஊஹூம்... அவர்கள் மனைவிகளை கொஞ்சி மகிழவேண்டும் என்றுதான் துரத்திவிட்டேன்..."

"நம்வீட்டில் இருந்தால் கொஞ்சல் வராதா...?"

"வராது... அனு... வாழவேண்டிய வயதில் தேவையில்லாத குடும்பச் சண்டைகளைப் போட்டுக் கொண்டு... இளமைக் காலத்தை அவர்கள் வீணடித்து விடுவார்கள்..."

"அது என்னவோ உண்மைதான்..."

"நீபாவும்... ரேகாவும் பிறந்த வீட்டிற்குப் போகிறேன் என்று பெட்டியைத் தூக்க ஆரம்பித்து



விட்டார்கள்... இதுவே தனிக்குடித்தனம் வைத்தால் அப்படிச் செய்வார்களா...? செய்ய மாட்டார்கள்..."

"ஏனாம்...?"

"தனியாக புருசனை விடக்கூடாதுங்கிற பயம்டி... இங்கே அவனைக் கண்காணிக்க ஆள் இருக்கிறோம்... தனி வீட்டில் யார் இருப்பார்கள்...?"

"அப்படியும் நினைப்பாங்களா...?"

"பின்னே..."

"நான் அப்படி நினைத்ததில்லையே..."

"எப்படி நினைப்பாய்...?" நான்தான் உன்னைக் கண்டநாள் முதல்... இந்த நாள் வரை... உன்னிடம் சரண்டர் ஆகிவிட்டேனே..."

அனுபமா... அவர் மார்பில் சாய்ந்து கண்மூடிக் கொள்ள... சுந்தரம்... அவளது கூந்தலை அன்புடன் நீவி விட ஆரம்பித்தார்... அவர்கள்... இருவரின் மனமும்... பின்னோக்கி... அந்த நாள்களுக்குச் சென்றன...."

## 8

இருபத்தி இரண்டு வயதில் எம்.ஏ. பட்டதாரியாக கல்லூரியைவிட்டு வெளியே வந்த சுந்தரம்... தன்

இருபத்தி ஐந்தாம் வயதிற்குள்... ஏற்றுமதி இறக்குமதி கம்பெனிக்கும்... பேக்டரிக்கும் முதலாளியாக மாறியிருந்தான்... அந்த இரு தொழில்களிலும் குவிந்த பணத்தைக் கொண்டு... அவன் கட்டியதுதான் 'எஸ்.எஸ். பொறியியல் கல்லூரி... தஞ்சையின் அழகிய கல்லூரிகளில் ஒன்றாகத் திகழ்ந்த அந்தக் கல்லூரி ஆரம்பித்த... மூன்றாம் வருடத்தில்... முதல் வருட மாணவியாக அதில் வந்து சேர்ந்தவள் அனுபமா...

தன் இருபத்தியெட்டாம் வயதில்... பதினேழு வயதான அனுபமாவை... கல்லூரியில் நடத்திய நேர்முகத் தேர்வின்போது முதன் முதலாகப் பார்த்த சுந்தரம்... பார்த்த வினாடியிலேயே... அவளிடம் தன் மனதைப் பறிகொடுத்தான்...

கல்லூரியின் அட்மிசன் விசயத்தில் மிகவும் கண்டிப்பாக இருந்தான் சுந்தரம்... தன் கல்லூரி... தஞ்சையின் தரமான கல்லூரியாக வரவேண்டும் என்பதில் மிகுந்த அக்கறை காட்டினான்... வந்திருக்கும் விண்ணப்பங்களை ஆராய்ந்து அலசி... நேர்முகத் தேர்விற்கு வரச்சொல்லி... அவர்களிடம் கேள்வி கேட்டு... மாணவர்களின் அறிவுத் திறனை பரிசோதித்துவிட்டு... அவனுக்கு... மனதுக்குத் திருப்தியாக இருந்தால் மட்டுமே அட்மிசன் தந்தான்.

அதனாலேயே... முதல் இரண்டு வருடங்களி லேயே அவனுடைய கல்லூரியின் பெயர் தஞ்சையில் பரவ ஆரம்பித்துவிட்டது... மூன்றாம் வருடம் வந்திருந்த விண்ணப்பங்களை ஆராய்ந்தபோது... அனுபமாவின்



புகைப்படம் ஒட்டிய விண்ணப்பம் அவன் பார்வையில் பட்டது...

முகத்தின் மீது விழுந்த முடியுடன் இயல்பாகச் சிரித்துக் கொண்டிருந்த அந்தப் பெண்ணிடம் தெரிந்த வசீகரம்... அவனை ஈர்த்தாலும்... அதை ஒதுக்கி வைத்து விட்டு... அவளுடைய மதிப்பெண்களை சரிபார்ப்பதில் ஈடுபட்டான் சுந்தரம்... அவள் அதிக மதிப்பெண்கள் எடுத்திருந்தாள்...

"கெட்டிக்காரிதான் போல..." என்று நினைத்துக் கொண்டே அவளுக்கு நேர்முகத் தேர்விற்கான கடிதத்தை அனுப்பி வைத்ததோடு அவளைப் பற்றிச் சுத்தமாக மறந்துவிட்டான் அவன்...

நேர்முகத் தேர்வின்போது... யதேச்சையாய் ஜன்னல்வழி கல்லூரியின் முன்புறத்தின் பக்கம் பார்வையை செலுத்திய சுந்தரம்... கண்களில் மின்னல் மின்ன... பார்வையை விலக்காமல் பார்க்க ஆரம்பித்து விட்டான்...

கல்லூரியின் பிரதான வாயிலில் இருந்து... உள்புறமாக இருந்த கல்லூரிக் கட்டிடத்திற்கு வருவதற்கு... மிகப் பெரிய அகன்ற சிமிண்ட் போடப்பட்ட சாலை அமைந்திருக்க... அதன் இருபுறமும்... மரங்கள் அடர்ந்து அணி வகுத்து நின்றன... மரங்களின் அடியே சிமிண்ட் பெஞ்சுகள் கட்டப்பட்டிருக்க.. அதன் அடியினில் சமமாக... புல்வெளி அமைக்கப்பட்டிருந்தது... புல்வெளியைச் சுற்றிலும்... பூச்செடிகள்...

பூங்காவைப் போல் தோற்றமளித்த... அந்தப் புல்வெளியின் மீது... கால்கள் பாவாமல்... நீண்ட பின்னல் பின்னால் சுழன்றாட... பாவாடை... தாவணி யோடு... ஓடி வந்து கொண்டிருந்தாள் அந்தப் பெண்....

இரட்டைப் பின்னல்களை முன்னால் போட்டபடி... மூச்சிரைக்க... அவன் முன்னால்... நேர்முகத் தேர்விற்கு அவள் வந்து நின்ற கோலத்தை... இன்றைக்கும் சுந்தரத்தால் மறக்க முடியவில்லை...

முன்பக்க முடி... ஒன்று சேராமல்... கலைந்து... முகத்தின்மீது வந்து விழ.. அதை ஒரு கையால் ஒதுக்கிவிட்டுக் கொண்டே.... மறுகையால்... தன் மதிப்பெண் பட்டியல் இருந்த பைலை அவனிடம் நீட்டினாள் அவள்...

"ம்ம்... உன் பெயர்தான் அனுபமாவா...?" அவள் முகத்தில் இருந்த துறுதுறுப்பை ரசித்த வண்ணம் கேட்டான் சுந்தரம்.

"ஆமாம் சார்..."

"நல்ல மார்க்தான் எடுத்திருக்கிறாய்..."

"ஆமாம் சார்..."

"ஆமாம் போடுவதைவிட... வேறு பதில் சொல்லத் தெரியாதா?"

"தெரியும் சார்... ஆனால் ஆமாம் போட்டால் தானே... நீங்க இந்தக் காலேஜில் சீட் கொடுப்பீங்க... இல்லாவிட்டால் கொடுக்க மாட்டீங்களே..."



அவளது குறும்பான இந்தப் பதிலை அவன் கொஞ்சம் கூட எதிர்பார்க்கவில்லை... அவளுடைய தோற்றத்தில் வசீகரிக்கப்பட்டவன்... ஏதாவது பேச வேண்டும் என்பதற்காகவே... அந்தக் கேள்வியைக் கேட்டான்...

ஒரு கணம் கூட யோசிக்காமல்... கொஞ்சம் கூடப் பயப்படாமல்... உடனே பதில் சொன்ன அவளின் அந்த துறுதுறுப்பு கலந்த வேகம்... அவனுக்கு மிகவும் பிடித்துப் போனது...

'நடக்கக் கூட யோசிக்கிறவள் போல... கால்கள் தரையில் பாவாமல்... என்னமாய் ஓடி வந்தாள்... அப்படியே புள்ளிமான் குட்டிதான்...'

சுந்தரம் சேரில் சாய்ந்து அமர்ந்து கொண்டான்... அவளது கருவண்டு கண்களையும்... இமைகளை படபடவென்று கொட்டும்போது... பட்டாம் பூச்சிகள் போல்.. விரிந்து தெரியும் அந்த இமைகளையும்... கண் கொட்டாமல் பார்த்துக் கொண்டே இருக்க வேண்டும் போலஅவனுக்குத் தோன்றியது...

"ஏன் அப்படி ஓடி வந்தாய்...?" என்று கேட்டான்...

"அது எப்படி சார் உங்களுக்குத் தெரியும்..." அவள் கண்களை அகல விரித்துக் கேட்டாள்...

'அப்படியே... கனவுக் கன்னி சரோஜாதேவியே தான்...' ரசித்தான் சுந்தரம்...

"நான்தான் பார்த்தேனே..."

"எப்படி சார்...? ஞானக் கண்ணிலா பார்த் தீங்க...?"

"ஊஹும்... சாதாக் கண்ணில்தான் பார்த்தேன்..."

அனுபமா திரும்பி அந்த அறையை ஆராய்ந் தாள்... பெரிய ஜன்னல் அவள் கண்ணில் பட்டது...

"இது வழியாகப் பார்த்தீங்களா...?"

"கண்டுபிடித்து விட்டாய்..."

"நீங்களும்... இந்தக் காலேஜில் என்ன நடந்தாலும் கண்டுபிடிக்கத்தானே... மெயின் கேட்டின் பக்கமாய்... இவ்வளவு பெரிய ஜன்னலை வைத் திருக்கிறீங்க..."

"கெட்டிக்காரிதான்..."

"நிஜமாகவே சொல்கிறீங்களா சார்..."

"ஏன் அப்படிக் கேட்கிறாய்...?"

"அப்போ... கட்டாயம் எனக்கு அட்மிசன் கொடுத்து விடுவீங்கன்னு சொல்லுங்க..."

"ஆரியக் கூத்தாடினாலும்... காரியத்திலேயே கண்ணாக இருக்கிறாய்... பிழைத்துக் கொள்வாய்..."

"நன்றி சார்..."

"அப்பா... அம்மா என்ன செய்கிறாங்க...?"

"அப்பா... மில்லில் வேலை பார்க்கிறார்... அம்மா வீட்டில் வேலை பார்க்கிறாங்க...."



"யார் வீட்டில்...?"

"இது என்ன சார் கேள்வி... எங்கள் வீட்டில் தான்..."

"இதைச் சரியாகச் சொல்ல வேண்டாமா...?"

"எப்படிச் சொல்லுவது...?"

"வீட்டில் சும்மா இருக்கிறாங்கன்னு சொல்ல லாமே..."

"வீட்டில் அவங்க சும்மாவா சார் இருக்கிறாங்க..? காலையிலிருந்து... சாயந்திரம் வரை எத்தனை வேலைகள் தெரியுமா...?"

"தெரியாமல் சொல்லி விட்டேன் தாயே..."

"பரவாயில்லை... முதல் தடவையென்பதால் விட்டுவிடுகிறேன்..."

ஒரு சாதாரண மில் தொழிலாளியின் மகள்... மிகப் பெரிய கல்லூரியின் அதிபனிடம் பேசும் பயமின்றி பேசுவதைக் கேட்டு அவனுக்குள் வியப்பு ஏற்பட்டது...

இவள் இயல்பே இதுதானா...!

ஏனோ அதை அறிந்து கொள்ள அவனுக்கு ஆர்வம் தோன்றியது... அவன் கேள்விகளை வளர்த்தான்...

"கூடப் பிறந்தவங்க எத்தனை பேர்...?"

"ம்ஹூம்... சண்டை போட... ஒரு ஆள் கூடக் கூடப் பிறக்கவில்லை சார்... நான் ஒற்றைப் பெண்..."

அவள் சொல்லிய விதம் கண்டு... அவனுக்குச் சிரிப்பு வந்துவிட்டது... சிரித்துக் கொண்டே... அவள் முகம் பார்த்தான்...

கண்களுக்கு மைதீட்டியிருந்தாள்... அளவாகப் பவுடர் பூசியிருந்தாள்... நேர் வகிடெடுத்து... நீண்ட கூந்தலை... இரட்டைப் பின்னல்களாகப் போட்டிருந் தாள்... முன் பக்கம் கலைந்து... முகத்தில் விழுந்த கேசச் சுருளை... இயல்பாக விலக்கிக் கொண்டே அவள் தலையை ஒரு புறமாய் சாய்த்து அவள் சிரிக்கும் போது... கண்களும் கூடச் சேர்ந்து சிரித்த விந்தை யை... ஆச்சரியத்துடன் கண்டு ரசித்தான் சுந்தரம்.

அவள் சென்ற பின்னும்... அவள் சூடியிருந்த பூவாசம் அறையில் நிரம்பியிருக்க... தன்னையறி யாமல்... சன்னக் குரலில் பாடினான் அவன்.

*"பாவாடை தாவணியில்...*
*பார்த்த உருவமா? - இது*
*பூவாடை வீசி வர....*
*பூத்த பருவமா...?*
*பாலாடை போன்ற முகம்*
*மாறியது ஏனோ...?*
*பனிபோல நாணம் அதை*
*மூடியது ஏனோ..."*

அனுபமாவின் பேச்சும்... சிரிப்பும் அவனை ஆகர்ஷித்துவிட்டது... அவளுக்கு கல்லூரியில் இடமும் கொடுத்துவிட்டான்... தினமும் கல்லூரியை வலம் வருவதை வழக்கமாக கொண்டிருப்பவன்... அனுபமா வின் வகுப்பறையைத் தாண்டும்போது மட்டும் அடிப் பிரதட்சணம் செய்வது போல... மிக மெதுவாக நடந்து கடப்பான்...



நீண்ட வராண்டாவில் நடக்கும்போது வகுப்பறையின் பெரிய ஜன்னலின் வழி அவனது பார்வை உள்ளே படியும்... அவனது பார்வை அனுபமாவைத் தேடும்...

அது என்னவோ... அவன் பார்க்கும் போ தெல்லாம்... அவள் யாருடனாவது பேசிக்கொண்டு... கலகலத்துச் சிரித்துக் கொண்டுதான் இருப்பாள்...

"அப்புறம் என்னடி ஆச்சு...?"

"என்ன ஆச்சு... ஜெமினி கணேசன் பாடும் பாட்டுக்கு... கன்னடத்துப் பைங்கிளி... எதிர்பாட்டுப் பாடிக் கவிழ்த்துவிட்டது..."

"கன்னடத்துப் பைங்கிளியா...? யாருடி அது...?"

"எல்லாம் நம்ம அபிநய சரஸ்வதிதாண்டி..."

"அபிநய சரஸ்வதியா...? அது யாருடி..."

"போடி கூமுட்டை.... கன்னடத்து பைங்கிளின் னாலும்... அபிநய சரஸ்வதின்னாலும்... அது ஒரே ஒரு அழகியைத்தான் குறிக்கும்..."

"யாருடி அது...?"

"இதையே விதம் விதமாய் கேளு... வேறுயாரு.... கனவுக் கன்னி சரோஜாதேவிதான்..."

"அதை நேரடியாய் சொல்ல வேண்டியதுதானே..."

''பரிட்சையில் நேரடியாய் கேள்வி கேட்காமல் மறைமுகமாய் கேள்வி கேட்டு வைத்தால் நீ என்ன செய்வாய்?''

''அதுவும்... இதுவும் ஒன்றாடி...''

''பின்னே இல்லையா... அது படிப்பு சம்பந்தமான அறிவுன்னா... இது பொது அறிவுடி...''

அவள் அடிக்கும் அரட்டையைக் கேட்டு... சுந்தரம் வாய் விட்டுச் சிரித்து விடுவான்... தினமும் அவள் வகுப்பறையைக் கடக்கும்போது அவனால் சிரிக்காமல் இருக்க முடியாது...

அப்படி ஒரு நாள் அவளது வகுப்பறையைக் கடந்தபோது அனுபமா... வாகீசனிடம் கலகலத்துப் பேசிச் சிரித்துக் கொண்டிருப்பதைக் கண்டான்... சுந்தரத்தின் சிரிப்பு மறைந்துவிட்டது...

## 9

'வாகீசன்...'

அனுபமாவின் வகுப்புத் தோழன்... அவனுடைய அப்பா தாசில்தார்... வசதியான குடும்பம்... அவன் எப்படி... அனுபமாவுடன் பழக ஆரம்பித்தான் என்பது சுந்தரத்திற்கு விளங்கவில்லை...



அப்போது அனுபமா... பொறியியல் இரண்டாம் ஆண்டு படித்துக் கொண்டிருந்தாள்... முதல் ஆண்டில் அவள் பெண்களைத் தவிர... வேறு யாரிடமும் பேசிப் பழகி... சுந்தரம் பார்த்ததில்லை...

இரண்டாம் ஆண்டு முடியும் தருவாயில்தான் அவள் வாகீசனுடன் அடிக்கடி சிரித்துப் பேசுவது... சுந்தரத்தின் கவனத்தில்பட்டது...

அனுபமா எல்லோரையும் ஈர்க்கும் சுபாவ முள்ளவள்தான்... முதலாம் ஆண்டிலேயே... கல்லூரி ஆண்டு விழாவில்... அனைத்து நிகழ்ச்சிகளிலும் பங்கெடுத்து கைதட்டல்களை அள்ளிச் சென்றவள். அதுவும்... அவள் மேடையில் நின்று... தேன் குரலில்...

*''தனிமையிலே*
*இனிமை காண முடியுமா...*
*நள்ளிரவினிலே...*
*சூரியனும் தெரியுமா...''*

என்ற பாடலைப் பாடியபோது... அரங்கம் முழுவதும் கைதட்டல்களால் அதிர்ந்தது...

இரண்டாம் வருட ஆரம்பத்தில்... அந்தக் கல்லூரியின் கதாநாயகியாக அவள் ஆகிப்போனாள்...

வாகீசன்... கவர்ச்சியான தோற்றமுடையவன்... தினமும் ஒரு பவுடர் டப்பாவைக் காலி பண்ணுவான் என்பது சுந்தரத்தின் யூகம்... கண்ணாடியின் முன் ஒரு மணி நேரமாவது செலவிட்டிருப்பான் என்பதை...

அவனுடைய முன்பக்க சிகையின் சுருட்டி விடப்பட்ட தோற்றம் சொல்லும்... தினமும் ஒரு டெர்லின் சட்டையுடனும்... மடிப்புக் கலையாத பேண்டுடனும் வருவான்... அவனின் ஆடம்பரத்தில் அனுபமா மயங்கி விட்டாளா...?

'அனுபமா அப்படி மயங்கக் கூடிய பெண் ணில்லையே...!'

சுந்தரம் அவர்களை தீவிரமாகக் கண்காணிக்க ஆரம்பித்தான்... அவர்கள் வகுப்பறையை தவிர்த்து... கல்லூரியின் மரத்தடியில் அமர்ந்து பேச ஆரம்பித் தார்கள்... மாலையில் வகுப்புகள் முடிந்த பின்னும்... அவர்கள் அமர்ந்து பேசிக்கொண்டு இருந்தார்கள்...

ஒருநாள் மாலை மயங்கும் நேரத்தில்... அவர்களை மரத்தடியில் பார்த்துவிட்டு... அதற்கு மேல் பொறுக்க மாட்டாதவனாக அவர்களுக்கு அருகில் சென்றான் சுந்தரம்.

"அனுபமா..."

"சார்..."

அவள் இயல்பாக எழுந்து நிற்க... வாகீசனோ பதறி எழுந்து நின்றான்...அவனது கைவிரல்கள் நடுங்க ஆரம்பித்ததை சுந்தரம் மனதிற்குள் குறித்துக் கொண்டான்...

"இருட்டப் போகிறதே... இன்னுமா நீங்கள் இருவரும் வீட்டிற்குப் போகவில்லை...?"



"போக வேண்டும் சார்..."

"இங்கே என்ன செய்கிறீர்கள்..."

"பேசிக் கொண்டிருந்தோம் சார்..."

"பாடத்தைப் பற்றியா...?"

"இல்லை... எங்கள் சொந்த விசயத்தைப் பற்றி..."

எல்லாக் கேள்விகளையும் அனுபமா... ஒருத்தி மட்டுமே தனியாக எதிர் கொண்டாள்... நேரடியான பதில்களை உடனுக்குடன் தந்தாள்...

வாகீசன் வாயைத் திறக்கவில்லை... வியர்த்துப் போன முகத்தை... கைக்குட்டையால் துடைத்தபடி... வெறுமனே நேரம் பார்த்தான்... கால் மாற்றி நின்றான்... விட்டால் ஓடி விடுவான் போல இருந்தது அவன் தோற்றம்...

'ம்ஹூம்... இவனெல்லாம் அனுபமாவின் காதலுக்கு தகுதியானவனா... சரியான மண் குதிரை...இவள் புத்திசாலியாயிற்றே... போயும்... போயும்... இவனிடமா மயங்க வேண்டும்...!'

சுந்தரம் வாகீசனை அந்த இடத்திலிருந்து உடனடியாக ஓட வைக்க வேண்டுமென்ற தீர்மானத்திற்கு வந்தான்...

"என்ன வாகீசா...? படிப்பெல்லாம் எப்படி போய்க்கிட்டு இருக்கு...? நல்லாப் படிக்கிறாயா...?"

"ப.. ப.. படிக்கிறேன் சார்..."

"எங்கே படிக்கிறாய்...? இந்த மரத்தடியிலா...?"

"இ... இ... இல்லை சார்..."

'இவன் ஏன் இப்படி உளறிக் கொட்டி... கிளறி மூடுகிறான்...!' அனுபமா எரிச்சலோடு அவனைப் பார்த்தாள்...

தான் உண்டு... தன் படிப்பு உண்டு... தன் அரட்டை உண்டு... என்று இருந்தவளிடம் வலிய வந்து காதல் சொன்னவன் அவன்தான்... மண்டியிடாத குறையாக கெஞ்சியவனும் அவன்தான்... ஷேக்ஸ் பியரின் நாடக வசனங்களை எல்லாம் கடிதமாக எழுதி... அவள் கையில் கொடுத்தவனும் அவன்தான்... அவள் திரும்பிப் பார்க்காவிட்டால் உயிரை விட்டு விடுவேன் என்று வசனம் படித்தவனும் அவன்தான்... இதையெல்லாம் செய்துவிட்டு...இன்று கையைப் பிசைந்து கொண்டு நிற்பவனும் அவன்தான்...

'இதையே சமாளிக்க முடியாதவன்... உனக்காக கடலையும் கடப்பேன்.,... வானத்தை வில்லாக வளைப்பேன்னு வசனம் பேசினானே... அவைகளை எப்படி செய்து முடிப்பான்...' அவள் அலுப்பாக உணர்ந்தாள்..

சுந்தரம் அவளைப் பார்த்த பார்வையிலும் அந்தக் கேள்வி இருப்பதை உணர்ந்தாள் அவள்...



"அப்பா எப்படியிருக்கிறார் வாகீசா...?"

"ச.. சார்...?"

"போன வாரம் கூட... உன் அப்பாவை கடைத் தெருவில் பார்த்தேன்... உன்னைப் பற்றி விசாரித்தார்... நன்றாகப் படிக்கிறாயென்று சொன்னேன்... அடுத்து அவரைப் பார்த்தால்... நான் என்னப்பா சொல்லட்டும்..."

"சார்..."

வாகீசன் சட்டென்று சுந்தரத்தின் கால்களிலேயே விழுந்துவிட்டான்... அனுபமாவின் முகத்தில்... அதிர்ச்சி அப்பட்டமாகத் தெரிந்தது...

"ஒன்றும் சொல்லி விடாதீங்க சார்... இனிமேல் இப்படித் தப்புக்களை பண்ணமாட்டேன்..."

"இப்போது என்ன தப்பு பண்ணினாய்...?"

"பெண்பிள்ளையுடன் மரத்தடியில் பேசிக் கொண்டிருந்ததைப் பற்றிக் கேள்விப் பட்டால்... என் அப்பா... பெல்ட்டாலேயே என் தோலை உரித்து விடுவார் சார்..."

"ம்ம்... பாவம்... அடிக்குப் பயப்படுகிறான் போல இருக்கு அனுபமா..."

"இல்லை சார்... என் அப்பா.. என் மேல் ரொம்பவும் நம்பிக்கை வைத்திருக்கிறார்..."

"கேட்டுக் கொண்டாயா அனுபமா...? தாசில்தார்

வைத்திருக்கிறாராம்... உன் அப்பா உன் மேல்... அப்படி எந்த நம்பிக்கையையும் வைக்கவில்லையா...?"

'மில் தொழிலாளியென்றால்... குறைவா...?'

அனுபமா துடித்துப் போய் விட்டாள்... சுந்தரத்தின் முகம் கடுமையாக மாறியிருந்தது... அனுபமாவை தேள் கொட்டுவதைப் போலக் கொட்டிக் கொண் டிருப்பதைப் பற்றி அவன் கொஞ்சம் கூடக் கவலைப்பட வில்லை...

'இவன் எப்படி வாகீசனிடம் சிரித்துப் பேசலாம்...'

தன்னிடம் அவள் சிரித்துப் பேசும்போது ரசித்தவன். இன்னொருவனிடம் பேசும்போது பொங்கி எழுந்தான்... அவள் முதன் முதலாக முகம் பார்த்துப் பேசியவனின் முகத்திரையைக் கிழித்துவிடத் துடித்தான்...

"உன் அண்ணனுக்கு போன மாதம் கல்யாணம் நடந்ததே வாகீசா... நான் கூட வந்திருந்தேனே..."

"ஆமாம் சார்..."

"பெண் பெரிய இடம் போல... கிலோ கணக்கில் தங்கம் போட்டு... கார் வாங்கிக் கொடுத்தார்களாமே..."

"ஆமாம் சார்..."

"உன் அண்ணன் என்ன வேலை செய்கிறார்..."

"ரெவின்யூ இன்ஸ்பெக்டர்..."



"உன் அப்பாவின் ஆபிசிலேயே வேலை கிடைத்துவிட்டது போல..."

"ஆமாம் சார்..."

"உனக்கும்... உன் அப்பா.. இப்போதே பெண் தேடுகிறாராமே... உன் அண்ணனுக்குச் செய்தது போல...இரண்டு மடங்கு செய்ய வேண்டும் என்று சொல்கிறாராமே... உண்மையா...?"

"உண்மைதான் சார்..."

இப்போது வாகீசன்... அனுபமா இருந்த திசையின் பக்கம் திரும்பிக் கூடப் பார்க்கவில்லை...

'நோட் திஸ் பாயின்ட் யுவர் ஆனர்...' என்பதைப் போல... அனுபமாவை... ஜாடையாக ஒரு பார்வை பார்த்தான் சுந்தரம்.

"இப்படி மரத்தடியில் உட்கார்ந்து பெண்களிடம் அரட்டை அடித்துக் கொண்டிருந்தால்... பெரிய இடத் தில் இருந்து உனக்கு எப்படி பெண் கிடைக்கும்...?"

"இல்லை சார்... இனிமேல்... இதுபோல் நடக்காது..." வாகீசன் சட்டென்று தன் சைக்கிளில் ஏறி அங்கிருந்து பறந்து விட்டான்...

இருள் சூழ்ந்து வந்த அந்த வேளையில்... கல்லூரியின் ஆளரவமற்ற தனிமையில்... அவளைப் பற்றிக் கொஞ்சம் கூடக் கவலைப்படாமல்... கைகழுவி விட்டதைப் போல... அவன் ஓடிவிட்டது... அனுபமாவை

மிகவும் பாதித்து விட்டது... அவள் சுந்தரத்தின் முகத்தை நிமிர்ந்து பார்க்கத் தயங்கினாள்.

"இதுதான் வாகீசன்... இப்போது புரிந்ததா..." சுந்தரம் கடினமான குரலில் கூறினான்...

"அவன் செத்து விடுவேன் என்று சொன்னான்..."

"அதனால் இரக்கப்பட்டாயா...?"

"ஆமாம்..."

"இவனா சாவான்...? எப்படி ஓடினான் பார்த்தா யில்லையா? இவன் மற்றவர்களை சாகடிப்பான்..."

"நான் சாதாரணமாகத்தான் அவனோடு பேசிப் பழகினேன் சார்... அவன் அதிகப் படியாய் பேச... இடம் கொடுக்கவில்லை..."

"எனக்கு உன்னைத் தெரியும் அனுபமா... இந்த ஊருக்குத் தெரியுமா...? ஊரில் உள்ளவர்கள் தப்பாக பேச மாட்டாங்களா?"

"நான் அப்படிப்பட்ட பெண் இல்லை சார்..."

"ம்ச்சு... நான் விளக்கம் கேட்டேனா...? உன்னை அப்படி நினைக்கத்தான் எனக்குத் தோன்றுமா...? உன் அப்பா சாதாரண மில் தொழிலாளி... உன்னைப் படிக்க வைக்க எவ்வளவு சிரமப்படுகிறார் என்பது உனக்குத் தெரியாதா...?"



"அதற்காகத்தான்... ஏழை மாணவர்... மாணவிகளுக்கு உதவும் திட்டத்தின் அடிப்படையில்... இலவசமாக என்னை சேர்த்து கொண்டிருக்கிறீங்களே சார்...இதுபோக உபகாரச் சம்பளமும் வாங்கிக் கொடுத்திருக்கீங்க...இந்த உதவிகளை என்றைக்கும் நான் மறக்கமாட்டேன்..."

இப்படிச் சொன்னவளை கூர்ந்து பார்த்தான் சுந்தரம்.

'நீ என்னை மறக்காமல் இருந்தால் போதும்...'

## 10

அன்று அனுபமாவிற்கு அதிக அளவில் அறிவுரை சொன்னான் சுந்தரம்... அவனுக்குத் தெரியும்... அனுபமாவிற்கு அவன் மேல் மதிப்பும்... மரியாதையும்... மிக அதிகம் உண்டு என்பது... அவன் சொல்வதை அவள் காது கொடுத்துக் கேட்பாள்... அன்றும் கேட்டாள்.

"இவ்வளவு உதவிகளையும் எதற்காக நான் உனக்குச் செய்தேன் என்று நினைக்கிறாய் அனுபமா...?"

''ஒரு ஏழைப் பெண்... என்ஜினியராக வர வேண்டும் என்பதற்காகதான் சார்...''

''அதைத் தெரிந்துமா... இப்படிப்பட்ட அரைவேக் காடுகளின் ஆசை வார்த்தைகளைக் காதில் போட்டுக் கொள்கிறாய்...''

''சார்... அவன் என்னைக் காதலிப்பதாகச் சொன்னான்... நான் அவன் காதலை ஏற்றுக் கொள்ளா விட்டால் செத்து விடுவேன் என்று கெஞ்சினான்... அதனால் ஒரு இரக்கத்தில் அவனுடன் உட்கார்ந்து பேசினேன்... மற்றபடி படிப்பைத் தவிர... வேறு எந்த எண்ணமும்... என் மனதில் இல்லை...''

''நம்புகிறேன்... வா... போகலாம்...''

''எங்கே...?''

''உன் வீட்டுக்கு... வீட்டுக்குப் போகும் நினைவில்லையா?''

''நான் போய்க்கொள்வேன் சார்...''

''எப்படிப் போவாய்...? இருட்டி விட்டது... இனி நீ நடந்து போக முடியாது... கை ரிக்ஷாவை நம்பி... இந்த நேரத்தில் தனியாகப் போவது ஆபத்தும்மா... வா... என் காரில் போய் உன்னை உன் வீட்டில் இறக்கி விடுகிறேன்...''

அந்த நிமிடம்... ஒரு நெருக்கடி வந்தபோது விட்டு விட்டு ஓடிச் சென்றுவிட்ட வாகீசனின் துரோகமும்... தன் உயரத்தையும்... அவளது சாதாரண நிலையையும்



பொருட்படுத்தாமல் தன் காரில் அவளை வீட்டுக்கு அழைத்துச் சென்ற சுந்தரத்தின் பொறுப்பும்... அனுபமாவின் மனதில் ஆழப் பதிந்துவிட்டன...அவள் உதட்டைக் கடித்துக் கொண்டு கண்கள் கலங்க... அவனுடைய காரில் ஏறிக் கொண்டாள்... வீட்டு வாசலில் இறங்கிக் கொண்டபோது...

''உள்ளே வாங்க சார்...'' என்று அவனை அழைத்தாள்..-

''இல்லை அனுபமா... இன்னொரு நாள் வருகிறேன்...''

''ஏன் சார்...இது ஏழையின் சாதாரண கூரை வீடுன்னு நினைக்கறீங்களா...? எங்க வீட்டுக்கெல்லாம் நீங்கள் வர மாட்டிங்களா...?''

அவள் கேட்ட விதத்தில் சட்டென... காரில் இருந்து இறங்கிவிட்டான் சுந்தரம்...

'உன் வீட்டிற்கு வராமல்... வேறு யார் வீட்டிற்குப் போகப் போகிறேன்... நீ குடியிருக்கும் இடம் கூரை வீடென்றாலும் எனக்கு அது மாட மாளிகைதான்...!'

வீட்டிற்குள் அரிக்கேன் விளக்கு எரிந்து கொண்டிருந்தது... அனுபமாவின் கல்லூரியின் உரிமையாளர் வந்திருக்கிறார் என்றதும்...அவளின் பெற்றோர்கள் பரபரப்பாய் ஓடி வந்து... வணங்கி வரவேற்றார்கள்...

''ஐயாவின் கால்பட இந்த ஏழையின் குடிசை குடுத்து வைத்திருக்கிறதுங்க...''

அனுபமாவின் தந்தை நெகிழ... அவன்... நாற்காலியை தூசிதட்டிப் போட்டுக் கொண்டிருந்த அனுபமாவைப் பார்த்தான்..

அரிக்கேன் விளக்கின் வெளிச்சத்தில் ஒரு தேவதையைப் போல் இருந்தாள் அவள்... அவளைப் பார்த்துக் கொண்டே நாற்காலியில் அமர்ந்தான் சுந்தரம்... அது ஆடியது.

''பார்த்து சார்... அதற்குப் பெயர்தான் நாற்காலி... ஆனால் உண்மையில் அது ஒரு முக்காலி...'' அனுபமா கலகலத்துச் சிரித்தாள்.

'அப்பாடா... இவளின் சிரிப்பு திரும்பி விட்டது...!'

சுந்தரம் நிம்மதியான உணர்வுடன் அவளைப் பார்த்து வினவினான்...''

''ஏன் அப்படி...?''

''ஏன்னா... அதன் ஒருகால் உடைந்திருக்கு...''

''ஒட்டை நாற்காலியா...?''

''ஆமாம்... இது ஏழை வீடு சார்...''

''இதையே எத்தனை தடவை சொல்வாய்...?''

''எல்லாம் உங்கள் கருணையை சம்பாதித்துக் கொள்ளத்தான்... அப்போதுதானே... ஐயோ பாவம்ன்னு பரிதாபப் பட்டு உபகாரச் சம்பளத்தை அதிகப்படுத்து வீங்க...''



அனுபமாவின் தாய்... சேலைத் தலைப்பை இழுத்துப் போர்த்திக்கொண்டு... மரியாதையுடன்... காபித் தம்ளரைக் கொண்டு வந்து தந்தாள்...

''எப்படி சார் இருக்கு எங்கள் வீட்டுக் காபி...''

''ஏன் இதையும் ஏழை வீட்டுக் காப்பின்னு சொல்லப்போகிறாயா...? நன்றாக இருக்கிறது...''

''அப்படியா... தண்ணிப்பால்... குறைச்சலான சர்க்கரை... பற்றாத காபித்தூள்... இத்தனையிருந்தும் எங்க வீட்டுக் காபி நன்றாக இருக்கிறதா...?''

''உன் வீட்டுக் காப்பியாச்சே... உன்னைப் போல் சுறுசுறுன்னு இருக்கிறது...''

சுந்தரம் விடைபெற்றுக் கொண்டு கிளம்பிய போது அந்தக் குடும்பமே... வாசலில் வந்து அவனை வழி அனுப்பியது...

அன்று மாலை வாகீசனைத் துரத்தியதோடு சுந்தரம் விட்டு விடவில்லை... அவனுடைய தந்தையை தற்செயலாகச் சந்திப்பதுபோல்... அவருடைய அலுவலகத்தில் போய் சந்தித்தான் அவர் அவசரமாய் அவனுக்கு வணக்கம் சொல்லி வரவேற்றார்...

''இந்தப் பக்கம் வேலையாக வந்தேன்... அப்படியே உங்களின் நினைவு வந்தது... உங்களைப் பார்த்துவிட்டுப் போகலாமுன்னு வந்துவிட்டேன்...''

"அதுக்கென்னங்க சார்... நீங்க பார்க்கனுமுன்னு சொல்லி விட்டிருந்தால்... நானே நேரில் வந்து பார்த்திருப்பேன்..."

"அப்படியெல்லாமில்லை... உங்கள் ஆபீஸில் எனக்கொரு காரியம் ஆகவேண்டியிருந்தது... அவ்வளவுதான்..."

"என்னன்னு சொல்லுங்க... முடித்து விடுகிறேன்..."

சுந்தரம் சொ௳னான்... அவர் அது சம்பந்தமான பைல்களை வரவழைத்துப் பார்த்துக் கொண்டிருந்த போது... இயல்பாக வினவுவது போல் வினவினான்...

"காதல் கல்யாணத்தில் உங்களுக்கு விருப்ப முண்டா...?"

"அந்தக் கருமாந்திரததையெல்லாம் நான் ஆதரிக்கிறது இல்லை சார்..."

"உங்கள் வீட்டில் நீங்கள் காதல் கல்யாணம் நடத்தி வைக்க வேண்டி வந்தால்... என்ன செய்வீங்க...?"

"என் வீட்டில் அந்த வார்த்தையைச் சொல்லக் கூட யாருக்கும் தைரியம் வராது..."

"இந்த ஆயிரத்து தொள்ளாயிரத்து... எழுபத்தி ஒன்றில் போய்... பழைய பஞ்சாங்கம் போலப் பேசலாமா? காலம் மாறிக் கொண்டு வருகிறதே..."



"காலம் மாறினாலும் என் கொள்கை மாறாது சார்... காதல்ங்கிற பெயரில் கண்டவங்களயெல்லாம் என் வீட்டில் சேர்த்துக் கொள்ள முடியாது..."

சுந்தரம் மனதிற்குள் திருப்தியாக உணர்ந்தான்... வாகீசனை கல்லூரியை விட்டு அப்புறப்படுத்துவது எளிதான ஒன்றாக மாறிவிட்ட சந்தோசம் அவன் முகத்தில் தெரிந்தது...

"நீங்கள் இப்படிச் சொல்கிறீங்க... உங்க மகன் வாகீசன்... அப்படி நினைக்கவில்லை போல..."

"என்ன சொல்கிறீங்க..."

"அவன் ஒரு ஏழைப் பெண்ணிடம் காதலிப்பதாகச் சொல்லிக் கொண்டிருக்கிறானே..."

"யார் அந்தப் பெண்...?"

"அதைத் தெரிந்து என்ன செய்யப் போகிறீங்க... போய் பெண் கேட்கப் போறீங்களா...?"

"என் உயிர் உள்ளவரை அது நடக்காது..."

"அப்புறம் எதற்கு... தேவையில்லாத பேச்சு... இவன்தான் அந்தப் பெண்ணிடம் அப்படி உளறிக் கொண்டிருக்கிறான்... ஆனால் அந்தப் பெண் அதை ஏற்றுக் கொள்ளவில்லை..."

"நல்ல பெண் போல இருக்கிறது..."

"நல்ல பெண்தான்... ஆனால் இவன் செத்துவிடு வேன்னு மிரட்டுகிறானாமே..."

வாகீசனின் தந்தையின் விழி சிவந்துவிட்டது... சுந்தரம் வேலை முடிந்த பாவனையில் எழுந்து கொண்டான்...

"என்னவோ சார்... என் கவனத்தில் பட்டதைச் சொன்னேன்... நீங்க செய்ய வேண்டியதைச் செய்யுங்க..."

மறுநாள் காலையிலேயே வாகீசனின் தந்தை மகனுடன் வந்து டிஸியை வாங்கிக் கொண்டு போய்விட்டார்...

"மெட்ராஸ் என்ஜினியரிங் காலேஜில் இடம் பார்த்துவிட்டோம் சார்... மிச்சமிருக்கும் படிப்பை அங்கே இவன் படிக்கட்டும்..."

"மெட்ராஸில் படிக்கப் போகிறானா? ஹாஸ்டலில் தங்கியா...?"

"இல்லை சார்... அவனுடைய மாமனார் வீட்டில் தங்கிப் படிக்கப் போகிறான்..."

"மாமனார் வீட்டிலா...?"

"ஆமாம் சார்... எங்க சப்-கலெக்டர் பெண்ணையும் கொடுத்து மீதப்படிப்பையும் படிக்க வைக்கிறேன் என்கிறார்..."

"அதுதானே பார்த்தேன்..." என்று மனதிற்குள் நினைத்துக் கொண்டபடி அவனை வழியனுப்பி வைத்தான் சுந்தரம்...



அனுபமா... வாகீசனின் பிரிவால் பாதிக்கப் பட்டதாகத் தெரியவில்லை... அவள் எப்போதும் போல்... இயல்பாக வகுப்பறையிலும்... வெளியிடங் களிலும் கலப்பாகப் பேசிக் கொண்டு... கால் பாவாமல்... வளைய வந்து கொண்டிருந்தாள்.

சுந்தரத்தின் தகப்பனார்...திடீரென்று காலமாகி விட... சுந்தரம் எல்லாவற்றையும் மறந்து... அந்தத் துயரத்தில் மூழ்கி விட்டான்... அந்தத் துயரத்திலிருந்து மீண்டுவர வழி தெரியாமல்... அதிலேயே புதைந்து அழுந்திக் கொண்டிருந்தபோது... ஒருநாள் அனுபமா அவனைத் தேடி...அவனது வீட்டிற்கே வந்தாள்...

"வணக்கம் சார்..."

"வா அனுபமா... உட்கார்..."

"நீங்கள் உட்கார்ந்த பின் உட்காருகிறேன் சார்..."

சுந்தரம் சோபாவில் அமர்ந்த பின் அவள் அவனுக்கு எதிரே அமர்ந்தாள்... அவள் விழிகள் இரக்கத்துடன் சுந்தரத்தைப் பார்த்துக் கொண் டிருந்தன...

அவளது அருகாமையில் மனம் ஆறுதல் பெறுவதை ஆச்சரியத்துடன் உணர்ந்தான் சுந்தரம்.

"என்ன வேண்டும் அனுபமா..? ஏதும் உதவி வேண்டுமா?"

"உதவி தேவைப்பட்டால்தான் நான் உங்களைத் தேடிவர வேண்டுமா சார்... உங்களைப் பார்ப்பதற்காக வரக் கூடாதா...?"

சுந்தரத்தின் மனதை மயிலிறகால் யாரோ வருடினார்கள்... அவன் மனதில் தென்றல் அடித்தது... மனதிலிருந்த துயரம் மாயமாய் மறைய... அவன் ஆறுதல் பெற்றவனாக அவளைப் பார்த்தான்...

அவளும் அப்போது அவனையேதான் பார்த்துக் கொண்டிருந்தாள்... கருணை ததும்பும் விழிகளுடன்... தாய்மைப் பெருக்குடன் கனிவுடன்... அவனைத்தான் பார்த்துக் கொண்டிருந்தாள்...

## 11

"உங்களின் அப்பா இறந்துவிட்டபோது... துக்கம் விசாரிக்க என் அப்பாவும்... அம்மாவும் வந்திருந்தாங்க சார்... நாங்கள் காலேஜ் பூராவும் இங்கேதான் இருந்தோம்..."

"எனக்கு எதுவும் நினைவில்லை..."

"தெரியும் சார்...இத்தனை நாள்கள் ஆனபின்னா லாவது நீங்கள் துக்கத்தை மறந்திருப்பீங்க என்று நினைத்துத்தான் உங்களைப் பார்க்க வந்தேன்...



ஆனால் நீங்கள் இன்னும் அதே மனநிலையோடுதான் இருக்கறீங்க..."

"என் சின்ன வயதிலேயே தாய் இறந்துவிட்டாங்க அனுபமா... அப்பாதான் தாய்க்குத் தாயாக இருந்து என்னை வளர்த்தார்..."

"அப்போ... அவர் உங்களுக்கு தாயுமானவன்னு சொல்லுங்க..."

அனுபமாவின் இயல்பான பேச்சு...அவனுக்கு துக்கத்திலிருந்து வெளியே வர உதவும் பற்றுக்கோலாக இருந்தது...

"ஆமாம்... எனக்கு அவர் அனைத்துமானவர்... அவர் இன்னொரு கல்யாணம் பண்ணிக் கொள்ள நினைத்திருந்தால்... யார் அவரைத் தடுத்திருக்க முடியும்...?"

"நிஜம்தான்... ஆனால்... அவர் உங்கள் அம்மாவை உண்மையாக நேசித்திருக்கலாம் இல்லையா...?"

"நீ சொல்வதும் நிஜம்தான்... என் அம்மாவும்... அப்பாவும் மிகவும் அன்யோன்யமாய் வாழ்ந்தவர்கள்..."

"உங்களைக் கல்யாணம் பண்ணிக் கொள்ளப் போகிறவள் கொடுத்து வைத்தவள் சார்..."

"என்ன சொல்கிறாய்...?"

ஒரு கோடி சூரியன்கள் கண்களில் பிரகாசிக்க... சுந்தரம் அவளைப் பார்த்தான்...

"ஆமாம் சார்... நீங்கள் இவ்வளவு பெரிய பணக்காரர் என்பதற்காக நான் இதைச் சொல்ல வில்லை... நீங்கள் சாதாரண ஏழையாக இருந்தாலும்... நான் இதே வார்த்தைகளைத்தான் உங்களைப் பார்த்து... மனப்பூர்வமாக சொல்லியிருப்பேன்... பெண்களைப் போற்றும் வீடு உங்களுடையது... உங்களுடைய அப்பாவைப் போலத்தானே... நீங்களும்... வரப்போகும் உங்கள் மனைவியை மனப்பூர்வமாக நேசிப்பீங்க...?"

'இப்போதே உன்னை நேசித்துக் கொண்டுதான் இருக்கிறேன்... அது உன் கண்களுக்குத் தெரிய வில்லையா...? எல்லாவற்றையும் கண்டுபிடிப்பவள்... இதைக் கண்டுபிடிக்காமல் இருக்கிறாயே...!'

அவன் பேசாமல் அவளையே பார்த்துக் கொண்டிருக்க... அவள் சட்டென்று பேச்சை வேறு திசைக்கு மாற்றினாள்...

"எப்போது காலேஜ் பக்கம் வரப் போகிறீங்க சார்..."

"இந்த வாரத்தில் எப்படியும் வந்துவிடுவேன்... காலேஜ் எப்படி நடந்து கொண்டிருக்கிறது...?"

"உங்களைப் பார்க்க முடியவில்லை என்ற ஒரு குறையைத் தவிர வேறு குறை எங்களுக்கு இல்லை சார்..."



'அது என்ன... எல்லோருடனும் உன்னைக் கூட்டுச் சேர்த்துக் கொள்கிறாய்... உனக்கு என்னைப் பார்க்கவேண்டும் போல் இல்லையா...'

அந்த ஒரு நாள் வரக்கூடுமா... என்ற தவிப்போடு மனதில் வினா எழுப்பிக் கொண்டான் சுந்தரம்...அதை உணராமல் தொடர்ந்து பேசிக் கொண்டிருந்தாள் அனுபமா..."

"முகிலன் சார்தான் கெட்டிக்காரத்தனமாய் எல்லாவற்றையும் பார்த்துக் கொள்கிறாரே... அவர் எவ்வளவு கெட்டிக்காரர் தெரியுமா? எங்களின் ஒவ்வொரு கோரிக்கையையும் கேட்டு... உடனுக்குடன் தீர்த்து வைத்தார்... பெரிய அறிவாளி சார்...அவர்..."

முகிலனைப் பற்றிப் பேசும்போது... அனுபமாவின் முகம் ஒளிர்ந்ததைக் கண்ட சுந்தரத்தின் மனதில் அபாயமணி அடித்தது...

'ஒன்று போனால் இன்னொன்றா.. இப்போதுதான் வாகீசனை இவள் வாழ்க்கையிலிருந்து விலக்கி வைத்தேன்... முகிலன் முளைத்து நிற்கிறானா...'

வாகீசன் போய் முகிலன் வந்து நிற்கும் தலைவேதனையில் முகத்தைச் சுளித்தான் சுந்தரம்... அனுபமா அக்கறையுடன் வினாவினாள்...

"என்ன சார்... தலை வலிக்குதா...?"

'ஆமாம்...அதைத்தான் நீ கொண்டு வந்து கொடுத்துவிட்டாயே...!'

"மாத்திரை போட்டுக்கங்க சார்..."

'இது மாத்திரை கொடுத்தால் சரியாகாத வியாதிம்மா... உன் மனதைக் கொடு... சரியாகி விடும்...!'

சுந்தரம் வேலைக்காரரை அழைத்து அவர்களுக்கு காபி கொண்டு வரச் சொன்னான்...

"எனக்கு காபியெல்லாம் வேண்டாம் சார்..."

"எனக்கு வேண்டுமே..."

"நீங்கள் மட்டும் குடிங்க..."

"ஏன் அனுபமா... தனிமையில் கிடப்பவன்... தனியாகத்தான் காபி குடிக்க வேண்டுமா..? கூடச் சேர்ந்து குடிக்க நீ துணைக்கு வரமாட்டாயா...?"

இருபொருள்பட அவன் கேட்பதை உணர மறுத்தவளாக வேலைக்காரர் கொடுத்த காபியை வாங்கிக் குடிக்க ஆரம்பித்த அனுபமா...

"காபி நன்றாக இருக்கிறதே சார்..." என்றாள்...

"ஏன்... என் வீட்டுக் காபி நன்றாக இருக்காதுன்னு நினைத்தாயா?"

"நீங்கள் இவ்வளவு கெஞ்சுதலாகச் சொல்லி காபி குடிக்க வைத்தால் வேறு எப்படி நினைப்பாங்களாம்... சகிக்க முடியாத காபியைக் கூட்டுச் சேர்த்துகிட்டு... குடிக்க நினைக்கறீங்கன்னுதான் நினைச்சேன்..."

மீண்டும் பழைய அனுபமா பேசுகிறாள்... என்ற நினைவில் ரசித்துச் சிரித்தான் சுந்தரம்...



"அப்பாடி... ஒருவழியாய் சிரித்து விட்டீங்க.. நீங்க சிரித்தால்தான் பயமில்லாமல் உங்களோடு பேச முடிகிறது சார்..."

"உனக்குப் பயம் கூட வருமா..?"

"உங்களிடம் வரும்..."

'பயம்தான் வருமா... காதல் வராதா...'

"என்ன சார் யோசனையாய் பார்க்கறீங்க..."

"என்னிடம் உனக்கென்ன பயம்?"

"என்ன சார் அப்படிக் கேட்டு விட்டீங்க... நான் பள்ளிக் கூடத்தில் படிக்கும்போதும் சரி... இப்போது காலேஜில் படிக்கும் போதும் சரி... வாத்தியார்களிடம் பயப்பட மாட்டேன்... ஆனால் உங்களை முதன் முதலில் பார்த்த போதிலிருந்து... உங்கள் கண்டிப்பான முகத்தைக் கண்டால் எனக்குப் பயம்தான்..."

'ஆக... நான் உன்னிடம் என் கண்டிப்பைத்தான் உணர்த்தியிருக்கிறேன்... காதலை இல்லை...'

முகிலன் முந்திக் கொண்டுவிட்ட செய்தியை அறியாமல் சுந்தரம் சிந்தனை செய்து கொண்டிருந் தான்...

## 12

அனுபமா காபியைக் குடித்தபடி... மேல் விழிகளால் வீட்டைச் சுற்றி நோட்டமிட்டாள்...

"என்ன அப்படிப் பார்க்கிறாய்..?"

"உங்கள் வீடு பெரியதாக இருக்கிறது சார்... இங்கே நீங்கள் மட்டும் தனியாகவா இருக்கறீங்க...?"

"இல்லை... சமையல்காரர்... தோட்டக்காரர்... கணக்குப் பிள்ளை... வீட்டு வேலை செய்பவர்ன்னு நாலைந்து வேலையாள்கள் கூட இருக்கிறாங்க..."

"அத்தனை பேரும் ஆண்கள்தானா?"

"ஆமாம்..."

"பெண் வாடையே இல்லை போல... உங்களுக்கு பெண்கள் என்றால் பிடிக்காதா...?"

'நீ பெண்தானே... உன்னை எனக்கு எவ்வளவு பிடிக்குமென்று உனக்குத் தெரியுமா...?'

சுந்தரம் பதில் சொல்லும் முன்னால்... அவளை ஆழமாக ஒரு பார்வை பார்த்தான்... முதன் முதலில் அவளைப் பார்த்தபோது...அவள் முகத்தில் குடிகொண்டிருந்த அந்த பழைய துறுதுறுப்பு அப்படியே இருந்தாலும்... இப்போது வளர்ந்து விட்டிருந்தாள்... இரட்டைப் பின்னல்கள்... நீண்ட ஒற்றைப் பின்னலாக மாறியிருந்தன... நெற்றியில் நீண்ட செந்தூரம் இட்டுக் கொண்டிருந்தவள்... இப்போது வட்ட வடிவ பொட்டிற்கு மாறியிருந்தாள்... கண்களில் மைதீட்டியிருந்தாலும்... முன்போல்... கடைக்கண்ணின் ஓரமாய் அதை இழுத்து விட்டுக் கொள்ளவில்லை... அளவாக...



அழகாக... வெளியே தெரியாத வண்ணம் மைதீட்டியிருந்தாள் பாவாடை தாவணியை விட்டு...சேலைக்கு மாறியிருந்தாள்... பின்னலில் பூச்சூடியிருந்தாள்.

ஒற்றைப் பின்னலை முன்னால் விட்டு ஒய்யாரமாக அமர்ந்து கொண்டிருந்தவளைப் பார்த்தபோது... மனதில் மோகத்தீ கொழுந்து விட்டெறிவதை உணர்ந்தான் சுந்தரம்... அவளை அள்ளி அணைத்துக் கொள்ள வேண்டும் போன்ற தாகம் அவனுக்குள் பொங்கி எழுந்தது... அதைப் படாத பாடுபட்டு அடக்கிக் கொண்டு... அவள் கேட்டதற்கு பதில் கூறினான்...

"இது பெண் வாடை இல்லாத வீடு அனுபமா... இங்கே பெண்களை வேலைக்கு வைத்துக் கொள்வது சரிவராது..."

"ஏன்...?"

"அது அப்படித்தான்... உனக்கு அது புரியாது..."

"நான் ஒன்றும் குழந்தையில்லை..."

"ஆமாமாம்... குழந்தை எப்படி... என்ஜினியரிங் மூன்றாவது வருடம் படிக்குமாம்..."

"நீங்கள் என்னைக் கேலி செய்கிறீர்கள் சார்... முகிலன் சாரும் இப்படியேதான் சொல்கிறார்..."

மீண்டும் முகிலனா...? சுந்தரத்தின் புருவங்கள் உயர்ந்தன... எப்படி இவளிடம் கேட்பது...? அவனுக்கு யோசனையாக இருந்தது...

"முகிலன் இஸ் எ குட் டீச்சர்..."

"யெஸ் சார்... பட்... எனக்கு அதற்கும் மேலே..."

அனுபமாவின் முகம் சிவந்தது...அது உணர்த்திய செய்தியை உணர்ந்த சுந்தரத்தின் மனம் அதிர்ச்சியை உள் வாங்கியது...

'இது எப்படி நடந்தது...? எப்போது நடந்தது...!'

அவனின் அதிர்ச்சியை அறியாதவளாய் அனுபமா தொடர்ந்து சொல்லிக் கொண்டேயிருந்தாள்...

"சார் நீங்கள் எனக்கு கடவுளுக்கு சமமானவர்..."

'உன்னைக் காதலிக்கும் மனிதனாக என்னை நீ நினைக்கவே இல்லையா அனுபமா...?'

"உங்கள் மேல் நான் அளவுகடந்த மரியாதையையும்... பக்தியையும் வைத்திருக்கிறேன்..."

'காதலை மட்டும் வைக்கவில்லை...!'

"உங்களிடம் சொல்லாமல்... இதை நான்.. வேறு யாரிடம் சொல்லப் போகிறேன்...?"

'என்னிடம் சொல்ல... இன்னும் எத்தனை வெடிகுண்டுகளை வைத்திருக்கிறாய்...?'

"முகிலன் சார்... என்னைக் காதலிப்பதாகச் சொன்னார்..."

சுந்தரத்தின் விழிகள் அவளை வெட்டி விடுவதைப் போலப் பார்த்தன...



"வாகீசனும் இதைத்தானே உன்னிடம் சொன்னான்..."

"ஆனால் சார்... நான் வாகீசனைக் காதலிக்கவேயில்லை..."

"இதற்கு என்ன அர்த்தம் அனுபமா...? இப்போது முகிலனை நீயும் காதலிக்கிறாய் என்ற அர்த்தமா?"

இதைக் கேட்கும்போது... தன் இதயம் வலிப்பதை உணர்ந்தான் சுந்தரம்...

"ம்ம்ம்..."

அந்த முணுமுணுப்பில்... சிதறி நொறுங்கிய இதயத்தை மீண்டும் ஒன்று சேர்த்து...இரும்பு மனிதனாக நிமிர்ந்தான் சுந்தரம்...

எதிரே .. நீண்ட பின்னலின் நுனியைத் திருகியபடி... கலைந்து முன்னால் விழும் கூந்தலை ஒதுக்கி விடும் நினைவில்லாமல்... தன் தோற்றத்தைப் பற்றிய அக்கறை சிறிதும் இல்லாதவளாக... இயல்பான வசீகரத்துடன் அமர்ந்திருந்த அனுபமாவையே... விழிகொட்டாமல் பார்த்தான் சுந்தரம்...

'இவள் காணக் கிடைக்காதவள்.... கிடைப்பதற்கு அரியவள்... எனக்கே உரியவள்... எந்தக் காரணத்தைக் கொண்டும் இவளை நான் கை நழுவ விடமாட்டேன்...'

"இது உனக்கு மூன்றாம் வருடம்... இல்லையா அனுபமா?"

"ஆமாம் சார்..."

"படிப்பை முதலில் கவனமாகப் படித்து முடி... காதல் எங்கே ஓடி விடப் போகிறது...? இதை நினைத்து... அதைக் கோட்டை விட்டு விடாதே..."

"என்ன சார் இப்படிச் சொல்லிட்டிங்க... என்னைப் படிக்க வைக்கும் தெய்வம் நீங்க... இது வரை நான்தான் எல்லா வருடங்களிலும் காலேஜ் பர்ஸ்ட் தெரியும்தானே..."

"தெரியும்... ஆனால்... புதிதாக காதலில் விழுந்து வைத்திருக்கிறாயே... அதனால் எச்சரித்தேன்..."

அனுபமா விடைபெற்றுக் கொண்டுபோன பின்னால் சுந்தரம் யோசிக்க ஆரம்பித்தான்.

## 13

முகிலன் எம்.ஈ. படித்தவன்... மிகத் திறமையானவன்... சுந்தரம் பொறியியல் கல்லூரியை ஆரம்பித்ததும்... முதலில் சேர்த்தது முகிலனைத்தான்... அன்றிலிருந்து இன்று வரை... அந்தக் கல்லூரியின் வளர்ச்சிக்கு... அரும்பாடுபடுபவன்...



முகிலனின் உழைப்பை சுந்தரம் நன்றாக உணர்ந்திருந்தான் அதனால்தான் மற்ற கல்லூரிகளில் கிடைக்கும் சம்பளத்தைப் போல் இரண்டு மடங்கு சம்பளத்தை முகிலனுக்கு கொடுத்துக் கொண்டிருந்தான்...

அப்படிப்பட்ட முகிலன்... அனுபமாவிடம் காதல் சொன்னானா? முதன் முதலாக... மிகப் பெரும் போட்டியை... தன் காதல் களத்தில் சந்திக்க வேண்டிய நிர்பந்தத்திற்கு தான் ஆளாகிவிட்டதை உணர்ந்தான் சுந்தரம்...

வாகீசன் எடுப்பார் கைப்பிள்ளை... மற்றவர்களைப் போல தானும் காதலித்துப் பார்க்க வேண்டுமென்று... அசைப்பட்டு... கல்லூரியின் கதாநாயகியாய் வலம் வந்தவளின் காலைப் பிடித்தவன்... அவனை அகற்றுவது பெரிய விசயமேயல்ல...

ஆனால் முகிலன் பக்குவப்பட்ட வயதும்... அறிவும் உள்ளவன்...இவன் வாகீசனைப் போல... மனமுதிர்ச்சி இல்லாதவனல்ல... எதையும் ஆராய்ந்து அறியும் திறன் படைத்தவன்... மிகத் திறமைசாலி... சுந்தரத்தின் கல்லூரியை விட்டு வேறு எந்தக் கல்லூரிக்குப் போனாலும்... உடனே வேலைகிடைத்து விடும் திறமையும்... படிப்பும் உள்ளவன்...

இத்தனைக்கும் மேலாக... அழகிலும்... கம்பீரத்திலும் சுந்தரத்திற்கு இணையாக நிற்கக் கூடியவன்...

அவன் அனுபமாவைக் காதலிக்கிறான் என்றால்... சுந்தரம்... பக்குவமாக... தன் அடியை எடுத்து வைக்க வேண்டும்...

சுந்தரம் தன் சோகத்திலிருந்து விடுபட்டு அவசரமாய் கல்லூரிக்குத் திரும்பினான்... முகிலனை அழைத்து கல்லூரியின் செயல்பாடுகள் தடையில்லா மல் நடந்ததா என்று விசாரித்தான்...

பேச்சின் ஊடே... இயல்பாகக் கேட்பது போல்... முகிலனின் குடும்ப விவரங்களைக் கேட்டுத் தெரிந்து கொண்டான்...

முகிலனின் குடும்பத்தைப் பற்றி லேசு... பாசாகத்தான் இதுவரை சுந்தரம் தெரிந்து வைத்திருந் தான்... அதிகமாக கேட்டுக் கொண்டதில்லை...இன்று தெரிந்து கொள்ள வேண்டிய அவசியம் வந்து விட்டதால்... குடைந்து... குடைந்து கேள்விகள் கேட்டான்...

''அப்பா... அம்மா எப்படியிருக்கிறாங்க முகிலன்...'

''நன்றாக இருக்கிறாங்க சார்...''

''அப்பா விவசாயிதான்... இல்லையா...?''

''ஆமாம் சார்... ஆனால்... என் படிப்புக்காக... கிராமத்தில் இருந்த வீடு... நிலம்... எல்லாவற்றையும் விற்றுவிட்டார்...''



''ஓ... நீங்கள்தான் குடும்பத்திற்கு மூத்த மகனா...?''

''ஆமாம் சார்... எனக்குப் பின்னால்...இரண்டு தம்பிகளும்... மூன்று தங்கைகளும் இருக்கிறாங்க...''

'அரை டஜன் பிள்ளைகளா... பரவாயில்லை...!'

''குடும்பம் கிராமத்தில் இல்லையென்று நினைக்கிறேன்... அவங்களை தஞ்சாவூருக்கு அழைத்து வந்து விட்டதாகச் சொன்னீங்களே...''

''ஆமாம் சார்... கிராமத்தில் வீடும் இல்லை... உழைக்க நிலமும் இல்லையெனும் போது... அங்கேயிருந்து என்ன செய்வது? அதோடு... என்னைப் போலவே... என் தம்பிகளும் படிக்க வேண்டாமா? தங்கைகளுக்கும் கல்யாணம் ஆக வேண்டுமே... அதற்கு டவுனில் இருப்பதுதான் வசதியாக இருக்கும்...''

''உங்களின் சம்பளம்... குடும்பம் நடத்த சரியாக இருக்கிறதா முகிலன்...?''

''நீங்கள்தான் அதிக அளவு சம்பளம் தருக நீங்களே சார்... வறுமையில்லாமல்... இருக்கிறோம்...''

இதை மனதிற்குள் குறித்துக் கொண்டான் சுந்தரம்... முகிலன் செழுமையாக வாழ்வதாகக் குறிப்பிடவில்லை... வறுமையில்லாமல் வாழ முடிவதாகத்தான் சொல்கிறான்...

"தம்பிகள் என்ன படிக்கிறாங்க...?"

"மூத்தவன் பட்டப்படிப்பு படிக்கிறான்.. இளையவன் பி.யு.ஸி. படிக்கிறான்..."

"தங்கைகள் படிக்கவில்லையா...?"

"அவர்களும் எஸ்.எஸ்.எல்.ஸி. வரை படித்திருக்கிறாங்க சார்..."

"அவர்களையும் பட்டப்படிப்பு படிக்க வைக்கலாமே முகிலன்..."

"அதற்கான வசதி வேண்டாமா சார்...? அதோடு அவங்களுக்கு கல்யாணம் பண்ணிப் பார்க்க வேண்டுமென்றுதான் என் அப்பாவும்...அம்மாவும் விருப்பப்படுகிறாங்க..."

"ம்ம்... அவங்களுக்கு ஏதாவது நகைகள்... இப்படிச் சேர்த்து வைத்திருக்கிறீங்களா...?"

"இல்லை சார்... எவ்வளவு பணம் வந்தாலும் செலவாகும் சூழ்நிலையில் நாங்கள் இருக்கிறோம்... இதில் எப்படித்தான் என் தங்கைகளை கரை சேர்க்கப் போகிறேனோ..."

முகிலனின் வார்த்தைகளில் கவலை தொனித்தது... சுந்தரம் வேறு பேச்சிற்கு தாவினான்... அவன் கேட்டதற்குப் பதில் சொல்லிவிட்டு... முகிலன் அறையை விட்டு வெளியேறிவிட்டான்...



அன்று மாலை... கல்லூரியைச் சுற்றி வலம் வந்தபோது...மாடிப்படிகளின் அடியில் நின்று... சுந்தரம் இறங்கி வருவதைக் கவனிக்காமல்... முகிலனும்... அனுபமாவும் பேசிக் கொண்டிருந்ததை... சுந்தரம் கேட்க நேர்ந்தது...

"அனுபமா... இன்றைக்கு நீ எவ்வளவு அழகாக இருக்கிறாய் என்று உனக்குத் தெரியுமா...?"

"இதையேதான்... தினமும் சொல்லிக் கொண்டிருக்கறீங்க... வாய்தான் உங்களுக்கு வலிக்க மாட்டேன் என்கிறது..."

"உனக்கு அரட்டை அடிக்க வாய் வலிக்கிறதா...? அது போல... உன் அழகை ரசித்துப் பேச... எனக்கும் வாய் வலிக்காது..."

"போதுமே... இந்த அரட்டையை காதலிக்கச் சொல்லி... யார் உங்களிடம் கெஞ்சினாங்களாம்..."

"நிச்சயமாய் நீ கெஞ்சவில்லைதான்... பாலை வனத்தின் சுடுமணலில் நடந்து கொண்டிருப்பவனின் முன்னால் சோலை தெரிந்தால் அவனுக்கு எப்படியிருக்கும்...? அப்படி எனக்குக் கிடைத்த பாலைவனச் சோலை நீ..."

முகிலன் உணர்ச்சி வசப்பட்டுக் கூறுவதை சுந்தரம் உணர்ந்தான்.

# 14

முகிலனின் உணர்ச்சிமயமான வார்த்தைகளைக் கேட்டு கலகலவென்று சிரித்தாள் அனுபமா...

"ஹலோ சார்... இப்படி சோக ரசத்தை பிழிந்து கொண்டே பேசினால்... எனக்குப் போரடிக்கும்... எனக்கு அழுவாச்சியே வராது...இப்படி சிவாஜி கணேசன் டயலாக்கை விடாமல் வேறு டயலாக் பேசுங்களேன்..."

சுந்தரத்தின் முகத்தில் புன்னகை அரும்பியது... இதுதான் அனுபமா... எவரையும் சோகத்திலிருந்து மீட்டு...சிரிக்க வைத்துவிடும் வல்லமை படைத்தவள்... இலகுவாக வாழ்க்கையை எதிர்கொள்பவள்... பாரம் சுமக்கும் முகிலனால்... இவளிடம் இளைப்பாற விரும்பாமல் எப்படி இருக்க முடியும்...?

முகிலனும் நகைப்பது சுந்தரத்தின் காதுகளில் விழுந்தது...

"சிவாஜி கணேசன் டயலாக் வேண்டாமா...? வேறு என்ன டயலாக்கைப் பேசவேண்டும்...?"

"எம்.ஜி.ஆர். போல் இருக்க வேண்டாமா...? அவரைப் பாருங்கள்... சும்மா.. டிஷ்யூம், டிஷ்யூம் என்று சண்டை போட்டு தூள் பரத்துகிறாரே.... அவரைப் போல் இருங்களேன்..."



"உனக்கு சிவாஜியின் நடிப்பு பிடிக்காதா...?"

"யாருக்குத்தான் அவரின் நடிப்பைப் பிடிக்காது... எனக்கு ரொம்பப் பிடிக்கும்... நடிப்பென்றால் அவர் ஒருத்தர்தான்... நடிகர் திலகம் என்றாலும் அவர் ஒருவர்தான்..."

"பின்... எம்.ஜி.ஆரைப் புகழ்கிறாயே..."

"எம்.ஜி.ஆரை வேறு வகையில் எனக்குப் பிடிக்கும்... அவரின் படங்களில துக்கம்... துயரம்... என்பதே இருக்காது... எல்லாமே சுபம்தான்..."

"சென்டிமென்ட் இருக்க வேண்டாமா...?"

"ஏன்... எம்.ஜி.ஆரின் படங்களில் அம்மா சென்டி மென்ட் இல்லையா... தங்கை தம்பி பாசம் இல்லையா...? அதற்காக சும்மா... எப்போது பார்த் தாலும் சோக ரசம் பிழிந்து கொண்டு இருக்க வேண்டுமா...?"

அனுபமா என்னவோ விளையாட்டாகத்தான் இதைச் சொன்னாள்... ஆனால்...

"உனக்குத் தாய் தகப்பனின் மேல் பாசம் வைப்பதும்... தம்பி தங்கைகளின் பொறுப்பை சுமப்பதும்... சோக ரசம் பிழிவதைப்போல இருக் கிறதா...?" என்று கேட்ட முகிலனின் குரலில் ஒரு வித்தியாசம் தொனித்தது...

அந்த வித்தியாசத்தின் வேரைச் சட்டென்று இனம் கண்டு கொண்டான் சுந்தரம்... முகிலனை அனுபமாவின் பாதையில் இருந்து விலக்க... அவனுக்கு நூல் கிடைத்துவிட்டது...

''பின்னே இல்லையா... இப்போது சிவாஜியையும்... எம்.ஜி.ஆரையும் விட்டுவிட்டு... நாம்... நம் கதையைப் பற்றிப் பேசுவோமா...?'' அனுபமா துள்ளலான குரலில் கேட்டாள்...

''ஊஹூம்... எனக்கு வீட்டிற்குப் போக வேண்டும்... என் அப்பாவுக்கு காய்ச்சல்... அம்மாவுக்கு கால்வலி... இரண்டு பேரையும் டாக்டரிடம் காண்பிக்க அழைத்துக் கொண்டு போகவேண்டும்...''

''ஐயையோ... உங்கள் வீடே நோயாளிகளின் கூடாரம் போல் இருக்கிறதே... பரவாயில்லை... உங்கள் குடும்பத்திற்கு வைத்தியம் செய்தாலே போதும்... அந்த டாக்டர் சொந்தமாய் ஆஸ்பத்திரியே கட்டிவிடுவார்...''

மீண்டும் அனுபமா நகைக்க... முகிலன் கோபமாய் அவளை அதட்டினான்...

''அனுபமா... வாயை அடக்கிப் பேசு...''

அவனின் கோபத்தை உணர்ந்தவள் மிரண்டு விழிப்பதைக் கண்டதும்... முகிலனின் கோபம் கொஞ்சம் தணிந்தது...

''நான் விளையாட்டாகத்தானே பேசினேன்...?''

''எதை விளையாட்டாய் பேசவேண்டும்... எதைப் பேசக் கூடாதுன்னு உனக்குத் தெரிய மாட்டேன் என்கிறதே...''

முகிலன் சட்டென்று போய்விட்டான்... அனுபமா துக்கத்துடன்... மாடியின் கைப்பிடி சுவரில் சாய்ந்து



கண்மூடி நின்றிருந்தாள்... முகிலன் போய்விட்டதை உறுதிப்படுத்திக் கொண்டு சுந்தரம் கீழே இறங்கினான்.

''அனுபமா...''

இதமான அவனது அழைப்பில் விழி திறந்த அனுபமாவின் விழிகளில் நீர் கோர்த்திருந்தது...

''ஏன்... சோகமாக நிற்கிறாய்...? நீ இப்படி நின்று நான் பார்த்ததில்லையே... எப்போதும் விளையாட்டுத் தனமாய் இருப்பவளாயிற்றே நீ...? என்னம்மா விசயம்...?''

''அதுதான் தவறாம்...?''

''யார் அப்படிச் சொன்னது...?''

''முகிலன்...''

''ஏன் அப்படிச் சொன்னான்...''

சுந்தரம் அறியாதவன் போல வினவி... அனுபமாவின் வாயால் நடந்ததைச் சொல்ல வைத்தான்... பின்... யோசனையுடன் அவளைப் பார்த்துக் கொண்டே கூறினான்...

''நானே இதை உன்னிடம் சொல்ல வேண்டுமென்று நினைத்தேன் அனுபமா... முகிலன் பணத்தில் பெரிய குடும்பத்தில் பிறந்தவனில்லை...அளவில் பெரிய குடும்பத்தில் பிறந்தவன்... தாய்.. தகப்பன்... ஐந்து தம்பி தங்கைகள்... இவர்கள் அனைவரையும் காப்பாற்ற வேண்டிய பொறுப்பில் இருப்பவன்...''

"நான் இதைக் குறையாக சொல்லவில்லையே சார்..."

"ஆனால்... குடும்பப் பொறுப்பைச் சுமந்து கொண்டிருப்பவனிடம் சிரிப்பை நீ எதிர்பார்க்கக் கூடாது... சிரிக்கச் சிரிக்க பேசவும் கூடாது..."

"என்ன சார் இது... எப்போதும் அழுது வடிந்து கொண்டிருக்க வேண்டுமா? என்னால் அது முடியாதே சார்..."

"முடியவேண்டும்... இல்லாவிட்டால்... காலம் முழுவதும் கஷ்டப்படப் போவது நீதான்..."

அனுபமாவின் மனதை ஒரு கலக்கு கலக்கி விட்டு... முகிலனின் குடும்ப நிலைமையை தனக்குச் சாதகமாக்கிக் கொள்ள முனைந்தான் சுந்தரம்.

## 15

சுந்தரத்தின் நிலங்களை குத்தகைக்கு எடுத்திருந்த மணிவாசகம் சுந்தரத்தின் வீட்டிற்கு குத்தகைப் பணத்தை கொடுத்து விட்டுப் போவதற்காக வந்திருந்தார்...

எப்போதும் அவர் வந்தவுடன்... ஒரிரு வார்த்தைகள் பேசி... அவரை உடனே அனுப்பி வைத்து விடும் வழக்கமுள்ள சுந்தரம்... என்றுமில்லாத



வகையில்... அன்று அவருடன் அமர்ந்து பேசிக் கொண்டிருந்தது... அவருக்கு வியப்பாக இருந்தது...

"உங்களுக்குத்தான் நிறைய நிலங்கள் இருக்கின்றதே அதற்கு மேலும் ஏன் குத்தகைக்கு பயிர் செய்கிறீங்க..."

"உங்களுக்கும் நிறைய பணம் இருக்கிறது... இருந்தும் ஏன்... ஒரு தொழிலுக்கு பல தொழில்களைச் செய்கறீங்க..."

தன்னை பேச்சில் மடக்கி விட்ட மாணிக்க வாசகத்தைப் பார்த்துச் சிரித்தான் சுந்தரம்.

"என்னவோ போங்க... நீங்க... என் அப்பாவைப் போலவே பேசுகிறீங்க... அதனாலேயே... இன்றைக்கு உங்களிடம் பேசிக் கொண்டிருக்கனும் என்று எனக்குத் தோன்றுகிறது..."

"இதுதான் விசயமா...?" என்று மாணிக்கவாசகம் ஆதரவுடன் சுந்தரத்தைப் பார்த்தார்...

"ஆடின காலும்... பாடின வாயும் நிற்காதுன்னு சொல்லுவாங்க தம்பி... பணம் சம்பாதிக்கப் பழகிக் கொண்டவன் அதைப் பெருக்கனும்னுதான் நினைப்பான்..."

"உங்களுக்கு இருப்பது ஒற்றைப் பெண்ணாச்சே... அதனால்தான் கேட்டேன்..."

"இருந்தும்... என் உழைப்பு என்னை ஒரு இடத்தில் நிற்க விடமாட்டேன் என்கிறதே..."

"பெண் படித்திருக்கிறதா...?"

"எங்கே தம்பி... அதற்கு படிப்பு ஏறவில்லை... நான்காம் கிளாஸ் வரைக்கும் படிக்கிறதுக்கே படாதபாடு பட்டு... ஒவ்வொரு கிளாஸிலேயும் மூன்று வருடம் உட்கார்ந்து வந்தது... போதாக் குறைக்கு பெரிய மனுஷியானதும் பள்ளிக் கூடத்திற்கு போகவிட மாட்டேன்னு என் பெண்டாட்டி வீட்டோடு அதை நிறுத்திவிட்டாள். எழுதப் படிக்கத் தெரியும்... அவ்வளவுதான்..."

"இந்தக் காலத்தில அதுவே பெரிய விசயம் தானே... பெண்ணுக்கு மாப்பிள்ளை தேடுவதாகக் கேள்விப்பட்டேனே..."

"ஆமாம் தம்பி..."

"என்ன மாதிரி மாப்பிள்ளையை எதிர் பார்க்கறீங்க...? நிறைய நிலபுலன்கள்... தோட்டம் துரவுன்னு இருக்கிற மாப்பிள்ளையாகத்தானே பார்ப்பீங்க...?"

"பயிர் தொழிலெல்லாம் என்னோடு போகட்டும் தம்பி... என் பெண்ணுக்கு வரப் போகிற மாப்பிள்ளை... பெரிய படிப்பு படிச்சவனாக இருக்கனும்... ஒற்றைப் பெண்ணைப் பெற்று வைச்சிருக்கேன்... என் சொத்து பூராவும் யாருக்கு...? என் பொண்ணுக்குத்தானே..."

"ஓஹோ... எனக்குத் தெரிந்த பையன் ஒருவன் இருக்கிறான்... இன்ஜினியர்... என் காலேஜில்தான்



வேலை பார்க்கிறான்... பார்க்க நன்றாக இருப்பான்... குணத்தில் தங்கம்..."

"நிசமாவாக சொல்கிறீங்க...?"

"பின்னே பொய்யாகவா சொல்கிறேன்...? ஆனால் ஒரு விசயம்தான் இடிக்கிறது..."

"என்ன விசயம்...?"

"பையன் ஏழைக் குடும்பத்தில் பிறந்தவன்..."

"அதற்கென்ன... என் மருமகனாகிவிட்டால்... அப்புறம் எப்படி அவன் ஏழையாக இருப்பான்..."

"அது மட்டுமில்லை...."

"வேறு என்ன...?"

"பையன்தான் குடும்பத்திற்கு மூத்தவன்... இரண்டு தம்பிகள் படித்துக் கொண்டிருக்கிறாங்க... மூன்று தங்கைகள் கல்யாணத்திற்கு தயாராக இருக்கிறாங்க..."

இப்போது மணிவாசகத்தின் முகத்தில் சிந்தனை ரேகைகள் படிந்தன... அவர் தாடையை யோசனையாக தடவிக் கொண்டார்...

"என்ன தம்பி இப்படிச் சொல்கிறீங்க..."

"இன்னொன்றும் இருக்கிறதே..."

"இன்னுமா...? அதுதான் என்ன...?"

''அவனுடைய அப்பாவும்... அம்மாவும் நோயாளிகள்... மருத்துவச் செலவை வேறு அவன்தான் சமாளிக்க வேண்டும்...''

''இத்தனை சுமைகளை வைத்துக் கொண்டிருப்பனுக்கு எப்படித் தம்பி பொண்ணு கொடுப்பது...?''

''இது கல்யாண விசயம் பாருங்க... எதையும் ஒளிவு மறைவில்லாமல் சொல்லி விடனும்... அதனால் தான் நான் எல்லாவற்றையும் விவரமாகச் சொன்னேன்...''

''நீங்க எதைப் பேசினாலும் சரியாகத்தானே பேசுவீங்க தம்பி...''

''நம்ப ஊரு பண்ணையாரு மகன் வீட்டுக்கு ஒரே பிள்ளைதான்... கணக்கு வழக்கில்லாத சொத்து... அவனுக்கு பேசிப் பார்க்க வேண்டியதுதானே...''

''அவங்களே பெண் கேட்டுவிட்டாங்க... ஆனால் நான் ஒரே வார்த்தையிலே முடியாதுன்னு சொல்லிப் புட்டேன்...''

''ஏன் அப்படிச் சொன்னீங்க...?''

''சொத்து சுகம் இருந்தால் போதுமா...? குடி... கூத்தின்னு அலைகிறவனுக்கு பெண்ணைக் கொடுக்கவா... நான் பெற்று... வளர்த்து வைத்திருக்கிறேன்...?''

''பிக்கல்... பிடுங்கல் இல்லாத குடும்பமாச்சே...''



''எல்லாத்துக்கும் சேர்த்து... மாப்பிள்ளை பிடுங்கி எடுப்பானே...''

''பொறுப்புகள் இல்லையே...''

''அவனே பொறுப்பில்லாத மாப்பிள்ளை... அவன் என் பெண்ணை பொறுப்பாக பார்த்துக் கொள்ள மாட்டான்...''

''சுமைகள் இல்லாத மனிதனாச்சே...''

''பாரம் சுமக்கவும் ஒரு தகுதி வேண்டாமா? பாரம் சுமக்கிறவன் பலசாலி தம்பி...''

இதைச் சொன்ன மணிவாசகத்தின் முகத்தில் மின்னல் பரவியது... அவர் ஒரு முடிவோடு சுந்தரத்தைப் பார்த்தார்.

## 16

சுந்தரம் கெட்டிக்காரன்... இருபது வயதிலேயே... மிகப் பெரிய சாதனைகளைச் செய்தவனுக்கு... மணிவாசகத்தின் மனதைத் திருப்புவது மிகவும் எளிதான ஒன்று... அவன் சொல்லி... அவர் செய்வதுபோல் இல்லாமல்... அவர் வாயாலேயே... முகிலனின் உயர்வுகளை சொல்ல வைத்து விட்டான் சுந்தரம்...

"இதை நான் ஏன் மறந்து போனேன் தம்பி...?"

"எதைச் சொல்கிறீங்க...?"

"நீங்க சொன்ன பையனிடம் இருக்கிற இத்தனை குணங்களும் ஏன்... என் கண்ணுக்குத் தெரிய வில்லை...?"

"புரியவில்லையே..."

"இந்தக் காலத்தில் இப்படி ஒரு பையனா...? ஆச்சரியமாய் இருக்கு தம்பி... வயசான தாய்... தகப்பனைப் பொறுப்பாகப் பார்த்துக் கொள்கிறவன்... பெண்டாட்டியை எப்படித் தாங்குவான்...? தம்பி... தங்கைகளின் பொறுப்பை பாரமாக நினைக்காமல் பாரம் சுமக்கிறவன்... தன்னுடைய குடும்ப பாரத்தை எப்படிச் சுமப்பான்...? கொஞ்சம் கூட முகம் சுளிக்காமல் இத்தனையையும் தாங்கி நிற்கும் பலவான்... எங்கே தேடினாலும் நமக்குக் கிடைக்க மாட்டான் தம்பி... எப்படியும் இவனை வளைத்துப் போடவேண்டும் தம்பி..."

என்னவோ... நிலத்தை வளைத்துப் போடுவதைப் பற்றிப் பேசுவது போல்... அவர் பேசவும் சுந்தரத்திற்கு சிரிப்பு வந்துவிட்டது... அதை மறைத்துக் கொண்டு பேசினான்...

"எப்படின்னு சொல்லுங்க... தம்பிகளின் படிப்பு பொறுப்பு அவனுக்கு இருக்கே..."

"நம்ம மாந்தோப்பு குத்தகையில் நான் ஒரு வருடம் சம்பாதிப்பது... அந்தப் பையன்களின் படிப்புக்கு



காலம் பூராவும் போதுமே தம்பி... படிப்புச் செலவுக்கு பணம் கொடுக்க நானாச்சு..."

"கல்யாண வயதில் மூன்று தங்கைகளை வைத்துக் கொண்டு அவன் முதலில் கல்யாணம் பண்ணிக் கொள்வானா?"

"என் ஒன்று விட்ட தம்பியின் மகன்களுக்கு இன்னும் கல்யாணம் ஆகவில்லை... டவுனில் இருக்கிற நாகரிகமான பெண்கள் கிடைத்தால் வேண்டாமுன்னா சொல்லிவிடுவானுக... அவங்க கல்யாணங்களைப் பண்ணிவிட்டே... என்பொண்ணு கழுத்தில் மாப்பிள்ளை தாலியைக் கட்டட்டும்..."

"அதற்குள் மாப்பிள்ளை உறவு முறை கொண்டாடியாகி விட்டதா..." சுந்தரம் மனதிற்குள் சிரித்துக் கொண்டான்...

அவனுக்கு மணிவாசகத்தின் குணம் தெரியும்... ஒன்றை மனதில் நினைத்து விட்டால்... அதை முடிக்காமல் உட்கார மாட்டார்... இப்போது முகிலனை மருமகனாக்கிக்கொள்ள தீர்மானித்துவிட்டார்... இனி சுந்தரமே அவரைத் தடுக்க நினைத்தாலும்... அவர் நிற்கமாட்டார்...

"நீங்க பாட்டுக்கு பொண்ணுகளுக்கு கல்யாணம் பண்ணிவிடலாமுன்னு சொல்லிட்டீங்க... சீர் செனத்தி... நகை நட்டுக்கெல்லாம் முகிலன் எங்கே போவான்...? பாவம்... அவன் சம்பாதிப்பது அவர்களின் வயிற்றுப் பாட்டுக்கும்... குடும்பச் செலவிற்குமே சரியாகி விடுகிறது..."

''கடல் தண்ணியில்... ஒரு குடம் தண்ணீர் குறைந்தால் கடல் வற்றிப் போகாது தம்பி...''

''நீங்க என்னதான் சொல்ல வருகிறீங்க...?''

''என் ஒரு வருச மகசூல் பணத்தில்... பத்தில் ஒரு பங்கை நான் செலவளித்தாலே போதும்... அந்த மூன்று பெண்களையும் கரையேற்றி விடலாம்...''

''கல்யாணம் பண்ணி வைத்து விட்டால் மட்டும் போதுமா? காலம் பூராவும்... அந்தப் பெண்களுக்கு பிறந்த வீட்டுச் சீர் அனுப்ப வேண்டாமா...?''

''என் மகள் இல்லாதவன் பெற்ற பெண் ணில்லை... நாத்தனார்களுக்கு கடைசி வரைக்கும் குறைவில்லாமல் செய்வாள்...''

''சரிங்க... போகிற இடத்தில அந்தப் பெண்கள் வளமான வாழ்க்கையை வாழ வேண்டாமா...?''

''என்னளவு சொத்து இல்லாவிட்டாலும்... என் ஒன்றுவிட்ட தம்பிக்கு... என்னில் பாதியளவு சொத்து இருக்கிறது... என்ன ஒன்று... அதை மூன்றாக பாகம் பிரிக்க வேண்டும்... குறைவில்லாத வசதிகளோடு தான்... அந்தப் பெண்கள் வாழ்வார்கள்...''

''என்னவோ போங்க... நான் யதார்த்தமாய் ஒரு வார்த்தை சொன்னால்... நீங்கள் அதையே உடும்புப் பிடியாய் பிடித்துக் கொண்டு விட்டீங்களே...''

''கானக் கிடைக்காத பொருள் கண்ணுக்குத் தட்டுப்பட்டால்... உடனே அதை எடுத்துப் பத்திரப்



படுத்திக் கொள்ள வேண்டும்... இல்லாவிட்டால்... வேறு யாராவது அஃதைத் தட்டிக் கொண்டுபோய் விடுவாங்க...''

''இப்ப என்னை என்னதான் பண்ணச் சொல்கிறீங்க...?''

''அந்தப் பையனின் வீட்டில் பேசி... ஒரு நல்ல நாள் பார்த்துப் பெண் பார்க்க வரச் சொல்லுங்க...''

''நீங்க இத்தனை தூரம் ஆர்வமாய் கேட்கும்போது தட்டிக் கழிக்க எனக்கும் மனதில்லை...ம்ம்... நான் பேசிப் பார்க்கிறேன்...''

''பேசிப் பார்க்கிறேன்னு சொல்லறீங்க... முடித்துவிட்டு வருகிறேன்னு சொல்லுங்க...''

''என்னால் முடிந்ததைச் செய்கிறேன்...''

''உங்களால் முடியாதது எதுவும் இந்த உலகத்தில் இருக்கிறதா?''

'இருக்கிறது...!' என்று மனதிற்குள் கூறிக் கொண்டான் சுந்தரம்...

'என்னால் முடியாதது ஒன்று இந்த உலகத்தில் இருக்கிறது... அதுதான் அனுபமாவின் காதலை அடைவது... அதை அடையத்தான் இத்தனை பாடுபடுகிறேன்... அவள் காதலைக் குலைக்கும் வில்லனாக நான் ஆகவேண்டிய துர்பாக்கிய நிலைக்கு நான் ஆளாவதும்... அவளது காதலை அடை வதற்காகத்தான்...!'

ஆனால்... அவன்தான் வில்லனென்று ஒருவர் கூட சுந்தரத்தைச் சந்தேகப்படவில்லை... மாறாக... அவனை கதாநாயகன்... ஊராரின் துயர் துடைக்கும் வள்ளல் என்று முகிலனின் வீட்டில் கொண்டாடினார்கள்..

அனுபமா மனம் உடைந்தாள்... ஆறுதலுக்கு தலைசாய்த்துக் கொள்ள... சுந்தரத்தின் தோள்களைத் தான் அவள் நாடினாள்... அவள் துயர் துடைக்கும் தோழனாக சுந்தரம் அவளைத் தோள் தாங்கினான். அவளைக் காதலியாக நினைத்து மனதில் ஏங்கினான்.

## 17

எஸ்.எஸ். பொறியியல் கல்லூரியில் மூன்றாவது ஆண்டு படிப்பை முடித்துவிட்டு... நான்காவது ஆண்டில் காலடி வைத்திருந்த அனுபமா... கல்லூரி ஆண்டு விழாவில் அந்த ஆண்டும் பாட மேடையேறினாள்...

எப்பொழுதும் எல்லா வேலைகளையும் இழுத்துப் போட்டுக் கொண்டு செய்யும் முகிலன்... புதிதாக திருமணம் ஆனதால்... ஒதுங்கி நிற்க... இந்த முறை சுந்தரமே... எல்லாவற்றிலும் தலை கொடுத்தான்...

புது மாப்பிள்ளையாகி விட்ட உற்சாகம் முகத்தில் தெரிய... பணக்கார வீட்டின் மருமகனாகி விட்ட செழுமையுடன்... கழுத்தில் மைனர் செயினும்...



கையில் தங்கச் செயின் மோட்ட கைக்கெடிகாரமும்... விரல்களில் வைர மோதிரமும் பளபளக்க... அமர்த்தலாக முன் வரிசையில் வந்து அமர்ந்து கொண்ட முகிலனைப் பார்த்தபடி பாட ஆரம்பித்தாள் அனுபமா...

*"காவேரி ஓரம்... கவிசொன்ன காதல்...*
*கதைசொல்லி நான்பாடவா...?*
*உள்ளம் அலை மோதும் நிலை கூறவா...?*
*எந்தன் கனிவான காதல்... முடிவாருமுன்னே...*
*கனவான கதை கூறவா...?*
*பொங்கும்... விழிநீரை அணைபோடவா...?"*

முகிலனின் முகம் மாறிவிட்டது... சுந்தரத்தின் மனம் அவளது சோகம் கண்டு தடுமாறியது... அனுபமாவின் விழிகளில் நீர் நிறைந்திருந்தது... அவளது பார்வை சூன்ய வெளியில் நிலைத்திருக்க... அவள் பாடலைத் தொடர்ந்தாள்...

*அழியாது காதல்... நிலையானதென்று...*
*அழகாக கவி பாடுவார்...*
*வாழ்வில் வளமான மங்கை...*
*பொருளோடு வந்தால்...*
*மனம் மாறி உறவாடுவார்...*
*கொஞ்சும் மொழி பேசி வலை வீசுவார்...*
*தன்னை மலிவாக விலை பேசுவார்..."*

முகிலனின் முகம் இருண்டே விட்டது... அனுபமாவின் பாடலின் ஒவ்வொரு வரிகளும்... சாட்டையடியாய் அவன் நெஞ்சில் விழுந்தன... அவன் வேதனையோடு கண்களை இறுக மூடிக்கொண்டான்...

*பொருளோடு வாழ்வு... உருவாகும்போது*
*புகழ்பாட பலர் கூடுவார்...*
*அந்தப் புகழ் போதையாலே...*
*எளியோரின் வாழ்வை...*
*மதியாமல் உரையாடுவார்...*
*ஏழை விதியோடு விளையாடுவார்...*
*அன்பை மலிவாக எடைபோடுவார்...''*

அனுபமாவின் மனதில் திருமணம் செய்து கொள்ளப் போவதற்கு முன்... கடைசியாக முகிலன் அவளைச் சந்தித்தபோது கூறிய வார்த்தைகள் எழுந்து நின்றன...

''நான் பாரம் சுமப்பவன் அனுபமா... என் பாரத்தை நான் சுமக்கத் தேவையான சக்தி... உன் காதலால் எனக்குக் கிடைக்கலாம்... ஆனால் ஒருபோதும் என் பாரத்தை இறக்கி வைக்க உன்னால் முடியாது...''

''அதைப் பகிர்ந்து கொள்ள முடியுமே...''

''முழுவதுமாக பாரம் சுமப்பதில் இருந்து கிடைக்கும் விடுதலை என் கண் முன்னால் வந்து நிற்கும்போது... பாதிப் பாரத்தை நான் சுமந்து கொண்டு... மீதிப் பாரத்தை உன் தோளில் ஏற்றி வைக்கச் சொல்கிறாயா...?''

''நான் அதை சுமையாக நினைக்கமாட்டேன்...''

''நான் நினைப்பேன்...''

''நீங்கள் எனக்காகப் பார்ப்பது போல் நடிக்கா



தீர்கள் முகிலன்... ஒரு முடிவோடுதான் நீங்கள் என்னைப் பார்க்க வந்திருக்கிறீங்க...''

''உண்மைதான் அனுபமா... நீ புத்திசாலி... கண்டுபிடித்து விட்டாய்... நீயும் நானும் சேர்ந்து உழைத்தாலும்... என் தம்பி... தங்கைகளுக்கு... இப்போது கிடைக்கப் போகும் வளமான வாழ்க்கையில் ... பாதியளவு கூட... ஏன் நூறில் ஒரு பங்குகூடக் கொடுக்க முடியாது... கனவிலும் நினைக்காத வளமான வாழ்க்கை என் தம்பி... தங்கைகளுக்கு தேடி வந்திருக்கிறது... நான் அதை கை நழுவ விட முடியாது...''

''அப்போது... என்னைக் காதலிப்பதாக நீங்கள் சொன்னது என்னவானது முகிலன்...?''

''அது காற்றோடு போய்விட்டது...''

''என்னைப் பாலைவனச் சோலைன்னு சொன்னீங்களே...''

''அருகில் வந்து பார்த்த பின்னால்தானே தெரிகின்றது... நீ பாலைவனச் சோலையில்லை... கானல் நீர் என்று...''

''உங்களை என் மனதில் உயர்வான இடத்தில் வைத்திருந்தேன் முகிலன்... இப்போது உங்கள் முகத்திரை கிழிந்துவிட்டது... இதுதான் நிஜமான உங்களின் உண்மை முகம்... இத்தனை நாள்களாய் என்னிடம் பொய் முகத்தைக் காட்டிக் கொண்டு வந்திருக்கிறீங்க... இப்படி பொய்த்துப் போய் விட்டிங்களே முகிலன்...''

''நீ என்ன வேண்டுமானாலும் சொல்லிக்கொள்.. எனக்கு நேரமாகிவிட்டது... நான் போகவேண்டும்...''

''எதற்காக... புதுமாப்பிள்ளை வேசம் கட்டவா...?''

''அனுபமா...''

''சும்மா கத்தாதீங்க முகிலன்... தாலிகட்டப் போகும் பெண்டாட்டியிடமாவது உண்மையாக நடந்து கொள்ளுங்க...''

அனுபமா திரும்பிப் பார்க்காமல் நடந்துவிட்டாள்... முகிலன் எதுவும் நடக்காததுபோல் தோள்களை குலுக்கிவிட்டு அங்கிருந்து சென்றுவிட்டான்...

முகிலனின் மூன்று தங்கைகளுக்கும்... ஒரே மேடையில் திருமணம் நடக்க... அடுத்தநாள் முகிலன்... மணிவாசகத்தின் மகள் கழுத்தில் தாலியைக் கட்டினான்...

தேன்நிலவிற்கு புது மணமக்களை காஷ்மீருக்கு அனுப்பி வைத்தார் மணிவாசகம்... அங்கே போய் படகு வீடுகளில் புது மனைவியுடன் எடுத்துக் கொண்ட போட்டோக்களை கொண்டுவந்து கல்லூரியில் காட்டிக் கொண்டான் முகிலன்...

அனுபமாவின் இதயம் வலிப்பதை உணர்ந்து கொண்ட சுந்தரம்... அதன் வலி நீக்க முயன்றபோது அடுத்த சிக்கல் முளைத்தது..



## 18

அனுபமா தன் பாடப் புத்தகங்களை அடுக்கிக் கொண்டு எழுந்தபோது... வகுப்பறையே காலியாக இருந்தது... மனதின் தனிமையை தன்னைச் சுற்றிலும் உணர்ந்தவள்... சோர்வுடன்... மாடி வராண்டாவில் நடந்தாள்...

எதிரே வந்து கொண்டிருந்த சுந்தரத்தின் பார்வையில் அவளது சோர்வு பட... அவன் மனம் குற்ற உணர்வில் வருந்தியது...

'என்னால்தானே... இவளுக்கு இந்தத் துயரம்..?'

''அனுபமா...'' அவன் கருணையோடு அழைத் தான்.''

''சார்...'' அவள் கவனம் கலைந்து... அவசரமாய் அவனைப் பார்த்தாள்...

''ஏன்... தனியாக நடந்து வருகிறாய்...?''

''என் கூட யாருமில்லையே சார்... அதனால்தான் தனியாக நடந்து வருகிறேன்...''

இருபொருள்படக் கூறிய அவளது வார்த்தை களில் இருந்த துயரம் சுந்தரத்தின் மனதை உலுக்கியது...

"ஏன் அனுபமா... நான் உன் கண் எதிரில்தானே இருக்கிறேன்... என்னை உன் கண்ணுக்குத் தெரியவில்லையா...? நான் இருக்கும்போது நீ எப்படி தனியாவாய்...?"

அவனும் இருபொருள் படக் கூறினான்... அவன் கூறியது அவளது மனதில் ஏறியதாகத் தெரிய வில்லை... அவள் நலிந்த புன்னகையொன்றைப் பூத்தாள்...

"கொஞ்ச நாள்களாகவே நீ சரியாக இல்லை அனுபமா..."

"அப்படியெல்லாம் இல்லை சார்... இது கடைசி வருடம்... உங்கள் புண்ணியத்தில் இந்த வருடப் படிப்பு முடிந்துவிட்டால்... அதற்குப் பிறகு நான் ஒரு என்ஜினியர்..."

"அதை நினைத்து நீ சந்தோசப்படுவது போல் தெரியவில்லையே"

"இப்போது கடுமையாக உழைத்தால்தான்... பின்னால் சந்தோசப்பட முடியும்... அதனால்தான்... தீவிரமாகப் படிக்கிறேன்..."

"படி.. நான் வேண்டாமென்று சொல்லவில்லை... அதற்காக உன் 'கலகலப்பைத் தொலைத்து விடுவதா...?"

"நானே தொலைந்து விட்டேன் சார்... என் கலகலப்பை வைத்து நான் என்ன செய்ய...?"



அனுபமாவின் விழிகளில் நீர் நிரம்பி... கன்னத்தில் அது கோடாக வழிந்தது... அவளை மார்பில் சாய்த்து விழி நீரைத் துடைத்துவிட வேண்டும் போல் மனம் துடிக்க... தன்னைக் கட்டுப் படுத்திக் கொண்டு கைக்குட்டையை நீட்டினான் சுந்தரம்.

"அழக்கூடாது... துடைத்துக் கொள்..."

"நன்றிசார்... ஆனால் என்னிடம் கர்சீப் இருக்கிறது..."

"ஏன்... என் கர்சீப்பைக் கூட நீ வாங்கிக் கொள்ள மாட்டாயா?" மனத்தாங்கலுடன் கேட்டான் சுந்தரம்... கண்களைத் துடைத்தபடி... மெலிந்த குரலில்...

"யாராவது ஒருவரிடம் நாம் கர்சீபை வாங்கிக் கொண்டால்... அவரை விட்டுப் பிரிந்து விடுமோமென்று சொல்வார்கள் சார்..." என்று கூறினாள் அனுபமா...

சட்டென்று ஒரு மழைச் சாரல் சுந்தரத்தின் மனதில் அடித்தது... அவன் மனம் பூவாய் மலர்ந்தது...

"இதையெல்லாம் கூட நீ நம்புவாயா...?"

"எதற்கு சார்... நம்புகிறேனோ... இல்லையோ... நீங்கள் எனக்கு கடவுளைப் போல... உங்களையாவது பிரியாமல் இருக்க வேண்டுமென்று நான் நினைக்கிறேன்..."

'பிரியாதே அனு... என்னைவிட்டுப் பிரியாதே... நான் உன்னைப் பிரியவும் விடமாட்டேன்...'

''இதைக் கொஞ்சம் சிரித்துக் கொண்டேதான் சொல்லேன்...''

''நிறையச் சிரித்து விட்டேன் சார்... சிரித்ததெற்கெல்லாம் வட்டியும்... முதலுமாய் அனுபவித்தும் விட்டேன்... இனிச் சிரிக்கவே எனக்குப் பயமாக இருக்கிறது...''

துடைக்கத் துடைக்கக் கிளம்பிக் கொண்டிருந்த கண்ணீரை நிறுத்தும் வகை தெரியாமல்... மாடி வராண்டாவில் இருந்த தூணின் மீது சாய்ந்து கொண்டாள் அனுபமா...

''அனுபமா... இது என்ன பச்சைக் குழந்தைபோல் அழுது கொண்டு... ஊஹூம்... உன்னை இப்படிப் பார்க்க எனக்குச் சகிக்கவில்லை...''

காதல் தோல்வி என்பது இப்படி ஒரு மனித ஜீவனை உருக்குலைக்குமா...? அனுபமாவின் வேதனையைக் கண்டு மனம் துடித்தான் சுந்தரம்...

''இப்படி ஒரு அன்பை வைக்க... முகிலன் அருகதையில்லாதவன் அனுபமா...''

''எனக்கும் அது தெரிகிறது சார்... ஆனால் அருகதையிருப்பவர்... இல்லாதவர்... என்ற பேதமெல்லாம் அன்புக்குத் தெரியாதே... அதை ஒருவர் மேல் வைத்துவிட்டால்... அதை விலக்கிக் கொள்வது என்பது அவ்வளவு எளிதான ஒன்றில்லையே....''

''ஆனால்... அவன் விலகிப் போய்விட்டானே...''

''முகிலனும் நானும் ஒன்றில்லையே...''



''கிட்டாத ஒன்றிற்காக கண்ணீர் விட்டுக் கரைந்து... கரைந்து கடைசியில் காணாமல்தான் போகப் போகிறாய்...''

''அப்படி ஒரேயடியாய் போய்விட்டாலும் நிம்மதியாக இருக்கும்... அதுவும் நடக்க மாட்டேன் என்கிறதே சார்...''

அனுபமாவின் துயரம் ததும்பிய இந்த வார்த்தைகளைக் கேட்டதும் துணுக்குற்றான் சுந்தரம்...

''சீச்சீ... இப்படியா பேசுவது... உன் அம்மா அப்பாவை நினைத்துப் பார்... அவன் அவனுடைய குடும்பத்தை உயிராக நினைக்கும்போது... நீ மட்டும் ஏன் இப்படி இருக்கிறாய்...? உனக்குப் பெற்றவர்கள் இல்லையா...? குடும்பம் இல்லையா...?''

எந்த நேரத்தில் சுந்தரம்...இந்த வார்த்தைகளைச் சொன்னானோ... அனுபமாவின் குடும்பம்... பறி போனதைச் சொல்லும் செய்தியுடன் ஓடி வந்தான்... அனுபமாவின் பக்கத்து வீட்டுக்கார ஆறுமுகம்...

''அனுபமா... உன் வீட்டில் தீப்பிடித்துவிட்டது... தீயில் மாட்டிக் கொண்ட உன் அம்மாவைக் காப்பாற்ற உன் அப்பாவும் தீயில் பாய்ந்துவிட்டார்... இரண்டு பேரும் உயிருக்குப் போராடிக்கொண்டு ஆஸ்பத்திரியில் கிடக்கிறாங்க. கடைசியாக ஒருதடவை... உன்னைப் பெத்தவங்களைப் பார்த்து விடும்மா...''

# 19

அனுபமா மயங்கிச் சரிந்தாள்... அருகே நின்று கொண்டிருந்த சுந்தரம் சட்டென்று அவளைத் தாங்கிப் பிடித்துக் கொண்டான்... கல்லூரியின் காவலாளி ஓடிவர... அவனிடம் தண்ணீர் கொண்டு வரச் சொல்லி அனுபமாவின் முகத்தில் தெளித்துவிட்டான்...

"அனுபமா... அனுபமா..."

அவள் மெதுவாக கண்விழித்ததும்... அவளைக் கைத்தாங்கலாய் அழைத்துக் கொண்டு... காரில் ஏற்றிக் கொண்டு... மருத்துவமனைக்கு விரைந்தான்...

மகளை ஒரு முறைக் கண்களால் பார்த்துவிடக் காத்திருந்தவர்கள் போல இருந்தனர்... அனுபமாவைப் பெற்றவர்கள்.

"ஐயா... நீங்க எங்களுக்கு எவ்வளவோ உதவிகள் செய்துவிட்டீங்க... கடைசியாக ஒரு உதவியைக் கேட்கிறோம்... மறுக்காமல் அதைச் செய்துவிட முடியுமா?"

அனுபமாவின் தாய் பேசமுடியாமல் கண்ணீர் வடிக்க... அனுபமாவின் தந்தை... திக்கித் திணறிப் பேசினார்...



"அனுபமாவிற்கு இனி யாரும் இல்லை ஐயா..."

"நானிருக்கிறேன்... அவளுக்கு எல்லாமுமாக நானிருந்து பார்த்துக் கொள்கிறேன்..."

சுந்தரம் அவசரமாக அவருக்கு வாக்குக் கொடுத்தான்...

"அந்த நம்பிக்கையில்தான் நான் உயிரை விடுகிறேன்... என் மகளை உங்கள் பொறுப்பில் ஒப்படைக்கிறேன் ஐயா... இனி நீங்கள்தான் அவளுக்கு எல்லாமும்..."

'இந்த ஒருவார்த்தைக்காகத்தானே இத்தனை நாளும் காத்திருந்தேன்...' சுந்தரத்தின் மனம் கலங்கியது...

கடைசியில் இப்படி ஒரு நிலைமையிலா அவன் அனுபமாவின் கை பிடிக்க வேண்டும்...?

"என் தங்கையின் மகன் கல்கத்தாவில் இருக்கிறான்... அவன் வந்து கொண்டிருக்கிறான்... அவன் வந்தவுடன் அனுபமாவை பத்திரமாய் அவனிடம் சேர்த்து விடுங்கள்..."

"என்னது...?"

தூக்கிவாரிப் போட... திகைத்துப் போய் சுந்தரம் பார்த்துக் கொண்டிருக்கையிலேயே... 'என் வேலை முடிந்தது...' என்ற நிம்மதியுடன் அனுபமாவின் தந்தை கண் மூடிவிட்டார்...

'எவனோ ஒருவனிடம் அவளை ஒப்படைக்கவா... இத்தனை நாளும் நான் காத்திருந்தேன்...!'

மனதிற்குள் பொருமிக் கொண்டே... அனுபமாவின் பெற்றோரின் இறுதிக் காரியங்களை குறைவில்லாமல் செய்தான் சுந்தரம்...

''கொள்ளி யார் வைக்கிறது...?'' என்று குரல் வந்தபோது...

''இதோ ஆறுமுகம் இருக்கிறாரே... அனுபமா வாய்க்குவாய் என் அண்ணன்னு பெருமையாகச் சொல்லிக் கொள்வாளே... இவர்தான் கொள்ளி வைக்கத் தகுதியானவர்...'' என்று பின்தங்கிக் கொண்டான்...

அனுபமாவை வீட்டிற்குள் அழைத்து வந்த போது... வீட்டு வேலையாள்கள் எல்லோரும்... ஒரு தினுசாகப் பார்த்தார்கள்... அதைக் கண்டு கொள்ளாமல் கணக்குப் பிள்ளையை அழைத்தான் சுந்தரம்.

''ஐயா...''

''நாளையில் இருந்து... யாராவது ஒரு பெண்ணை வீட்டு வேலைக்கு வரச் சொல்லுங்க...''

''இது என்னங்க ஐயா... புதிதாய் இருக்கிறதே...''

''நம் வீட்டுக்கு புதிதாய் ஒரு பெண் வந்திருக்கிறாள் இல்லையா...? அதனால்தான் இந்த ஏற்பாடு... அவளுக்குத் துணைக்கு ஆள் வேண்டாமா...?''



கணக்குப் பிள்ளையின் மனதில்... சுந்தரத்தின் மீது இருந்த சந்தேகம் மறைந்து... மதிப்புக் கூடியது... சமையல்காரரின் மகளை கிராமத்தில் இருந்து... வீட்டோடு தங்கி வேலை செய்ய என்று அழைத்து வந்தார்கள்...

''உன் பெயர் என்னம்மா...?''

''கனகவள்ளிங்க ஐயா...''

''நீ வீட்டு வேலை பார்க்கிறாயோ இல்லையோ... அனுபமாவின் வேலைகளை குறைவில்லாமல் பார்த்துக் கொண்டு... அவள் கூடவே துணையாக இருக்க வேண்டும்... தெரிந்ததா...?''

''தெரிந்ததுங்க ஐயா...''

கலகலப்பெல்லாம் காணாமல் போய்... தளர்ந்த நடையோடு...சோர்ந்துபோய் வீட்டில் முடங்கிப் போன அனுபமாவை அதட்டி... மீண்டும் கல்லூரிக்குத் தன் காரிலேயே அழைத்துக் கொண்டு போய்... திரும்பவும்... கூப்பிட்டுக் கொண்டுவந்தான் சுந்தரம்...

முதலில் விழியுயர்த்தி இதை வியப்பாகப் பார்த்து... தங்களுக்குள் கிசுகிசுத்துக் கொண்ட கல்லூரியின் மாணவ... மாணவிகளும்... ஆசிரியர் களும்... காலப் போக்கில் இதை ஏற்றுக் கொண்டு விட்டார்கள்...

''அனுபமா... என்ன செய்கிறாய்...?''

"படித்துக் கொண்டிருக்கிறேன் சார்..."

"விட்டத்தில் இருக்கும் பல்லியைப் பார்த்துக் கொண்டேயிருந்தால் உனக்குப் படிப்பு வந்து விடுமா...?"

அனுபமா மௌனித்தாள்... அவள் அருகில் வந்து புத்தகத்தை வாங்கி வைத்து விட்டு... கைபிடித்து எழுப்பிவிட்டான் சுந்தரம்...

"வா... காற்றாட வெளியில் போய் விட்டு வரலாம்..."

"எங்கே போவது...?"

"காவிரி ஆற்றங்கரைக்குப் போகலாம்... உன் மனதிற்கு மாற்றமாக இருக்கும்..."

"எங்கே போனாலும்... இதே மனதுதானே சார்... என் கூட இருக்கும்? புதிய மனம் வந்துவிடப் போகிறதா...?"

"புத்துணர்வு வந்துவிடும்..."

அனுபமாவை வற்புறுத்தி காரில் ஏறவைத்தான் சுந்தரம்... அவன் மனதில் அப்போது காதலைத் தாண்டிய தாய்மை உணர்வு பொங்கி எழுந்து கொண்டிருந்தது.



# 20

ஆற்று மணல் துகள்கள்... அந்தி வெயிலில் பொன்னிறத்தில் பளபளக்க... நுரை ததும்பி ஓடிக் கொண்டிருந்த ஆற்றின் நீரில் காலை நனைத்த வண்ணம்... அவர்கள் இருவரும் அமர்ந்தார்கள்...

"உனக்கு நீந்தத் தெரியுமா அனுபமா...?"

"தெரியாது சார்... உங்களுக்குத் தெரியுமா...?"

"ம்ம்... தெரியும்... இந்த ஆற்றில் முங்கி... அக்கரையைத் தொட்டுவிட்டுத் திரும்புவது என்றால்... எனக்கு அல்வா சாப்பிட்டது போல அவ்வளவு பிடித்தமானதாக இருக்கும்..."

"அல்வா என்றால் உங்களுக்குப் பிடிக்குமா...?"

"ஆமாம்... பிடிக்கும்... ஏன் உனக்குப் பிடிக்காதா...?"

"அல்வாவெல்லாம் பணக்கார வீட்டுப் பலகாரம் சார்... நான் ஏழை வீட்டுப் பெண்... எனக்கு அதிரசம்... முறுக்கு... இட்லி... தோசை... பணியாரம்ன்னு... நம்ம ஊர் பலகாரம்தான் பிடிக்கும்..."

"பலகாரத்தில் நம்ம ஊர் பலகாரம்... அடுத்த ஊர் பலகாரமென்று இருக்கிறதா...?"

"பின்னே இல்லையா...?"

"ஏன் அப்படி...?"

"செய்யத் தெரிய வேண்டாமா சார்...? என் அம்மாவுக்கு அல்வா செய்யத் தெரியாது..."

எங்கே சுற்றினாலும் பேச்சு... பெற்றவர்களிடமே வந்து முடிய... அனுபமா... கண் கலங்கினாள்... அதைப் பார்க்க மனம்தாளாத சுந்தரம்... கை நீட்டி அவளை அழைத்தான்... அவனுக்கு அடுத்த படியில் அமர்ந்திருந்தவள்... நகர்ந்து வந்து... அவனது மடியில் தலை சாய்த்தாள்... அவளது கண்ணீர் சுந்தரத்தின் மடியை நனைத்தது... அவன் தன் சட்டைப் பையில் இருந்த கைக்குட்டையால்... அவளது கண்ணீரைத் துடைத்து... தலைமுடியைக் கோதிவிட்டான்... அவள் கண் மூடி நகராமல் அவனது மடியிலேயே தலை சாய்த்திருந்தாள்.

"நானும் தாய்... தந்தை இல்லாதவன்தான் அனுபமா..."

"ம்ம்ம்..."

"உனக்காவது உன் அம்மா இதுநாள் வரை கூட இருந்தாங்க... எனக்கு விவரம் தெரியாத வயதிலேயே அம்மா இறந்து விட்டாங்க... என் அப்பாதான்... தாய்க்குத் தாயாய் இருந்து என்னை வளர்த்தார்... இப்போது அவரும் என்கூட இல்லை..."

"ம்ம்ம்..."



"உன் மனதில் இருக்கும் துக்கம் என் மனதிலும் இருக்கிறது... நீயாவது மனம் விட்டு அழுது விடலாம்... நான் ஆணாகப் பிறந்து விட்டேன்... அழுது கொண்டு... மூலையில் முடங்க என்னால் முடியாது..."

"ம்ம்ம்..."

"எனக்கென்று கடமைகளும்... பொறுப்புக்களும் இருக்கின்றன. அதே போல்... உனக்கும் ... உன்னைப் பெற்றவர்களின் ஆசைப்படி என்ஜினியராக வேண்டிய கடமை இருக்கிறதில்லையா?"

"ம்ம்ம்..."

"படி அனுபமா... படிப்பில் மனதைச் செலுத்து... எல்லாம் மறந்துவிடும்... துக்கம் மறைந்து விடும்..."

அனுபமா படித்தாள்... படிப்பில் தன்னைக் கரைத்தாள்... இரவில்... அவளறையில்... தரையில் பாய்விரித்து இழுத்துப் போர்த்திக் கொண்டு கனகவள்ளி உறங்கிக் கொண்டிருக்க... மேஜை விளக்கின் ஒளியில்... படிப்பில் மூழ்கியிருந்தவளின் கவனத்தை... டீயின் நறுமணம் கலைத்தது...

யாரென்று நிமிர்ந்து அவள் பார்த்தபோது... சுந்தரம் டீக்கோப்பையுடன் எதிரே நின்றான்...

"சார்... நீங்களா...?"

"நானேதான்..."

"என்ன சார்... எனக்குப் போய் நீங்கள் டீ போட்டுக் கொண்டு வரலாமா...?"

"வந்தால் என்ன...?"

இலகுவாகக் கேட்டுக் கொண்டே... டீக் கோப்பையை எடுத்துக் கொண்டு போன... அந்தக் கோடீஸ்வரனைப் பார்க்கும்போது அனுபமாவின் நெஞ்சம் நெகிழ்ந்தது....

'இவன் யார்? அவள் யார்...? இவர்கள் இருவருக்கும் இடையில் என்ன சொந்தம் இருக்கிறது...? மாளிகையில் வசிப்பவன்... குடிசையில் பிறந்து... வளர்ந்தவளுக்கு அடைக்கலமும் கொடுத்து... அன்பையும் கொடுக்கிறானே... இந்த நன்றிக் கடனை இந்த ஜென்மத்தில் மட்டுமல்ல... எந்த ஜென்மத்திலும் கழிக்க முடியாது போல இருக்கிறதே...'

"நீங்கள் தூங்கவில்லையா சார்..."

"நீ இன்னும் தூங்கவில்லையே..."

"எனக்குப் பரிட்சையிருக்கிறது நான் விழித்திருக்கிறேன்..."

"உனக்குப் பரிட்சை இருப்பதால் நான் விழித்திருக்கிறேன்."

"சார்..."

இருவரும் இணைந்து சிரித்தார்கள். எத்தனையோ நாள்களுக்குப் பின்னால் அனுபமா மனம் விட்டு சிரிப்பதை கனிவுடன் பார்த்தான் சுந்தரம்...

அனுபமா... பல்கலைக்கழகத்தில் முதல் மாணவியாக தங்கப்பதக்கத்தை வாங்கினாள்.



ஆயிரத்து தொள்ளாயிரத்து எழுபத்தி மூன்றாம் வருடத்தின் சிறந்த பொறியியல் கல்லூரியாக... அந்த சுற்றுவட்டாரத்திலேயே... சுந்தரத்தின் பொறியியல் கல்லூரி பெயர் வாங்கக் காரணமாக இருந்தாள்...

"வேலைக்குப் போக வேண்டும்... சார்..."

"வேலைதானே. ரெடியாக இருக்கிறது... வா..."

தனது பேக்டரிக்கு அவளை அழைத்துப் போய்... ஜெனரல் மேனேஜர் பதவியில் அமர வைத்தான் சுந்தரம்...

அனுபமா... விழி விரிய அவனை நோக்கினாள்... அவன் கொடுக்கும் அன்புப் பரிசுகளை தாங்கிக் கொள்ள முடியாமல்... அவளது நெஞ்சம் நிரம்பி வழிந்தது...

## 21

"இப்போது என்னதான் சொல்ல வருகிறீங்க சுதர்சனம்...?"

"தொழிலாளிகளின் வயிற்றில் அடிக்க வேண்டாமென்று முதலாளியிடம் சொல்லி விடுங்கம்மா..."

"அவர் தொழிலாளியின் வயிற்றில் அடிப்பவரா...?"

"நீங்கள் அவருக்குச் சாதகமாகத்தானே பேசுவீங்க...?"

சுதர்சனத்தின் வார்த்தைகளில் தொனித்த மறைபொருளை உணராதவள் போல... அனுபமா... எதிரே அமர்ந்திருந்தவரை ஊன்றிக் கவனித்தாள்...

முரட்டுக் காக்கிச் சட்டைக்குள்... அதைவிட முரட்டுத்தனமாய் இறுகிப் போன முகத்துடன் அமர்ந்திருந்தார் அந்தத் தொழிலாளி...

திராவிடக் கழகத்தையும் தாண்டி... கம்யூனிசம் வேர்விட ஆரம்பித்திருந்த காலகட்டம் அது... தொழிற் சாலைகளில் புதிதாக கொடி பிடிக்க ஆரம்பித் திருந்தார்கள்... சங்கங்கள் உருவாக ஆரம்பித் திருந்தன.

சுந்தரத்தின் பேக்டரியிலும் சங்கத்தின் வேர்கள் படற ஆரம்பித்திருந்தன. சுதர்சனம் போன்ற கம்யூனிசத்தில் ஊறிப் போயிருந்த தொழிலாளிகள்... தொழிலாளர்களின் நலனுக்காக வரிந்து கட்டிக் கொண்டு நிர்வாகத்தினரிடம் மல்லுக்கு நின்றார்கள்...

அனுபமாவிற்கும் கொஞ்சம் கம்யூனிசம் தெரியும்... கம்யூனிசத்தில் ஊறியவர்கள் தங்கள் கருத்துக்களை ஏதாவது ஒருவகையில் வெளிப்படுத்திக் கொண்டுதான் இருப்பார்கள் என்பதை அவள் நன்கு அறிவாள்...



பட்டுக்கோட்டை கல்யாணசுந்தரம்... தன் பாடல் வரிகளில் கம்யூனிசத்தின் நாடியைப் பிடிக்காமல் விடமாட்டார்...

ஒரு திரைப்படத்தில்... கதாநாயகன்... தன்னிடம் இருந்து விலகி நிற்கும் பணக்கார வீட்டு கதாநாயகி யிடம் பாடும் பாடலில்.

*"தங்கம் எடுத்த கை - அது*
*தங்கம் பார்த்ததா...?*
*தருமம் செய்த கை - சம*
*தர்மம் கண்டதா...?*
*ஆலயம் செய்தோம் - அங்கே*
*அனுமதி இல்லை...*
*நீ அந்தக் கூட்டம்தான் - இதில்*
*அதிசயம் இல்லை..."*

என்று பாடி வைப்பதாக எழுதியிருப்பார்.... பட்டுக்கோட்டை கல்யாணசுந்தரத்தின் கம்யூனிசப் பிடிப்பு அப்படிப்பட்டது...

*காடு விளைஞ்சென்ன மச்சான் - நமக்கு*
*கையும் காலும்தானே மிச்சம்..."*

உழவனின் அங்கலாய்ப்பு இன்னொரு பாடலில் வெளிப்படும்... திரைத்துறையின் கம்யூனிச பாடலாசிரியரே அப்படியிருக்கும்போது... தொழிலாளி எப்படியிருப்பார்...?

சுதர்சனம் கோபத்தில் இருந்தார்... அனுபமா பேச்சுவார்த்தை நடத்தி ஓய்ந்து போனாள்... அவளது மனம் களைத்துப்போயிருந்த வேளையில்... சுந்தரத்தின் கார் பேக்டரியில் நுழைந்தது.... அடுத்த சில நிமிடங்களில் அவன் புயல் போல் அந்த அறைக்குள் வந்தான்...

"என்ன ஆனது அனுபமா...?"

"பேச்சு வார்த்தை திருப்திகரமாக முடிய வில்லை..."

அனுபமா சொல்லிக் கொண்டிருந்தபோது சுதர்சனம் இடைமறித்துப் பேசினார்...

"அதாவது நிர்வாகத்திற்கு திருப்திகரமாய் முடியவில்லைன்னு சொல்லுங்கம்மா..."

சுந்தரம் நிமிர்ந்து அமர்ந்து சுதர்சனத்தை தீர்க்கமாகப் பார்த்தான்... அவனது விழிகளின் கூர்மையை... சுதர்சனத்தின் தீட்சண்யமான பார்வை தயங்காமல் எதிர் கொண்டது...

"நிர்வாகம் வேறு... தொழிலாளர்கள் வேறு என்று நான் நினைக்கவில்லை சுதர்சனம்..."

"பேச்சுக்கு என்ன முதலாளி... அது வெல்லக் கட்டி போல இனிக்க... இனிக்கத்தான் இருக்கும்... பேச என்ன வாயா வலிக்கப் போகிறது? செய்கையில் தான் உங்கள் அக்கறையைக் காண்பிக்க வேண்டும்..."



"இப்போது உங்களின் எதிர்பார்ப்புத்தான் என்ன...?"

"தீபாவளி போனஸ் முப்பது விழுக்காடு தரவேண்டும்..."

"இதில் நீங்கள் உறுதியாக இருக்கிறீங்களா...?"

"ஆமாம்... உறுதியாக இருக்கிறோம்..."

"கொஞ்சம் வெளியே போய்... நோட்டிஸ் போர்டைப் பார்த்துவிட்டு வந்து பேச்சைத் தொடர்ந்து பேசுங்க..."

வெளியே சென்ற சுதர்சனம் அவசர நடையுடன் திரும்பி வந்தார். அவர் முகத்தில் ஆச்சரியம் தெரிந்தது.... சுந்தரம் அமைதியாக அவருக்கு நாற்காலியைக் காட்டினான்...

"உட்கார்ந்து பேசுங்க சுதர்சனம்..."

"என்னால் நம்பவே முடியவில்லை முதலாளி..."

"எதை நம்ப முடியவில்லை சுதர்சனம்...?"

"தீபாவளி போனஸ் நாற்பது விழுக்காடு தரப்போவதாக நோட்டிஸில் எழுதியிருக்கீங்களே..."

"இதை ஏற்கானவே நான் முடிவு பண்ணி விட்டேன். ஆனால் நீங்க முப்பது விழுக்காடுதான் வேண்டுமென்று தகராறு பண்ணிக்கிட்டு இருக்கீங்க.... சொல்லுங்க... இப்போது நான் என்ன செய்யட்டும்...?"

சுதர்சனம் என்ன சொல்வது என்று தெரியாமல் திகைத்தார்... சுந்தரம் நிதானமாக தன் வார்த்தைகளைக் கோர்த்து அவர் மேல் வீசினான்...

"போராட்டம் அவசியம்தான்... எப்போது நீங்கள் போராடவேண்டும் தெரியுமா...? உங்கள் உரிமைகள் மறுக்கப்படும்போது... போராட வேண்டும்... உங்களின் உணர்வுகள் நசுக்கப்படும் போது போராட வேண்டும்... நீங்கள் வேறு... நான் வேறு என்று ஒரு நாளும் நான் நினைத்ததில்லை... இங்கே போராட்டம் அவசியமில்லை..."

சுந்தரம் பேசிக் கொண்டே போனான்.

## 22

அந்த அறையில் இருந்த அனுபமாவும்... சுதர்சனமும் வாயடைத்துப் போய் அமர்ந்திருக்க... சுந்தரத்தின் குரல் மட்டும் அழுத்தமாக அங்கே ஒலித்துக் கொண்டிருந்தது...

"கேளுங்கள் தரப்படும்... தட்டுங்கள் திறக்கப்படும் என்று தேவாலயம் கூறுகிறது சுதர்சனம்... இங்கே அது கூடத் தேவையில்லை... நீங்கள் கேட்காமலே தருவோம்... நீங்கள் தட்டவேண்டிய அவசியமேயில்லாமல் நிர்வாகத்தின் கதவுகள் உங்களுக்காக எப்போதும் திறந்தே இருக்கும்... இங்கே போராட்டம் தேவைப்படாது..."

"போராட்டம் தேவையில்லையென்று சொல்கிறீர்களா... இல்லை சங்கமே தேவையில்லையென்று சொல்கிறீர்களா...?"

இது கம்யூனிசத்தின் கோபம்... தொழிலாளர்களின் அடிப்படை உரிமைகள் மறுக்கப்பட்டு விட்டால் ஒன்று சேர்ந்து போராட வேண்டிய ஒற்றுமைக்காக சங்கம் தேவைப்படும் என்ற முன்னெச்சரிக்கை...

"சங்கம் தேவையில்லையென்று நான் ஒரு போதும் சொல்லமாட்டேன்... சங்கத்தின் போராட்டம் தேவைப்படாது என்றுதான் சொல்கிறேன்..."

"எங்களின் போராட்டத்தைத் தடுக்க நீங்கள் கையாளும் வழிமுறையாக இதை ஏன் நாங்கள் நினைக்கக் கூடாது...?"

"தொழிலாளர்கள் நினைப்பதற்கு முன்னாலேயே அவர்களின் தேவையறிந்து செயல்படும் முதலாளியின் செயல்பாடு இது என்று ஏன் நீங்கள் நினைக்க மறுக்கிறீர்கள்...?"

"தொழிலாளியின் துயர்... முதலாளியின் கண்ணில் பட்டதாகச் சரித்திரம் இல்லை..."

"தொழிலாளியை துயருடன் இருக்கவிட்டதாக... இந்த பேக்டரியின் சரித்திரமும் இல்லை..."

"நாங்கள் உரிமைக்குக் குரல் கொடுக்கத்தான் செய்வோம்..."

"நான் உறவுக்கு கைகொடுத்துக் கொண்டுதான் இருப்பேன்..."

எதற்கும் அசையாத சுதர்சனத்தின் மனம் இந்த வார்த்தைகளில் அசைந்தது... அவர் எழுந்து நின்று கை கூப்ப... சுந்தரம் எழுந்து நின்று அவருக்கு கை கொடுத்தான்...

"இந்தக் கை வணக்கத்துக்குரிய கை... வணக்கம் சொல்ல வேண்டிய கை இல்லை..."

"முதலாளி... எங்களின் போராட்டத்திற்கு தேவையில்லாமல் செய்து விட்டீர்கள்..."

"போராட வேண்டிய நேரம் வந்தால்... தாராளமாய் நீங்கள் போராடுங்கள்... ஆனால் என் தொழிலாளர்கள் போராடித்தான் சலுகைகள் பெறவேண்டும் என்ற நிலைமையில் நான் அவர்களை ஒருபோதும் வைக்க மாட்டேன்..."

"நன்றி முதலாளி..."

சுதர்சனம் விடைபெற்றுக் கொண்டுபோய் விட... நடந்தவைகளை ஆச்சரியத்துடன் பார்த்துக் கொண்டிருந்த அனுபமாவின் பக்கம் திரும்பி புன்னகைத்தான் சுந்தரம்...

"போகலாமா..."



"ம்ம்ம்... போகலாம்..."

கார்... தஞ்சையின் சாலையில் விரைந்து கொண்டிருந்தபோது.. அனுபமா... சுந்தரத்திடம் கேட்டாள்...

"அவர்கள் முப்பது பெர்ஸென்டேஜ்தான் கேட்டார்கள்... இதை நான் உங்களுக்கு போனில் தெரியப்படுத்தி இருந்தேன்... நீங்கள் நாற்பது பெர்ஸென்டேஜ் கொடுத்திருக்கிறீங்களே...."

"என்னிடம் அவர்கள் பேசியிருந்தால்... அவர்கள் கேட்டதைத்தான் நான் கொடுத்திருப்பேன்... ஆனால்... அவர்கள் உன்னிடம் பேசி விட்டார்கள்..."

"அதனால் என்ன...?"

"இது நீ சந்தித்த முதல் பேச்சு வார்த்தை அனுபமா... உன்னிடம் கேட்டுக் கொண்ட கோரிக்கைகள் நிறைவேறிய சந்தோசத்தில் அவர்கள் போக வேண்டும்..."

"சார்..."

"சுதர்சனம் உன்னிடம் கடுமையாக பேசி விட்டாராமே..."

"அவர் நல்ல மனிதர்தான்... ஆனால் முரட்டுப் பிடிவாதம் உண்டு..."

"அதையும் எதிர்கொண்டு பேச்சு வார்த்தை நடத்தினாயே... நீ கெட்டிக்காரிதான்..."

"அது என் வேலைதானே சார்..."

"இருக்கலாம்... ஆனால்... உன்னைக் கஷ்டப்பட வைத்து நான் லாபம் பார்க்க ஆசைப்பட மாட்டேன்... நீ ஜி.எம்.மாக இருக்கும் வரை... தொழிலாளர்கள் உன்னிடம் சண்டைக்கு வரவே கூடாது... அதற்கு நான் விடமாட்டேன்..."

அனுபமாவின் மனம் கனிந்தது... அவள் அதை மறைத்துக் கொண்டு சிரித்தாள்... அவள் சிரிக்கும் போது... கண்களும் கூடச் சேர்ந்து சிரிக்கும் விந்தையைக் கவனித்தபடி... காரை ஓட்டினான் சுந்தரம்...

"ஏன் சிரிக்கிறாய்?"

"உங்கள் தொழிலாளர் நலனைப் பற்றிய அக்கறையை... நினைத்தேன்... சிரித்தேன்..."

"இதில் சிரிக்க என்ன இருக்கிறது...?"

"உங்களின் தொழிலாளர்களுக்கு மனம் நிறைந்து நீங்கள் கொடுக்கும் போனஸ் இல்லையா இது...? இதை எனக்காக செய்ததாக நீங்கள் சொல்லலாமா...? அவர்கள் மேல் நீங்கள் பாசம் வைத்திருப்பதாக நான் நினைத்தது பொய்யா...?"

"எனக்கு... என் தொழிலாளர்களின் மீது நிறைய பாசம் உண்டு... ஆனால்... அவர்களுக்கு என்மீது நம்பிக்கை இருக்க வேண்டாமா...? அது குறைந்து கொண்டே வருகின்ற அறிகுறிகள் தெரிய ஆரம்பித்



திருக்கின்றன.... இது சரியான செயல்பாடில்லை அனுபமா..."

"காலம் மாறிக்கொண்டு வருகிறது சார்... தொழிலாளர் நல அமைப்புகள் உருவாவது நல்ல விசயம்தான்... நானும் ஒரு தொழிலாளியின் மகள்... தொழிலாளியும் கூட... இதை நீங்கள் மறந்து விடக் கூடாது..."

சுந்தரம் அதை மறுத்து எதையோ சொல்லப் போனவன்... தன்னை அடக்கிக் கொண்டு... அமைதியாகிவிட்டான்... அதைப் பார்த்த அனுபமாவின் விழிகளில் வியப்புத் தோன்றியது.

## 23

"என் பேக்டரியில் வேலை பார்க்கும் தொழிலாளர்களுக்கு வீடு கட்டித் தந்திருக்கிறேன்... தனியாக மருத்துவமனை கட்டியிருக்கிறேன்... என் கல்லூரியில் அவர்கள் படிக்க இலவசமாக இட ஒதுக்கீடு தந்திருக்கிறேன்... இதற்கு மேலும்... வீடுகட்ட கடன் வசதி... திருமணக்கடன் வசதியென்று அனைத்து கடன் உதவிகளையும் செய்திருக்கிறேன்.. இனியும் செய்வேன்... இவையெல்லாம் நான் பேக்டரி ஆரம்பித்தபோதே...செய்ய ஆரம்பித்து விட்டேன்..."

அவன் சொல்வது அத்தனையும் உண்மையென்பதால்... அனுபமா மனச் சங்கடம் அடைந்துவிட்டாள்...

''சார்... நான் விளையாட்டிற்காக ஏதோ சொன்னேன்...''

''நீ சொன்னதற்காக... நான் தந்நிலை விளக்கம் சொல்லவில்லை... என் தொழிலாளர்கள் வேறு... நான் வேறு என்று என்றுமே நான் நினைத்ததில்லை...''

''இது எனக்கும் தெரியும் சார்...''

''இன்று நடந்தது கொஞ்சம் அதிகப்படி அனுபமா... என் பேக்டரியிலும் போராட்ட விதைகள் தூவப்பட ஆரம்பித்துவிட்டன... அது உன்மேல் வெடித்துவிடக் கூடாது என்பதற்காக நான் கொடுத்ததுதான் அதிகப்படியான போனஸ்...''

''எனக்காக நீங்கள் ஏன் பணத்தை இழக்க வேண்டும்?''

''யாரிடம் இழந்தேன்...? என் தொழிலாளர்களிடம் தானே இழந்தேன்...? இந்த லாபத்தை ஈட்டித் தந்தது அவர்கள்தானே... இன்னும் சொல்லப் போனால்... சரிக்குச் சரியாய் போனஸ் அவர்களுக்குத் தரவேண்டும்... ஆனால்... முதலீடு பண்ணியுள்ள



தொகையின் வட்டி... மற்ற செலவுகள் இவை அத்தனையும் என் பொறுப்பில் இருப்பதால்... அது சாத்தியமாகவில்லை...''

'இதுவும் நிஜம்தானே...' என்ற எண்ணத்துடன் அனுபமா சாலையைப் பார்த்தாள்... தூரத்தில் சுந்தரத்தின் வீடு தென்பட்டது.

அவர்கள் இறங்கி வீட்டுக்குள் சென்றபோது கனகவள்ளி எதிரே வந்தாள்.. அனுபமாவைப் பார்த்துச் சிரித்தாள்.

''என்ன கனகா... கே. ஆர். விஜயா போல் சிரிக்கிறாயே...''

''போங்கம்மா... உங்களுக்கு எப்பவும் என்னைப் பார்த்தால் கேலிதான்...''

''நான் என்ன அவங்க போலவா இருக்கிறேன்...''

''அவங்களை விடவும் அசத்துகிறாய்... நீ இப்படிக் கேட்கும்போது... அச்சு அசல் வெண்ணிற ஆடை நிர்மலாவேதான்...''

''நிசமாவா சொல்கிறீங்க...''

''இப்பப் பார்த்தால் அசப்பில் காஞ்சனா போலவே இருக்கிறாய் கனகா... நான் இனிமேல் உன்னைக் காஞ்சனான்னுதான் கூப்பிடுவேன்...''

கனகவள்ளி கண்களில் கனவு தெரிய... மிதந்தபடி உள்ளே சென்றாள்... சுந்தரம்... அனுபமாவைப் பார்க்க... அவள் கண் சிமிட்டிச் சிரித்தாள்... சுந்தரத்தின் கண்கள் மின்னி...

"என்ன அனுபமா... ஒரே சினிமா நடிகைகளின் பெயர்களைச் சொல்லி... கனகவள்ளியை கலங்கடிக் கிறாயே..."

"அவளா கலங்குகிறவள்... அவள் கனவு காண்பவள் சார்... சினிமா நடிகைகளின் பெயரைச் சொன்னால்தான் அவளுக்குப் பிடிக்கும்..."

'நன்றாக நாடி பிடித்து வைத்திருக்கிறாள்...' என்ற நினைவுடன் சுந்தரம் சிரித்தான்...

"எல்லோருக்கும் என்ன பிடித்திருக்கிறது என்று தெரிந்து வைத்திருக்கிறாயே... எனக்கு என்ன பிடிக்கு முன்னு உனக்குத் தெரியுமா...?"

சுந்தரம் இயல்பாக வினவுவதுபோல் வினவ... தன் அறைக்குள் நுழையப் போன அனுபமா... மாடியேறிக் கொண்டிருந்த சுந்தரத்தை அண்ணாந்து பார்த்துச் சிரித்தாள்.

"இது எனக்குத் தெரியாதா சார்..."

"தெரிந்தால் சொல்லு..."

"உங்களுக்கு என்னைத்தான் பிடிக்கும்..."



சுந்தரம் எப்படி இயல்பாகக் கேட்டானோ... அதை விட இயல்பாக பதில் சொல்லிவிட்டு... தன் அறைக்குள் போய்விட்டாள் அனுபமா... சுந்தரம் மாடியேறாமல் அப்படியே நின்றுவிட்டான்...

'தெரியுமா... தெரிந்துமா... இன்னும் பேசாமல் இருக்கிறாய்...' குளித்து உடைமாற்றி... சாப்பிடுவதற் காக அவன் கீழே இறங்கி வந்தபோது... அனுபமா சமையலறைக்குள் நின்று கொண்டிருந்தாள்...

சாப்பாட்டு மேஜையின் முன் அமர்ந்தபடி சுந்தரம் குரல் கொடுத்தான்...

"அனுபமா... அங்கே என்ன செய்கிறாய்? சாப்பிட வரவில்லையா...?"

"இதோ வருகிறேன் சார்..."

ஆவி பறக்கும் பணியாரங்களை இரண்டு தட்டில் ஏந்திக்கொண்டு... அவனருகே வந்து அமர்ந்த அனுபமா ஒரு தட்டை அவன் முன் வைத்தாள்...

"என்ன இது...?"

"குழிப் பணியாரம்..."

"யார் செய்தது...?"

"வேறு யார்...? எல்லாம் நான்தான்..."

"நான் என்ன தவறு செய்தேனென்று எனக்கு இப்படியொரு தண்டனையைக் கொடுக்கிறாய்...?"

சுந்தரம் சிரிக்காமல் கேட்க. அருகே நின்று தண்ணீர் ஊற்றிக் கொண்டிருந்த கனகவள்ளி அடக்க முடியாமல் சிரித்தாள்.... அனுபமா கண்களை உருட்டி கனகவள்ளியை முறைத்துவிட்டு... அதே முறைப்புடன் சுந்தரத்தைப் பார்த்தாள்...

"உங்களை என் மனதில் எப்படி நான் நினைத் திருக்கிறேன் தெரியுமா...? நீங்கள் என்னவென்றால் இப்படிப் பட்டென்று சொல்லி விட்டீங்களே சார்..."

சுந்தரத்தின் மனதில் மீண்டும் குளிர் மழை பெய்தது.

## 24

'இவள்... மனதில் என்னை என்னவாகத்தான் நினைத்துக் கொண்டிருக்கிறாள்...? அதைச் சொல்ல மாட்டேன் என்கிறாளே...!'

சுந்தரம் பணியாரத்தை எடுத்து லேசாக சுவைத்தான்... அவன் முகத்தையே பார்த்துக் கொண்டிருந்த அனுபமாவின் விழிகளில் தெரிந்த எதிர்பார்ப்பைக் கண்டு அவனுக்குச் சிரிப்பு வந்தது...

"யுனிவர்சிட்டியில் கோல்டு மெடல் வாங்கியவள் நீ... உன் பரிட்சை முடிவைக் கூட இவ்வளவு ஆவலாய் எதிர்பார்த்திருக்க மாட்டாய் போல..."



"கிண்டலா...? இப்போது உங்கள் பக்கம் காற்றடிக்கிறது சார்... என்னவோ பேசிவிட்டுப் போங்க... ஆனால் பணியாரம் மட்டும் எப்படியிருக்குன்னு சொல்லுங்க..."

"நீ செய்தால் குறைவாக இருக்குமா...? நன்றாக இருக்கிறது..."

"கேட்டுக் கொண்டாயா கனகா... நன்றாக இருக்கிறதாம்... நீயும் ஒன்றைச் சாப்பிட்டு விட்டு... என் கை மணத்தைப் பற்றிச் சொல்... என்னை யாரென்று நினைத்தாய்...? நான் அனுபமாவாக்கும்..."

கனகவள்ளி ஒரு பணியாரத்தை எடுத்துச் சாப்பிட்டாள்... அவள் முகம் மாறியது...

"ஐயையே... என்னம்மா இது..." என்றாள்...

"என்ன கனகா... என்ன...?"

"உப்புப் போட மறந்துவிட்டிங்களா...? உப்பே இல்லையே..."

அனுபமா அவசரமாய் தன் தட்டிலிருந்த பணியாரத்தை எடுத்து வாயில் வைத்தாள்... சப்பென்று இருந்தது...

"ஏம்மா.... உப்பில்லாத பண்டம் குப்பையி லேன்னு சொல்வாங்க... நீங்க அதை மறந்து விட்டிங்களா...?"

அனுபமா முகத்தில் குடம்... குடமாய் அசடு வழிய சுந்தரத்தைப் பார்த்தாள்.. அவன் எதுவுமே

நடக்காதது போல் பணியாரத்தைச் சாப்பிட்டுக் கொண்டிருந்தான்...

"வேண்டாம் சார்... அதை வைத்து விடுங்க..."

"ஏன்...? நன்றாக இருக்கிறதே..."

"அதில் உப்புப் போட மறந்துவிட்டேன் சார்..."

சுந்தரம் பதில் சொல்லாமல் தட்டில் உள்ளதைக் காலி செய்து விட்டுத்தான் நிமிர்ந்தான்... அனுபமா விற்கு கண்கள் கலங்கிவிட்டன...

"என்ன சார்... சொல்லச் சொல்லக் கேட்காமல் இப்படிச் சாப்பிட்டு விட்டிங்களே..." என்றாள் அவள் வருத்தத்துடன்...

"நீதானே சொன்னாய்... எனக்குக் கோபம் அதிகம் வருகிறதென்று..."

"ஆமாம்..."

"கோபத்தைக் குறைத்துக் கொள்ளச் சொல்லி அட்வைஸ் வேறு பண்ணினாய் தானே..."

"அதற்கு என்ன சார்..."

"கோபத்தைக் குறைத்துக் கொள்ள வேண்டு மானால் உப்பைக் குறைத்துக் கொள்ள வேண்டும்... நீ அதைத்தானே செய்திருக்கிறாய்..."

"சார்... எதற்கும்... எதற்கும் முடிச்சைப் போடுகிறீங்க..."

அனுபமா நன்றியுடன் சிரித்தாள்... சுந்தரமோ... அவள் பாராதபோது அவளைப் பார்த்தான்...



'உன் கழுத்தில் மூன்று முடிச்சுப் போடும் நாள் வருமா...'

அந்த நாள் வராமல்... ஒருநாள் காலையில் அனுபமாவின் அத்தையின் மகன்தான் வந்து இறங்கினான்...

வாசலில் கோலம் போட்டுக் கொண்டிருந்த கனகவள்ளியை அவன் ஒரு மார்க்கமாய் பார்த்துக் கொண்டே வாடகைக் காரைவிட்டு இறங்க... அவனை விட மார்க்கமாய்... முறைத்தாள் கனகவள்ளி...

'யாரு இந்தத் தடியன்... இப்படிப் பார்க்கிறானே...!'

அவள் முகச்சுளிப்புடன் வாசல் கேட்டை மூடப்போக... அவன் தடுத்தான்..

"இந்தாம்மா... கொஞ்சம் நில்லு...!"

"யோவ்.. நீ யாருகிட்ட பேசிக்கிட்டு இருக்கிற தெரியுமா?"

அவன் 'அம்மா...' என்று அழைத்துவிட்டதால் வெகுண்டு திரும்பிய கனகவள்ளி... விடியற்காலையி லேயே போர்புரிய தயாரானாள்..."

"இது என்னம்மா வம்பா போய்விட்டது... நீ யாருன்னு எனக்கு எப்படித் தெரியும்...? நீ சொன்னால்தானே தெரியும்...?"

"எவ்வளவு தைரியம் இருந்தால் என்கிட்டயே வந்து என் அட்ரஸைக் கேட்பே... வம்பு பண்ண வந்துவிட்டு... நான் உன்னிடம் வம்பு வளர்க்கிறேன்னு சொல்கிறாயா...?"

''ஏம்மா... இப்ப நான் என்ன சொல்லி விட்டேன்னு இப்படிச் சண்டைக்கு வருகிற...?''

''உன்னிடம் சண்டை போடனும்னு எனக்கு மட்டும் ஆசையா...? நீயென்ன எனக்கு இணையான ஆளா...?''

''உனக்கு நான் இணையில்லைதாம்மா... கொஞ்சம் வழியை விடுகிறாயா...?''

''உனக்கு எதற்கு நான் வழிவிடனும்?''

''வீட்டுக்குள் போகத்தான்...''

''எங்க வீட்டுக்குள் உன்க்கென்ன வேலை...''

''அதைச் சொல்ல வேண்டிய ஆள்கள் கிட்ட சொல்லிக்கறேன்...''

''ஏன்... என்னைப் பார்த்தால் உனக்கு ஆளாகத் தெரியவில்லையா?''

''ஏம்மா... இப்போது உனக்கு என்னதான்ம்மா வேண்டும்...?''

''உன் சொத்து வேணும்னு கேட்டால் எழுதிக் கொடுத்து விடுவாயா...? கேள்வியைப் பாரு கேள்வியை...''

''வார்த்தைக்கு வார்த்தை இப்படிக் குற்றம் கண்டு பிடித்தால் என்னம்மா செய்வது...?''

''ஆமாம்ய்யா... உன்னிடம் குற்றம் கண்டு பிடிக்கணும்னு எனக்குக் கொள்ளை ஆசைபாரு...



வந்துவிட்டார்... நியாயம் பேச... வார்த்தைக்கு வார்த்தை 'அம்மா...' ன்னு சொல்லிக்கிட்டு... யாருக்கு யார் அம்மா...? என்னைப் பார்த்தால் உனக்கு உன் அம்மாவைப் போலத் தெரிகிறதா...?''

அப்போதுதான் கனகவள்ளி ஏன் அப்படி மிளகாயை அரைத்து அப்பியதுபோல் காரமாக இருக்கிறாள் என்று அவனுக்குப் புரிந்தது.

பாவாடை தாவணியோடு இருந்தவளை ஏற இறங்கப் பார்த்து விட்டுக் கன்னத்தில் போட்டுக் கொண்டான் அவன்...

''தப்புத்தான்ம்மா... உன்னைப் போய் நான் அம்மா என்று சொல்லியிருக்கக் கூடாதுதான்... மன்னித்துக் கொள்... இப்போதாவது வழியை விடுகிறாயா...?''

''திரும்பவும் அம்மாவா...?''

''உன்னை வேறு எப்படித்தான் கூப்பிடுவது...?''

''என்னது.. என் பெயர் என்னன்னு கேட்கிறாயா?''

அவளிடமிருந்து எப்படித் தப்பித்து வீட்டிற்குள் போவது என்று தெரியாமல் அவன் திருதிருவென்று விழித்துக் கொண்டு நிற்க... சுந்தரம் காலையில் உலாவுவதற்காக தோட்டத்துப் பக்கம் வந்தவன் அவனைப் பார்த்தான்...

# 25

காலை நேரக் காற்று முகத்தில் படிய... உற்சாகத்துடன் சுந்தரம் தோட்டத்துப் பக்கம் வந்தான்... அவன் மனம் சற்று நேரத்தில் வந்து... அவனுடன் இணைந்து நடக்க ஆரம்பிக்கப் போகும் அனுபமாவின் வரவை எதிர் பார்த்துக் கொண் டிருந்தது...

தினமும் அவளுடன் இணைந்து உலாவும் அந்த நிமிடங்களில்தான் உயிர்த்தெழுவதை உணர்ந்தான் சுந்தரம்... வாய் ஓயாமல் பேசிக் கொண்டிருக்கும் அனுபமாவிற்கு தினமும் பேச... ஏதாவது விசயம் இருக்கும்...

''உங்களுக்கு 'சுந்தரம்' என்று பெயர் வைத்தது யார் சார்...?'' என்று ஒருநாள் கேட்டாள்...

''ஏன்... என் அம்மா.. அப்பாதான் வைத்தாங்க... என்ன அதற்கு...? என் பெயர் நன்றாக இல்லையா...?''

''அது இல்லை சார்... பொருத்தமாக பெயர் வைத்திருக்கிறார்களே என்று நினைத்தேன்... கேட்டேன்...''

அவள் இயல்பாகக் கூற... அவனது நடை ஒரு நிமிடம் நின்றது...



'சுந்தரம் என்றால் அழகு... அப்படியென்றால்... அவன் அழகன் என்று அவள் சொல்கிறாளா...?'

பதிலை அறிந்து கொள்ள படபடத்த மனதை அடக்கிப் பிடித்துக் கொண்டு... ஆர்வமில்லாதவன் போல் அவன் வினவினான்...

''இதில் போய் என்ன பொருத்தத்தைக் கண்டு விட்டாய்...?''

''நீங்கள் அழகானவர் சார்... அதனால் அப்படிச் சொன்னேன்''

அவள் சொல்லியே விட்டாள்... அன்று முழுவதும் சுந்தரம் சிறகேயில்லாமல் பறந்தான்...

''பேசாமல் உங்களுக்கு தஞ்சையின் அலெக்ஸாண்டர்ன்னு ஒரு பட்டம் கொடுத்துவிடலாம் சார்...'' என்று இன்னொருநாள் கூறினாள்...

'இன்றைக்கு என்ன சொல்லப் போகிறாள்...' மனம் முழுவதும்... எதிர்பார்ப்பு நிரம்பியிருக்க... அதை வெளிக்காட்டிக் கொள்ளாமல்..

''அதுதானே பார்த்தேன்... எல்லோருக்கும் பட்டப் பெயர் வைப்பவள்... என்னை மட்டும் எப்படி விட்டு வைத்தாய்ன்னு நினைத்தேன்... எதுக்கு இப்படி ஒரு பட்டப் பெயர் கொடுக்கிறாய்?'' என்று கேட்டான் சுந்தரம்...

''அலெக்ஸாண்டர் தோல்வியைச் சந்தித்ததே இல்லை சார்... நீங்களும் தோல்விகளைச் சந்தித்தது இல்லை... அதனால்தான் இப்படி ஒரு பட்டம் கொடுக்க ஆசைப்படுகிறேன்...'' என்று மலர்ந்து சிரித்தாள் அனுபமா...

அன்று முழுவதும்... முகம் மலர... யார் எதைக் கேட்டாலும் மறுப்புச் சொல்லாமல் செய்து கொடுத்தான் சுந்தரம்...

இன்றும் அதுபோல் அவள் எதையாவது சொல்வாள் என்ற எதிர்பார்ப்பில் தோட்டத்தில் கால் வைத்தவன்... கனகவள்ளியின் கணீர் குரலைக் கேட்டுத் திரும்பிப் பார்த்தான்...

'யார்.. அது...?'

புருவங்களை உயர்த்தியவன்... நின்ற இடத்தி லிருந்தே கனகவள்ளியிடம் அதட்டல் போட்டான்..

"அங்கே என்ன சத்தம்... கனகா...?"

"ஐயா... காலங்கார்த்தாலே இந்த ஆள்வந்து நம்ம வீட்டு வாசலில் நின்று கொண்டு வம்பு பண்ணுதுங்கய்யா..."

'பெண்ணிடம் வம்பு பண்ணுகிறானா...? அதுவும் என்வீட்டு வாசலிலா...?'

கோபத்துடன் வாசல் காவலாளியை முறைத்துப் பார்த்தான் சுந்தரம்... அவன் அவசரமாய் ஓடிப்போய்



வந்தவனிடம் பேசிவிட்டு... சுந்தரத்திடம் வந்து பணிவுடன் விவரம் சொன்னான்.

''ஐயா... வந்திருக்கிற ஆள் பெயர் மனோகரனாம்... நம்ம அனுபமா அம்மாவின் அத்தை மகனாம்... கல்கத்தாவில் இருந்து வந்திருக்கிறாராம்..."

சுந்தரத்தின் காலடியில் பூமி நழுவியது... இதுவரை அவனுக்கும்... அனுபமாவிற்கும் ஊடே வந்த வாகீசனையும்... முகிலனையும்... எளிதாக பாதையி லிருந்து விலக்கியவனால்... இவனை விலக்குவதைப் பற்றி நினைக்கக் கூட முடியவில்லை...

இறக்கும் தருவாயில் இருந்த ஜீவனுக்கு அளித்த வாக்குறுதி அவன் கையைக் கட்டிப் போட்டது...

'அனுபமாவை அவனுடன் அனுப்பித்தான் ஆக வேண்டும்...'

சுந்தரத்தின் நெஞ்சம் உலர்ந்தது... அவன் காவலாளியைப் பார்த்து தலையை அசைத்தான்...

"அவரை உள்ளே வரச்சொல்..."

வந்திருப்பவன் அனுபமாவின் அத்தை மகன் என்று தெரிந்ததும் கனகவள்ளிக்கு கை கால் உதற ஆரம்பித்துவிட்டது...

''ஆத்தாடி... நீங்க அனுபமா அம்மாவுக்கு அத்தை மகனா...?"

''ஆமாம்...''

"உங்களுக்கு கோடி புண்ணியமாகப் போகும்... நான் உங்ககிட்ட வம்பு வளர்த்ததை அம்மாகிட்ட சொல்லிடாதீங்கய்யா..."

"ஏன் சொன்னால் என்ன...?"

"ஆத்தாடி... என்னை பொரிச்சு எடுத்திரு வாங்கய்யா..."

"அட... நீ கூட ஒரு ஆளிடம் பயப்படுவாயா?"

"வேறு யாருகிட்டயும் பயப்பட மாட்டேன்.. அந்த அம்மாகிட்ட மட்டும்தான் பயப்படுவேன்..."

"இதைப்பாருடா... என் மாமன் மகள் மகத்து வத்தை... உன்னையே நடுங்க வைக்கிறாளே..."

"அவங்க ஊரையே நடுங்க வைத்து விடு வாங்க..."

"நீ சொன்னாய்ன்னு இதைப் போய் அப்படியே அவளிடம் சொல்லவா...?"

"ஆத்தாடி... காரியத்தைக் கெடுத்தீங்களே..."

கனகவள்ளி அலறிக் கொண்டு உள்ளே ஓடிவிட்டாள்... மனோகரன் அவள் செல்வதை தலையை ஆட்டிச் சிரித்து ரசித்த வண்ணம்... தன் பெட்டியைத் தூக்கிக் கொண்டு உள்ளே சென்றான்.

"வணக்கம் சார்..." என்று தன் முன் கை குவித்து நின்றவனை ஏற இறங்கப் பார்த்தான் சுந்தரம்...



மீசையில்லாத முகம்... சிவந்த நிறம்... வட்ட வடிவ மூக்குக் கண்ணாடி... ஆஜானுபாகுவான.... உயரமான தோற்றம்... என்று எதிரே நின்றவன் தமிழ்நாட்டுச் சாயலில் இல்லாமல் ஏறக்குறைய ஒரு வங்காளியைப் போலவே இருந்தான்... மனோகரன்....

## 26

ஒருமான் குட்டியைப் போல் வீட்டிற்குள்ளிருந்து துள்ளிக் குதித்து ஓடி வந்த அனுபமா... அறிமுக மில்லாத புதியவனைப் பார்ப்பது போல் அவளது அத்தை மகனைப் பார்த்துக் கொண்டு சுந்தரத்தின் பின்னால் ஒதுங்கினாற் போல் நின்றதைக் கண்டு... சுந்தரத்திற்கு வியப்பாகவும்... அதே சமயம் மனதிற்கு இதமாகவும் இருந்தது...

அவளுடைய சொந்த அத்தை மகனை வேற்றாளாக பாவித்து... அவன் பின்னால் அவள் ஒதுங்கியது... அனுபமா... சுந்தரத்தின் மீது கொண் டுள்ள நம்பிக்கையையும்... சொந்தத்தையும் வெளிப் படுத்தியது...

மனோகரன் நாகரீகமான பேன்ட்... சர்ட் அணிந்து... களையான தோற்றத்துடன் இருந்தான்... அனுபமாவைப் பார்த்துச் சிரித்தான்...

"என்ன அனுபமா... என்னை யாரென்று தெரியவில்லையா...?"

"தெரியவில்லை..."

"நான்தான் மனோகரன்... உன் அத்தை மகன்... உன்னை என்னுடன் கல்கத்தாவிற்கு அழைத்துப் போக வந்திருக்கிறேன்..."

அனுபமாவிடமிருந்து எந்தப் பதிலும் வராததை ஆச்சரியத்துடன் உணர்ந்தான் சுந்தரம்... அவன் அமைதியாக மனதிற்குள் போராடுவதில் ஒரு காரணம் இருக்கிறது...

அனுபமா மௌனிப்பதற்கு என்ன காரணம் இருக்கிறது...?

"ஏன் அனுபமா பேச மாட்டேன் என்கிறாய்... நான் உன்னை சின்ன வயதில் பார்த்தது... இப்போது நீ வளர்ந்துவிட்டாய்..."

"எனக்கும் சின்ன வயதில் உங்களைப் பார்த்திருக்கும் நினைவு மெல்ல வருகிறது..."

"அப்பா... ஒருவழியாய் வாய் திறந்து பேசிவிட்டாய்... சின்ன வயதில் வாய் பேசிக் கொண்டே இருப்பாய்... நான் உன்னை வாயாடின்னுதான் கூப்பிடுவேன்... இப்போது எப்படி... பேசாமடந்தையாய் ஆகி விட்டாய்ன்னு எனக்கு சந்தேகம் வந்துவிட்டது..."

"எனக்கும் கூடத்தான் ஒரு சந்தேகம் இருக்கிறது."



"என்ன சந்தேகம்...? நான் உண்மையில் உன் அத்தை மகனா... இல்லையா என்று சந்தேகப் படுகிறாயா...?"

"அதெல்லாம் இல்லை... என் அப்பாவும்... அம்மாவும் இறந்து... ஏறக்குறைய ஒருவருடம் ஆகிவிட்டது... என் அப்பா சாகும்போது நீங்கள் கல்கத்தாவிலிருந்து வந்துகொண்டிருக்கிறீங்க என்று சொன்னார்... அப்போது கிளம்பி... இப்போது வந்து சேர்ந்திருக்கிறீர்களே... கல்கத்தாவிலிருந்து தமிழ்நாடு வர... ஒரு வருடம் ஆகுமா...?"

அவள் அப்பாவியாய் முகத்தை வைத்துக் கொண்டு வினவியதை ரசித்துச் சிரித்தான் மனோகரன்...

"நீ அப்படியே... சிறுவயதில் இருந்த துறுதுறுப்புடன் இருக்கிறாய் அனுபமா... நான் வெளிநாட்டிற்கு படிக்கப் போயிருந்தேன்.... திரும்பி வந்த பின்தான்... மாமா இறந்துவிட்ட செய்தி கிடைத்தது... உடனே கிளம்பி வந்துவிட்டேன்..."

"ஓஹோ..."

அனுபமா சுரத்தில்லாமல் வினவிவிட்டு உள்ளே சென்றுவிட்டாள் வாசலில் நின்றிருந்த மனோகரனின் புருவங்கள் அவளின் ஒதுக்கத்தைக் கண்டு உயர்ந்தன. சுந்தரத்திற்கும்... அனுபமாவின் செயல்கண்டு ஆச்சரியம்தான்... அவன் அதைக் கண்டு

கொள்ளாமல்... வந்திருந்த மனோகரனை வரவேற்க முனைந்தான்.

"உள்ளே வாங்க மனோகரன்..."

"நன்றி சார்... என் மாமன் மகள் என்னை மறந்துவிட்டுப் போய்விட்டாலும்.. உங்களுக்காவது என்னை உள்ளே கூப்பிடும் எண்ணம் வந்ததே..."

"அவள் வேறு ஏதோ நினைவில் போயிருப்பாள்... நீங்கள் ஒன்றும் மனதில் வைத்துக் கொள்ளாதீர்கள்..."

"இது அவள் வீடில்லை என்பதால் கூட ஒன்றும் சொல்லாமல் போயிருக்கலாம்... வீட்டுக்குரியவர் நீங்கள் தானே... நீங்கள் என்னைக் கூப்பிடுவதுதான் முறை..."

மனோகரன் பெட்டியோடு வீட்டுக்குள் போனான்... "வைத்தி..." என்று வேலையாளை அழைத்தான் சுந்தரம்

"ஐயா..."

"மனோகரனுக்கு தங்க... அந்தப் பின்பக்க ரூமைக் காண்பி..."

"சரிங்க ஐயா..."

சுந்தரம் மாடியேறிவிட்டான்... மனதுக்குள் கிலேசம் இருந்தபோது அவனால் உலாவ முடியாது என்று அவனுக்குத் தோன்றிவிட்டது... குளித்து



உடைமாற்றி சாப்பிட வந்தபோது அனுபமா அவள் அறையை விட்டு வெளியே வந்திருக்கவில்லை...

"அனுபமா வரவில்லையா கனகா..."

"கூப்பிட்டுக் கொண்டு வரவாங்கய்யா...?"

"ம்ம்ம்..."

மனோகரன் வந்து கொண்டிருப்பதைக் கண்டு சுந்தரம் மெலிதாகச் சிரித்தான்...

"உட்காருங்க... மனோகரன்... கல்கத்தா வாசம் எப்படியிருக்கிறது...?"

"நாங்கள் என் சின்ன வயதிலேயே கல்கத்தா விற்குப் போய் விட்டோம் சார்..."

"அப்பா என்ன வேலை செய்தாங்க..."

"எங்கள் குடும்பமே... மில் வேலை செய்கிறவங்க தான்... இங்கே மாமா எப்படி... அனுபமாவைப் படிக்க வைக்க நினைத்தாரோ.... அதுபோல் என் அப்பாவும் என்னைப் படிக்க வைக்கனுமுன்னு நினைத்தாங்க..."

"அப்படியா...?"

"என்ன ஒரு வித்யாசம்ன்னா... இங்கே அனுபமா வின் படிப்புப் பொறுப்பை... மாமாவிற்கு சிரமம் வைக்காமல் நீங்க பார்த்துக் கொண்டீங்க... அங்கே கல்கத்தாவில் என்னை அப்படிப் பார்த்துக் கொள்ள ஆள் இல்லை..."

மனோகரன் சொல்லிக் கொண்டிருப்பதைக் கேட்டபடி வந்த அனுபமாவின் விழிகள் சிவந்திருந்தன... அவள் சுந்தரத்தைப் பார்த்த வண்ணம்... சுந்தரத்தின் அருகிலேயே அமர்ந்தாள். சுந்தரத்திற்கு அது மிகப் பெரும் ஆறுதலாக இருந்தது.

## 27

மனோகரன் அனுபமாவின் முகத்தைப் பார்த்த வண்ணம் தன் பேச்சை நிறுத்தாமல் சுந்தரத்திடம் தொடர்ந்து பேசிக் கொண்டே இருந்தான்...

''என் படிப்புக்காக நானே வேலை பார்த்துச் சம்பாதித்தேன் சார்... என்ஜினியரிங் முடித்ததும்... நான் வேலை பார்த்த கம்பெனியில் வெளிநாட்டுக்கு பயிற்சிக்காக என்னை அனுப்பினார்கள்... அங்கே ஒரு வருடம் இருந்துவிட்டு... இப்போதுதான் வந்தேன்...''

''உங்க அப்பா... அம்மா கூட வரவில்லையே...''

''அவங்களால் வந்து திரும்ப முடியாத சூழ்நிலை சார்...''

அனுபமா நடந்து கொண்டிருந்த பேச்சிற்கும்... தனக்கும் யாதொரு சம்பந்தமும் இல்லை என்பதைப் போல் சாப்பாட்டில் கவனமாக இருந்தாள்...



''அனுபமா படிப்பை முடித்து விட்டாள்தானே...''

''ம்ம்... முடித்துவிட்டாள்...''

''இப்போது என்ன செய்கிறாள்...?''

''என் பேக்டரியில் ஜெனரல் மேனேஜராக வேலை பார்க்கிறாள்...''

''கல்கத்தாவில் நான் வேலைபார்க்கும் கம்பெனியிலேயே அனுபமாவிற்கும் வேலை பார்த்து வைத்திருக்கிறேன்... அவள் அங்கே வந்தவுடன் வேலைக்கு உடனடியாக போய் விடலாம்...''

''ம்ம்ம்...''

இதற்கும் அனுபமாவிடமிருந்து ஒரு பதிலும் வரவில்லை... மனோகரனின் முகத்தில் சிந்தனை பரவியதைக் கவனிக்காதவன் போல் சுந்தரம் எழுந்து கொள்ள... அனுபமாவும் அவனைப் பின்தொடர்ந்தாள்...

''நீ எங்கே வருகிறாய் அனுபமா...?'' சுந்தரம் வியப்புடன் வினவினான்...

''இது என்ன சார்... புதிதாக கேட்கறீங்க... எப்போதும் போல பேக்டரிக்குத்தான் வருகிறேன்...''

''மனோகரன் ஊரிலிருந்து வந்திருக்கிறார் அனுபமா...''

''வந்தால் என்ன...?''

''நீ அவருடன் பேசிக் கொண்டிரு...''

''சார் இன்றைக்கு பேக்டரியில் எனக்கு முக்கிய மான வேலைகள் இருக்கின்றன.... அதைப் பார்க்க வேண்டும்...''

''இனி அதையெல்லாம் நான் பார்த்துக் கொள்கிறேன்...''

அனுபமா பேசாமல் சுந்தரத்தையே முறைத்துக் கொண்டு அசையாமல் நின்றாள்... அவள் பார்வையின் தீவிரம் சுந்தரத்தை மிகவும் பாதித்தது... அவன் சங்கடத்துடன் மனோகரனைப் பார்த்தான்...

''அனுபமா வேலைக்கு வரட்டும் சார்... நான் பயணக் களைப்பு போக இன்றைக்கு பூராவும் ஓய்வெடுத்துக் கொள்கிறேன்...''

சுந்தரம்... விடுதலை உணர்வுடன் அனுபமாவை அழைத்துக் கொண்டு காரில் ஏறினான்... அனுபமா வழியில் ஏதும் பேசாமல் வந்தாள்... சுந்தரம் அமைதியைக் கலைத்தான்...

''ஆக... நீ இனி கல்கத்தாவாசியாக மாறப் போகிறாய்...''

''பாதையைப் பார்த்துக் காரை ஓட்டுங்கள் சார்...''

அனுபமாவின் குரல் கடினமாக ஒலித்தது...

'ஏன் இப்படிக் கோப்படுகிறாள்...?' சுந்தரம் புரியாதவனாக அவளைத் திரும்பிப் பார்த்தான்...

''கல்கத்தா அழகான ஊர் அனுபமா...''



''எனக்கு நான் பிறந்து வளர்ந்த இந்த தஞ்சையைவிட அழகான ஊர் என்று எதுவுமில்லை சார்...''

''யாதும் ஊரே... யாவரும் கேளீர்ன்னு பெரிய வங்க சொன்னதை நீ கேட்டதில்லையா...?''

''கேட்டதில்லை...''

''இருந்தாலும் அனுபமா... கல்கத்தாவில் இருக்கும் தொழில்கள் அதிகம்... பார்... உனக்கு வேலை கூடத் தயாராக காத்திருக்கிறது...''

''இந்த ஜெனரல் மேனேஜர் வேலையை உங்களுக்கு வேண்டிய யாருக்கும் கொடுக்கப் போவதாக வாக்குக் கொடுத்திருக்கிறீங்களா?''

''ஏன் இப்படிக் கேட்கிறாய்...?''

''என்னிடமிருந்து இந்த வேலையைப் பிடுங்கிக் கொண்டு ஊரை விட்டுத் துரத்துவதில் இவ்வளவு முனைப்பாய் இருக்கிறீர்களே... அதனால் கேட்டேன்...''

சுந்தரம் காரை சாலையோரமாக நிறுத்தி விட்டு... அனுபமாவின் பக்கம் திரும்பி உட்கார்ந்து... அவள் முகத்தையே எதுவும் பேசாமல் உறுத்துப் பார்த்தான்... அனுபமா முகம் திருப்பிக் கொண்டாள்...

''நீ போக வேண்டிய நேரம் வந்துவிட்டது அனுபமா...இதைப் புரிந்து கொள்...''

"எனக்கு எதையும் புரிந்து கொள்ள வேண்டிய அவசியமில்லை... புரியவும் வேண்டாம்..."

"ஆனால் எனக்கு அவசியம் இருக்கிறதே..."

"என்னசார் சொல்கிறீங்க..."

"நான் உன் அப்பாவிற்கு வாக்குக் கொடுத்திருக்கிறேன் அனுபமா... உன் அத்தையின் மகன் வந்து உன்னைக் கூப்பிடும்போது அவனுடன் உன்னை அனுப்பி வைக்கிறேன்னு வாக்குக் கொடுத்திருக்கிறேன்... என்னால் வாக்குத் தவற முடியாது..."

"அதனால்...?"

"உன்னை... உன் அத்தை மகனுடன் அனுப்ப மாட்டேனென்று சொல்ல என்னால் முடியாது..."

சுந்தரம் காரைக் கிளப்பினான்... அவன் மனதிற்குள் பெரும் புயல் அடித்துக் கொண்டிருந்தது.

## 28

இது துயரம்... மனதுக்கினியவளை... மாற்றானுடன் அனுப்பி வைக்க நேர்வது... அதிலும் அவளுக்காக... அவளது காதலை அடைவதற்காக... தனது நிலையிலிருந்து இறங்கி... தன் இயல்புக்கு



மாறான வில்லத்தனமான வேலைகள் பலவற்றை செய்துவிட்டு... இன்று அவள் போக மனமின்றி இருப்பதை அறிந்தும்... அவளைப் போகச் சொல்லவேண்டி வருவது மிகப் பெரிய துன்பம்...

அவளில்லாத வாழ்வை அவனால் கற்பனை செய்து கூடப் பார்க்க முடியவில்லை... இன்னொருத்தியை இனி... மனதாலும்... உடலாலும் ஏற்றுக் கொள்வது என்பது அவனுக்கு முடியாத ஒன்று.

தனிமையான வாழ்வைச் சந்திக்க சுந்தரம் தயாராகிவிட்டான்... தாமரையிலைத் தண்ணீர் போல்... அனுபமா பட்டும் படாமலும் பேசியதை மனோகரன் கவனத்தில் எடுத்துக் கொண்டதாக காட்டிக் கொள்ளவே இல்லை...

அவன் தன் போக்கில் எல்லோருடனும் நன்றாகப் பழகினான். கனகாவிடம் வம்பிழுத்தான்... ஊரைச் சுற்றிப் பார்த்தான்... அவன் கிளம்புவதற்கு இரண்டு நாள்கள் முன்னதாக... தன் புறப்பாட்டைப் பற்றி சுந்தரத்திற்கு நினைவூட்டினான்...

"நாளை மறுநாள் நாங்கள் கிளம்பவேண்டும் சார்..."

சாப்பாட்டு அறையில் அவன் இதைச் சொன்ன போது... சாப்பிட்டுக் கொண்டிருந்த சுந்தரத்தின் மனம் குலுங்கியது... வாயருகே உணவைக் கொண்டு போனவனின் கை அப்படியே தயங்கி நின்றது...

"நாங்கள் கிளம்ப வேண்டும்..."

மனோகரன் உணர்த்திய அந்த "நாங்கள்..." என்ற வார்த்தை சுந்தரத்தின் ஜீவ நாடியை குலுக்கியது... அவன் வெளியே தெரியாதபடி மனதிற்குள் பெருமூச்சு விட்டான்... துயரத்துடன் அனுபமாவைப் பார்த்தான்... அப்போது அவளும் சுந்தரத்தின் முகத்தைத்தான் பார்த்துக் கொண்டிருந்தாள்...

"மனோகரன் சொன்னதைக் கேட்டாயா அனுபமா?"

"ம்ம்ம்..."

"நீ கிளம்பத் தயாராக வேண்டும்..."

அனுபமா பதில் சொல்லாமல் எழுந்து கை கழுவி விட்டுச்சென்று விட்டாள்... சுந்தரம் சங்கடத்துடன் மனோகரனைப் பார்க்க... அவன் மென்மையாக சிரித்தான்...

"பிறந்து... வளர்ந்த ஊரைவிட்டு பிரிய நேர்வது எவ்வளவு கஷ்டமான விசயமென்று எனக்கும் புரியும் சார்..."

சுந்தரம் லேசாக தலையை அசைத்துவிட்டு மாடியேறினான்... அறையில் நுழைந்தவன்... கட்டிலில் சரிந்து... கண்களை மூடிக்கொண்டான்... அறைக் கதவை யாரோ திறக்கும் சத்தம் கேட்டது... கண் களைத் திறக்காமலே வினவினான்...



"என்ன வேண்டும் வைத்தி...?"

"நான் என்ன கேட்டாலும் கொடுப்பீர்களா...?"

தழுதழுப்புடன் அவன் செவிகளில் ஒலித்தது அனுபமாவின் குரல்... அவன் சட்டென்று கண் விழித்துப் பார்த்தான்... அனுபமா அவனது அறைக்குள் வந்து நின்றிருந்தாள்...

இதுவரைஅவள் மாடிப்படியில் கால் வைத்தது கூட இல்லை... கீழ்தளத்தில்... மாடிப்படிகளின் அருகே அவளது அறை இருந்தது... அவளது அறைக்குள் சுந்தரம் உரிமையுடன் போவான்... அவன் அறைக்குள் அவள் வந்தது இல்லை...

அன்று இயல்பாக உள்ளே வந்து நின்றவளைக் கண்டு அவன் ஆச்சரியத்துடன் எழுந்து நின்றான்...

அனுபமாவின் விழிகள் கலங்கிச் சிவந்திருந் தன... அவளது முகமும்... கசங்கிய கூந்தலும்... அவள் வெகுநேரம் அழுதிருப்பதை உணர்த்த... சுந்தரம் பதறிப்போனான்...

அவனிருக்கும்போது அவனுடைய அனுபமா கண்ணீர் சிந்துவதா...? அதை அவன் பார்த்துக் கொண்டிருப்பதா...?

"உனக்கு என்ன வேண்டும் அனுபமா... நீ எதைக் கேட்டாலும் நான் கொடுப்பேன்... எடுத்துக் கொள்..."

அனுபமாவின் இதழ்களில் துயரம் கலந்த மகிழ்ச்சிப் புன்னகை ஒன்று பூத்தது... அவள் கண்ணீருடன் மென்னகை புரிந்தாள்... அவள் விழிகளில் இருந்த ஏதோ ஒன்று... சுந்தரத்தின் உயிர் கூட்டைத் தொட்டது... அவன் மனம் சிலிர்த்தான்...

"கேள் அனுபமா... உனக்கு என்ன வேண்டும்...? கேள்... தருகிறேன்..."

"எனக்கு நீங்கள்தான் வேண்டும் சார்... உங்களை எனக்குக் கொடுப்பீர்களா...? நான் உங்களை... எனக்கே... எனக்கென்று எடுத்துக் கொள்ளவா...?"

சுந்தரம் ஸ்தம்பித்துப் போய் நிற்க... அனுபமா அவன் காலடியில் சரிந்து... அவன் கால்களைப் பற்றிக் கொண்டு... அவற்றில் தன் முகத்தைப் புதைத்துக் கொண்டாள்...

"நான் போகமாட்டேன் சார்.. உங்கள் காலடியை விட்டு வேறு எங்கேயும் போகமாட்டேன்... என்னை ஏற்றுக் கொள்ளாமல் அனுப்பி வைக்க நீங்கள் நினைத்தால்... என் உயிரில்லாத உடல்தான் இந்த வீட்டை விட்டுப் போகும்..."

வரம் கேட்டு நின்றவனை தெய்வமாக்கி... அவன் கேட்ட வரத்தினையே கொடுக்கும் வரத்தைக் கேட்டு அவன் காலடியில் விழுந்து கதறினாள் அனுபமா...



"எனக்கு உங்கள் பணம் வேண்டாம்... சொத்து சுகம் வேண்டாம்... உங்களின் காலடிதான் வேண்டும்.. கடைசிவரை எனக்கு அதைக் கொடுத்தால் போதும்... என்னைப் போகச் சொல்லிவிடாதீங்க சார்... நான் செத்துவிடுவேன்..."

அவள் குழந்தைபோல் தேம்பி அழுததைக் காணச் சகிக்காத சுந்தரம்... அவள் தோளைத் தொட்டு எழுப்பினான்... கண்ணீரைத் துடைத்து விட்டான்...

"அழாதே... நீ அழுவதைக் காண என்னால் முடியாது..."

"நான் போக மாட்டேன்..."

"ம்ம்... இதை எப்படி நான் மனோகரனிடம் சொல்வது என்றுதான் எனக்குத் தெரியவில்லை... உன் அப்பாவிடம் வாக்குக் கொடுத்திருக்கிறேனே அனுபமா..."

"உங்களுக்கு அந்த நெருக்கடியை நான் கொடுக்க மாட்டேன் சார்...நானே... மனோகரனிடம் சொல்லிவிட்டேன்..."

"என்னது...?"

கட்டுப்படுத்தியிருந்த தளைகள் அவிழ்ந்து விழ... அனுபமாவின் தோளைப் பற்றி இழுத்து தன்னோடு சேர்த்து அணைத்து அவளது தலையுச்சியில் இதழ் பதித்தான் சுந்தரம்.

# 29

"எனக்கு இதுதான் நடக்குமென்று ஏற்கனவே தோன்றிவிட்டது சார்... அனுபமாவின் கண்களில் வேதனை தெரிந்தது... நான் வந்ததும் அவளது முகம் வாடிவிட்டது.. அவளால் உங்களைப் பிரிந்து வர முடியாது என்று எனக்குத் திட்டவட்டமாகத் தெரிந்து விட்டது... ஆனாலும் நீங்கள் எப்படி... என் தாய் மாமாவிற்கு கொடுத்த வாக்கிற்கு கட்டுப்பட்டீர்களோ... அதைப் போல... நானும்... தாய்... தகப்பனில்லாமல் நிற்கும் என் தாய் மாமனின் மகளைக் காப்பாற்றிக் கூப்பிட்டுக் கொண்டு போக வேண்டிய கடமையில் இருந்தேன்... அனுபமாவிற்கு என்று இருக்கும் ரத்த சொந்தம்... நானும் என்னைப் பெற்றவர்களும்தான்... எங்களால் அவளைக் கைவிட முடியாது... அதனால் தான்... எதையும் வெளியே காட்டிக் கொள்ளாமல் அமைதியாக இருந்தேன்..."

தஞ்சை பெரிய கோவிலின்... விஸ்தீரமான பிரகாரத்தை சுற்றி வந்து கொண்டிருந்த சுந்தரத்திடம்... இதைக் கூறினான்... மனோகரன்... அவர்களுடன் நடந்து வந்த அனுபமா... பாசத்துடன் தன் அத்தை மகனைப் பார்த்தாள்... அவளது விழிகள் பனித்திருந்தன.



"ஒரு வேளை... அனுபமா உங்களிடம் கடைசி வரை இதைச் சொல்லாமல் இருந்திருந்தால்... நீங்கள் என்ன செய்திருப்பீர்கள் மனோகரன்...?" சுந்தரம் கேட்டான்...

"அவளைக் கேள்வியே கேட்காமல் என்னுடன் அழைத்துப் போயிருப்பேன் சார்..." மனதை மறைக்காமல் கூறினான் மனோகரன்...

"அது எப்படி மனோகரன்...அவள் மனம் உங்கள் மீது இல்லையென்று தெரிந்த பின்னாலும் எப்படி அழைத்துப் போயிருப்பீர்கள்...?" வியப்புடன் வினவினான் சுந்தரம்...

"நினைப்பது எல்லாம் இந்த உலகில் நடந்துவிடுகிறதா சார்...? நீங்கள் பணக்காரர்... எங்களால் எட்ட முடியாத உயரத்தில் இருப்பவர்... உங்கள் மீது அனுபமா ஆசைப்பட்டாலும்... அதை வெளியில் சொல்ல முடியாது என்ற நிலையில் அவளிருந்தால்... என்னால் எப்படி அவளைக் கைவிட்டிருக்க முடியும்...? மனதிற்குத் தெரியுமா... கிடைப்பதற்குத்தான் ஆசைப்பட வேண்டும்... கிடைக்காததற்கு ஆசைப்படக் கூடாது என்று...?" மனோகரன்... இயல்பாக முறுவலித்தான்...

அனுபமாவின் விழிகள்... ஆச்சரியத்துடன் மனோகரனின் மேல் பதிந்திருந்தன... தன்னை சுந்தரத்திடமிருந்து பிரித்துக் கொண்டு போக

வந்திருந்த... வில்லனாகவே அவனை அதுவரை பார்த்திருந்தவள்... அவனது இந்த இன்னொரு பரிணாமத்தைக் கண்டு பாகாய் உருகினாள்...

"அனுபமாவின் மீது நான் என் உயிரையே வைத்திருக்கிறேன் மனோகரன்...."

"இப்படிச் சொல்பவர்...இதைப் பற்றி என்னிடம் பேசத் தயங்கியது ஏன் சார்...?"

"எப்படிப் பேசுவது மனோகரன்... அனுபமாவிற்கு என்னை கார்டியனாக்கி... நீங்கள் வந்தவுடன் உங்களிடம் அவளை ஒப்படைக்கும் பொறுப்பை என்னிடம் கொடுத்துவிட்டு அனுபமாவின் அப்பா போய் விட்டாரே... நான் வெறும் பாதுகாவலன்தான்... காவல்காப்பவன்... எப்படி உரிமையாளன் ஆக முடியும்...?"

"நீங்கள் பணத்தில் மட்டுமில்லை சார்... பண்பிலும் பெரிய மனிதர்தான்..."

மாலை நேரத்தில்... அந்தக் கோவிலின் ஆலயமணியோசை அடித்தது... அனுபமா மனம் சிலிர்த்தாள்...

காதலை மனதில் வைத்துக் கொண்டு... அதை வெளிப்படுத்தாமல்... கொடுத்த வாக்கைக் காப்பாற்ற... மௌனித்துவிட்ட ஒரு பெரிய மனிதன்...



தான் மணந்து கொள்ள வேண்டிய மாமன் மகளின் மனதில் தானில்லையென்பதை உணர்ந்து கொண்ட பின்னாலும்... அநாதையாய் நிற்கும் அவளைக் காப்பாற்ற வேண்டிய கடமைக்காக... மௌனமாகிவிட்ட ஒரு உறவுக்காரன்...

இந்த இருவரையும்... வாழ்வில் சொந்தமாகத் தந்த இறைவனுக்கு அந்த விநாடியில் நன்றி சொன்னாள் அனுபமா...

"இப்படி உட்காரலாமா..." மனோகரன் வினவ...

"ஓ... உட்காரலாமே..." என்றபடி சுந்தரம்... வெளிப்பிரகாரத்தின் படிக்கட்டுகளில் அமர்ந்தான்...

அவனுக்குப் பக்கத்தில் மனோகரன் அமர... கொஞ்சம் தள்ளி... அவர்கள் இருவரையும் பார்க்கும் வண்ணம் உட்கார்ந்து கொண்டாள் அனுபமா...

"எப்போது கல்யாணம் சார்..."

"இன்னும் முடிவு பண்ணவில்லை மனோகரன்..."

"சீக்கிரமே முடிவு பண்ணுங்கள் சார்... உங்களின் கல்யாணம் முடிந்த பின்னால்தான் நான் ஊருக்குக் கிளம்ப முடியும்..."

"ஏன் அவசரப் படுகிறீர்கள்...?"

"இத்தனை நாளும் நீங்கள் ஒரே வீட்டில் இருந்திருக்கலாம்... அப்போது இந்தக் கல்யாண பந்தத்தைப் பற்றிய நினைவு உங்களுக்கு இல்லை...

இப்போது அப்படியில்லை... கல்யாணப் பேச்சு வந்துவிட்டது... இருவரும் காதலைச் சொல்லிக் கொண்டு விட்டீர்கள்... இனியும் ஒரே வீட்டில் கல்யாணமாகாமல் இருப்பது சரிவராது..."

மனோகரன் பொறுப்புடன் பேசியபோது... கோவிலின் கோபுரத்திற்கு இணையானவனாக... சுந்தரத்தின் கண்களுக்கும்... அனுபமாவின் கண்களுக்கும் அவன் தெரிந்தான்....

## 30

தெருவை அடைத்துப் பந்தல் போடப் பட்டிருந்தது... சுந்தரத்தின் பூர்வீக வீடுகளில்... உறவினர் கூட்டம் வந்து இறங்கியிருந்தது... ஏழு நாள்கள் திருமண விருந்து நடைபெற... ஏழாவது நாளில்... சுந்தரம்... அனுபமாவின் கழுத்தில் தாலியைக் கட்டினான்...

திருமணத்துக்காக... கல்கத்தாவிலிருந்து... அனுபமாவின் அத்தை குடும்பத்தை... தன் செலவில்... விமானத்தில் பயணித்து வரச் செய்திருந்தான் சுந்தரம்...

அண்ணன் மகளை தன் மருமகளாக்கிக் கொள்ள முடியாத வருத்தம் இருந்தாலும்... அதை



வெளியே காட்டிக் கொள்ளாமல்... பெண் வீட்டைச் சேர்ந்தவளாக... முகம்மலர கல்யாண வீட்டில் வளைய வந்தாள் அனுபமாவின் அத்தை...

திருமணம் முடிந்த இரவில்... அனுபமாவை அலங்கரித்து... புத்திமதி சொல்லி... சுந்தரத்தின் அறைக்குள் அனுப்பி வைத்ததும்... அவளின் அத்தைதான்...

கொலுசின் ஒலி... அருகில் கேட்கவும்... மாடியறை ஜன்னலில் இருந்து பார்வையைத் திருப்பினான் சுந்தரம்... அறைக் கதவைத் திறந்து கொண்டு... அழகுப் பதுமையாய் குனிந்த தலை நிமிராமல் வந்து நின்றாள் அனுபமா...

"அனுபமாவா... இவ்வளவு அமைதியுடன் நிற்பது...?" சுந்தரம் ஆச்சரியதுடன் அவள் மேல் பார்வையைச் செலுத்தினான்...

மெல்லிய மைசூர் பட்டுச் சேலையணிந்து... கூந்தலை தளர்வாகப் பின்னலிட்டு... அதில் மல்லிகை மலர்களை தோளின் இருபுறமும் வழியும்படி சூடி... கண்களுக்கு அழகாகவும்... அளவாகவும் மைதீட்டி... நெற்றியில் திலகம்... நாணத்துடன் அவள் நின்ற தோற்றம்... ஒரு சித்திரப்பாவை அசையாமல் நிற்பதைப் போல இருந்தது...

அறைக்கு வெளியே உறவினர் வீட்டுப் பெண்கள்... நகைக்க... சுந்தரம் புன்னகையுடன் சென்று அறைக் கதவைத் தாழிட்டுவிட்டுத் திரும்பி வந்தான்....

"அனு..." என்று செல்லமாக அழைத்தான்...

'அனுவாமே... இத்தனை நாளாய் எங்கே போயிருந்தது... இந்த அழைப்பு...' அவள் வெட்கத்துடன் நகர்ந்து நின்றாள்...

அறைக்கு வெளியே சுந்தரத்தின் வீட்டிலிருந்த கிராமபோனில்... இசைத்தட்டு சுழல ஆரம்பித்தது...

*"மயங்குகிறாள்... ஒருமாது... தன்*
*மனதிற்கும் செயலுக்கும் உறவுமில்லாது...*
*மயங்குகிறாள்... ஒருமாது..."*

சுந்தரத்தின் கண்கள் தாகத்துடன் அவளை அழைத்தன... அவள் தவிப்புடன் பின்னால் நகர்ந்து... சுவரில் சாய்ந்து நின்றாள்... ஒலி பெருக்கியின் பாடல் ஒலி... இருவரின் காதுகளிலும் விழுந்தது.. இருவரின் மனமும்... உடலும்... கிளர்ச்சியடைந்தன...

*" தோழியர் கதை சொல்லித் தரவில்லையா...?*
*துணிவில்லையா... பயம் விடவில்லையா...?*
*நாழிகை செல்வதும் நினைவில்லையா...?*
*நாழிகை செல்வதும் நினைவில்லையா...?"*

இப்போது சுந்தரத்தின் கரங்கள்... அனுபமாவின் கை பற்றி அருகே இழுத்திருந்தன... அவனது சூடான முத்தம் அனுபமாவின் கன்னத்தில் படிய... அவள் தாளமாட்டாமல் அவன் தோள் மேல் முகம் புதைத்தாள்... அவளது காதோரம் சுந்தரம் கேட்டான்...



"சொல் அனு... நாழிகை செல்வது உனக்கு நினைவில் இல்லையா....?"

அனுபமா கிளர்ந்து அவன் கழுத்தைச் சுற்றித் தன் கைகளை மாலையாக்கி... அவனைப் பார்த்தாள்..

வெளியே பாடல் தொடர்ந்து ஒலித்துக் கொண்டிருந்தது...

*" பார்வையில் ஆயிரம் கதைசொல்லுவாள்...*
*படித்தவள்தான் அதை மறந்து விட்டாள்...*
*காதலை நாணத்தில் மறந்து விட்டாள்...*
*காதலை நாணத்தில் மறைத்து விட்டாள்..."*

அனுபமா... சுந்தரத்தின் மார்பில் முகம் புதைத்துக் கொண்டு முகம் நிமிர்த்த மறுக்க... சுந்தரம்... அவள் முகத்தை நிமிர்த்த போராடிக் கொண்டிருந்தான்...

*" அன்பே... அன்பே...*
*அன்பே... அன்பே...*
*அத்தான்... அத்தான்... என்றால்....*
*நெஞ்சம் உருகாதா...?*

பாடலின் வரிகள் மனதில் நுழைய... அனுபமா தன்னையறியாமல்... சன்னக் குரலில்...

"அத்தான்..." என்று சுந்தரத்தை அழைத்தாள்...

அந்த ஒருவார்த்தையில் அணை உடைந்தான் சுந்தரம்...

"சொல்லுடி...இந்த ஒருவார்த்தையை நீ சொல்லி... நான் கேட்க வேண்டுமென்றுதான்

இத்தனை நாள்களாய் காத்திருந்தேன்... சொல்லு... நான் யார்...?"

"என் அத்தான்..."

"அனு..."

"அத்தான்..."

ஆயிரத்து தொள்ளாயிரத்து எழுபத்தி மூன்றில்... தன் மனதுக்குப் பிடித்தவளை... மனைவியாக்கிக் கொண்டு... தன் எண்ணத்தை நிறைவேற்றிக் கொண்ட சுந்தரம்... அனுபமாவுடன்... அவன் கனவு கண்ட வாழ்க்கையை வாழ ஆரம்பித்தான்...

## 31

"என்ன காய் வாங்கிக் கொண்டு வந்திருக்கிறீங்க...?" அனுபமா... சுந்தரத்தின் கையிலிருந்த வயர் கூடையை வாங்கியபடி வினவினாள்...

"பீன்ஸ்... காலிபிளவர்... கேரட்..." சுந்தரத்தின் கண்கள் அனுபமாவின் முகத்தின் மேல்,... வண்டென மொய்த்தன...

"தினமும் இதே காய்கறிதானா...?" என்று கேட்டபடி நிமிர்ந்து கணவனைப் பார்த்த அனுபமாவின் விழிகளில் வெட்கம் சூழ்ந்து கொண்டது...



"ஆரம்பித்து விட்டீங்களா...?"

"எதை ஆரம்பித்தேன்..."

புரியாததுபோல்... விசமப் பார்வையுடன் வினவினான் சுந்தரம்...

"அடேங்கப்பா... தெரியாதது போல் என்னமாய் நடிக்கிறீங்க... நடிகர் திலகமேதான்... தினமும் இதே பார்வைதானா...?"

"அவரை எதுக்கு தேவையில்லாமல் நமக்கு நடுவில் இழுக்கிறாய் அனு... இங்கே எதற்கு வந்திருக்கிறோம்...?"

"கொடைக்கானலுக்கு... கல்யாணமான புதுமண தம்பதிகள் எதற்கு வருவார்களோ... அதற்கு வந்திருக்கிறோம்..."

"தேன் நிலவு கொண்டாட வந்திருக்கிறோமுன்னு தெரியுதில்ல... அப்புறமும் என்ன கேள்வி வேண்டிக் கிடக்கு... கொடைக்கானலில்... தினமும் இந்தக் காய்கறிகள்தான் கிடைக்கும்... தேன்நிலவு கொண்டாட வந்திருப்பனிடம்... தினமும் இந்தப் பார்வைதான் இருக்கும்..."

சுந்தரம்... அனுபமாவை இழுத்து அணைத்து... வாசம் பார்த்தான்... அவள் மெதுவாக அவன் சட்டைக் காலரை சரிசெய்தபடி சிணுங்கினாள்...

"நான் சமைக்கப் போகணும்..."

''இதோ பார்... கொடைக்கானலில்... இந்த வீட்டை நான் வாங்கிப் போட்டிருப்பது... உல்லாசமாய் நாம் வந்து ஊர் சுற்றிப் பார்த்துவிட்டு ஓய்வெடுக்க... சமைத்துச் சாப்பிட்டு குடும்பம் நடத்துவதற்காக இல்லை...''

''உல்லாசமாய் சுற்றிக் கொண்டிருந்தால் வயிறு நிறைந்து விடுமா... என்ன...?''

''அதற்காக... இருபத்தி நான்கு மணிநேரமும்... அடுப்படியே கதியென்று கிடந்தால்... நான் என்ன செய்வது...?''

''இப்போது என்னை என்னதான் செய்யச் சொல்கிறீங்க?''

''வா... வெளியே சுற்றிவிட்டு வரலாம்...''

''சமையல்...''

''வந்து பண்ணிக் கொள்ளலாம்...''

குளிருக்கு அடக்கமாக ஸ்வெட்டரை மாட்டிக் கொண்டு... சுந்தரத்தின் விரல்களோடு... விரல் சேர்த்து... கதை பேசியபடி... மண் சாலையில் இறங்கி நடந்தாள் அனுபமா...

''ஆயிரம்தான் சொல்லுங்க... மலைப்பிரதேசம்... மலைப் பிரதேசம்தான்...''

''தஞ்சாவூரை விட்டால்... வேறு ஊர் உனக்குப் பிடிக்காதுன்னு சொல்வாயே...''



''இப்போதும் அதைத்தான் சொல்கிறேன்...''

''அப்போ... கொஞ்ச நேரத்திற்கு முன்னால்... மலைப் பிரதேசத்தின் மகிமையைப் பற்றிப் பேசியது யாராம்...''

''நான்தான்...இதை ரசிக்கலாம்... இங்கேயே இருக்க முடியுமா?''

''எனக்கென்னவோ... இப்படியே நாமிருவரும்... இங்கேயே இருந்துவிட்டால் நன்றாக இருக்கும் என்று தோன்றுகிறது...''

''தோன்றும்... தோன்றும்... புதுப் பெண்டாட்டியைக் கண்டவுடன்... உங்களையே நம்பியிருக்கும் உங்கள் தொழிலாளர்களையும் காலேஜையும் மறந்து விடணுமா...?''

''இப்ப ஏண்டி... கடமையை நினைவு படுத்துகிறாய்...?''

''வேறு என்ன செய்ய வேண்டுமாம்...''

''காதல் செய்யேன் அனு...''

அவன்... அவள் தோளில் கை போட்டு... தன்னருகே இழுத்துக் கொண்டான்... ஆளில்லாத சாலையில்... அவர்கள் இருவரும்... நெருக்கமாக... அணைத்தபடி... ரகசியக் குரலில் பேசி சிரித்துக் கொண்டே வீட்டிற்குத் திரும்பினார்கள்...

அனுபமா... சமையலறைக்குள் போக... சுந்தரம் பின் தொடர்ந்தான்...

"உங்களுக்கு... இங்கே என்ன வேலை...?"

"உனக்கு உதவி செய்யும் வேலை..."

"நீங்கள் உதவி செய்யும் லட்சணம்தான் எனக்குத் தெரியுமே... வேலையைக் கெடுக்காமல் வெளியே போங்க..."

"போக முடியாதுடி..."

"அப்பப்பா... உங்க அராஜகம் தாங்கலை... இந்தாங்க... இந்த காய்கறியை வெட்டுங்க..."

அவ்வளவு பெரிய கோடிஸ்வரன்... மனைவிக்கு வெங்காயம் உரித்துக் கொண்டிருந்தான்... அவள் வாணலியில்... காய்கறிகளைப் போட்டு வதக்க ஆரம்பித்தபோது... பின்னால் நின்று அவளது இடுப்பை வளைத்து.. கூந்தலில் முகம் புதைத்தான்...

"சரியான கள்ளன் நீங்க... இதற்குத்தானே உதவுகிற மாதிரி நடிச்சீங்க..."

அவள் விலகாமல்... இசைந்து நின்றபடி... செல்லமாக சிணுங்க அவன் பலமாக நகைத்தான்...

"ஆமாம்... கள்ளன்தான்... மலைக் கள்ளன்..."

"அடேங்கப்பா... பெரிய எம்.ஜி.ஆருன்னு நினைப்பு..."



"நான் மக்கள் திலகமில்லைடி... உன்னுடைய திலகம்... உன் புருசன்..."

சுந்தரம் ஆவேசமாய் அவளைத் தழுவிக் கொள்ள அனுபமா... பாதிச் சமையலில் அடுப்பை அணைத்து விட்டு... அவன் அணைப்பினில் அடங்கினாள்...

அவர்கள் கொடைக்கானலில்... இரண்டு மாதங்கள் தங்கியிருந்து தேன்நிலவு முடிந்து திரும்பிய போது... அவர்களின் பூர்வீக வீட்டிற்குப் போகாமல்... புதிய மாளிகை ஒன்றின் பிரமாண்டமான வெளி நுழை வாயிலில்... அவர்களின் கார் நுழைந்தது.

## 32

அனுபமா... விழி விரிய அந்த மாளிகையைப் பார்த்தாள்... வீட்டிற்கு முன்னால் பிரம்மாண்ட தோட்டத்துடன்... வெள்ளைப் பளிங்கு கற்களினால் கட்டப்பட்டிருந்த அந்த மாளிகையின் வனப்பு அவளை மயக்கியது...

"இது யார் வீடுங்க...?"

"உன் வீடு அனு..."

"என் வீடா...?"

அனுபமா ஆச்சரியத்தில் விழி விரித்தபோது... அவளின் அந்தப் பார்வைக்காகவே... இன்னும் எத்தனையோ மாளிகைகளைக் கட்டலாமே என்று சுந்தரத்திற்குத் தோன்றியது...

"நம் வீடு... அங்கு இருக்கிறதே..."

"இது புதிதாய் கட்டியது... உனக்காக நான் கட்டியது..."

"எவ்வளவு அழகாக இருக்கிறது இந்த வீடு... இது எனக்கே எனக்கா அத்தான்..."

அனுபமா... மான்குட்டி போல்... தாவிக் குதித்து... அந்த மாளிகையின் படிகளில் ஏறினாள்... வீட்டின் கீழ்தளத்தை... பிரமிப்புடன் சுற்றிப் பார்த்தவளை... அழைத்துக் கொண்டுபோய்... மாடியறையை திறந்து காண்பித்தான் சுந்தரம்...

அனுபமா... அசையாமல் நின்றுவிட்டாள்...

அவள் விரும்பிய அனைத்தையும் கொண்ட அறைகளை உள்ளடக்கியதாய் இருந்தது அந்த அறை...

"இது நம் பெட்ரூம் அனு..."

அன்று இரவு... சுந்தரத்தின் மார்பில் தலை சாய்த்து அவன் முகம் பார்த்த அனுபமா...



"அப்படி என்னிடம் என்ன கண்டீர்கள் அத்தான்... ஏன் என்னை இப்படிக் கொண்டாடு கிறீர்கள்..." என்று கேட்டாள்...

குனிந்து... அவளது உச்சந்தலையில் இதழ் பதித்த சுந்தரம் "உன்னிடம் என்ன இல்லை அனு..." என்று கேட்டான்...

"இல்லை அத்தான்... உங்களின் காதலுக்கு முன்னால்... நான் ஒன்றுமே இல்லை... நான்..."

அனுபமா... பழைய கல்லூரிக்கால நிகழ்வு களைச் சொல்ல ஆரம்பிக்க... சுந்தரம் கண்களில் கண்டிப்புடன்... அவளது இதழ்களில் விரல் வைத்துத் தடுத்தான்...

"ஸ்ஸ்... பழைய கதைகளைப் பேசக்கூடாது... காலுக்கு உதவாததை கழற்றி எறின்னு பெரியவங்க எதுக்கு சொல்லியிருக்கிறாங்க... கண்ட குப்பைகளை மனதிற்குள் போட்டு உழப்பிக் கொண்டிருக்காதே..."

"இருந்தாலும் அத்தான்..."

"அனு..."

சுந்தரத்தின் குரலில் தொனித்த கோபத்தைக் கண்டதும் அனுபமா அடங்கிப் போனாள்... அவளது அமைதியைக் கண்ட சுந்தரம்... அவளது முகம் நிமிர்த்தி... கண்களுக்குள் உற்றுப் பார்த்தான்...

"கோபமாடி..."

''யாரிடம் யார் கோபித்துக் கொள்வதாம்...? உங்களிடம் கோபப்பட என்னால் முடியுமா...?''

''அடேங்கப்பா... பேச்செல்லாம் தேனாகத்தான் பேசுகிறாய்... இத்தனை நாளாய்... இந்த இனிப்பையெல்லாம் எங்கே ஒளித்து வைத்திருந்தாய்...?''

''உங்களிடம் ஒளித்து வைக்க என்னால் முடியுமா? நீங்கள் யார்... கள்ளனாயிற்றே...''

அன்று இரவு... முந்தைய இரவுகளைவிட மோக இரவாக அவர்களுக்கு அமைந்தது... சுந்தரத்தின் விருப்பங்கள் அனுபமாவின் காதோரம் சொல்லப்பட... வெட்கத்துடன் அவனுக்கு இசைந்து கொடுத்தாள் அனுபமா...

மறுநாள் கண் விழித்தபோது... காபியுடன் நின்று கொண்டிருந்த அனுபமாவைப் பார்த்துக் கண் சிமிட்டினான் சுந்தரம்... அவள் நாணத்துடன் விலக முயன்றாள்...

''எங்கே போகிறாய்... நில்லு...''

''கீழே எனக்கு ஆயிரம் வேலைகள் காத்திருக்கிறது...''

''உன் புருசனைக் கவனிப்பதுதான்...அந்த ஆயிரம் வேலைகளில் முதல் வேலை...அதைக் கவனி...''

''அதுதான் விடிய... விடிய கவனித்தாகி விட்டதே...'' அனுபமா... வாய்க்குள் முணு முணுக்க...



சுந்தரம் அதைக் கேட்டுவிட்டு... கடகடவென்று சிரித்தான்... அனுபமாவின் முகம் குங்குமமாய் சிவந்துவிட்டது...

''நான் கீழே போகிறேன்...'' என்று ஓடிவிட்டாள்...

சற்று நேரத்தில்... மாடியின் உள்பக்க வராண்டாவின் மேல் நின்று கொண்டு... குனிந்து ஹாலைப் பார்த்த சுந்தரம்...

''அனு... அனு...'' என்று அழைத்தான்...

''என்னங்க...'' அனு வந்து நின்றாள்...

''கொஞ்சம் மாடிக்கு வா...''

அவளுடைய பதிலை எதிர் பாராமல் சுந்தரம் போய்விட... வேறு வழியில்லாமல் அனுபமா... மாடியறைக்கு வந்தாள்...

''எதற்கு கூப்பிட்டீங்க...?''

''நான் குளிக்க வேண்டாமா...?''

''அதற்கு என்னை ஏன் கூப்பிட்டீங்க...''

''இதோபார்... இது நாள் வரை... புதுப் பெண்டாட்டின்னு வேலை வாங்காமல் விட்டு வைத்தேன்...''

''யார் நீங்க...? வேலை வாங்காமல் விட்டு வைத்தீங்க...?''

''ஆமாம்டி...''

''ம்ம்... அதிகாரம் தூள் பறக்குது... இப்போது எஜமானுக்கு இந்த அடியவள் என்ன வேலை செய்யனுமாம்...''

''குளிக்க வைக்க வேண்டும்...''

''இன்று மட்டும் தானே...''

''தினமும்...''

அன்றிலிருந்து.. சுந்தரம்... அனுபமாவின் உதவி யில்லாமல்... அலுவலகம் செல்லக் கிளம்பியதே யில்லை...

## 33

சுந்தரமும்... அனுபமாவும்... திருமணமாகி நான்கு ஆண்டுகள் நிறைவடைந்தும்... புதுமணத் தம்பதிகளின் உற்சாகம் குறையாமல்... அதே சந்தோசத்துடன் வாழ்க்கையை அனுபவித்து வாழ்ந்து கொண்டிருக்கும்போது... அனுபமா... சுற்றுப்புறத்தின் நாவால் முதன் முறையாகச் சூடுபட நேர்ந்தது...

அன்று அலுவலகம் விட்டு.. ஆவலுடன் வீடு திரும்பிய சுந்தரம்...

''அனு... அனு...'' என்று அழைத்தபடி... வீட்டிற்குள் சென்றான்...



காபியுடன் வந்து நின்ற அனுபமாவின் முகம் வாடியிருந்தது... கண்கள்... கலங்கிச் சிவந்திருந்தன...

''சீக்கிரம் ரெடியாகி வா... நாம் சினிமாவுக்குப் போகலாம்...'' என்று கூறியபடி மனைவியின் முகம்பார்த்த சுந்தரம் திகைத்தான்...

''என்ன ஆச்சு அனு...''

''ஒன்றுமில்லை...''

''உன் முகத்தைப் பார்த்தாலே தெரிகிறது... ஏதோ நடந்திருக்கிறது என்று... என்னவென்று சொல்லு...''

''அத்தான்...''

அனுபமாவின் விழிகளில் கரகரவென்று கண்ணீர் வழிய ஆரம்பிக்க... சுந்தரம்... பதறிப்போய்... அவளை அருகே இழுத்துக் கொண்டான்...

''என்னடி... என்ன விசயம்ன்னு சொல்லு...''

''எதிர் வீட்டு பங்கஜத்தின் வளைகாப்பிற்கு அழைத்திருந்தார்கள் இல்லையா...?''

''ஆமாம்... இன்றைக்கு மதியம் போக வேண்டும்ன்னு சொன்னாயே... போய் வந்தாயா...?''

''ம்ம்... அங்கே... பங்கஜத்தின் அம்மா... என்னை மனம் நோகப் பேசிவிட்டாங்க அத்தான்...''

''என்னது...''

சுந்தரம் கண்கள் சிவக்க எழுந்துவிட்டான்...

"என்ன தைரியமிருந்தால்... என் பெண்டாட்டியை பேசுவாங்க... என்ன நினைத்துக் கொண்டிருக்கிறாங்க..? விடு... அந்த பங்கஜத்தின் புருசனை நான்கு கேள்விகள் கேட்டுவிட்டு வந்து விடுகிறேன்..."

"வேண்டாம் அத்தான்..."

"என்னைப் போகவிடு அனு... என் கோபத்தைப் பற்றித் தெரிந்து கொண்டே என்னைத் தடுக்காதே... இந்த சுந்தரத்தின் பெண்டாட்டிக்கு மரியாதை கொடுக்க வில்லையெனில்... அவனின் நட்பே எனக்கு வேண்டாம்... நான் யார் என்று அவனுக்குக் காட்டி விட்டு வருகிறேன்..."

"பொறுங்க அத்தான்... அவங்க என்ன பேசினாங் கன்னு கேட்டுவிட்டு... சண்டைக்குப் போங்க..."

"அதைவேறு நான் அவசியம் கேட்கத்தான் வேண்டுமா...?"

"ஆமாம்..."

"சொல்லு..."

"நான் பங்கஜத்திற்கு வளையல் போடப்போன போது... அவளுடைய அம்மா என்னைப் பார்த்து... என்ன கேட்டாங்க தெரியுமா..."

"அதைத்தான் சொல்லித் தொலையேண்டி..."

"என் மகளுக்கு கல்யாணமாகி... ஒரு வருசம் கூட ஆகவில்லை... வளைகாப்பு செய்யப் போகிறோம்...



உனக்குக் கல்யாணமாகி நான்கு வருடங்களாகப் போகிறது.. இன்னும் நீ அப்படியேதான் இருக்கிற... நீ வளையல் போட்டால் எங்க பெண்ணுக்கு ஆகாதுன்னு சொல்லிட்டாங்க அத்தான்..."

அனுபமா பொங்கி அழ ஆரம்பித்தாள்... சுந்தரம் அவளைத் தன் மடியினில் சரித்துக் கொண்டான்...

"அவங்க கேட்டதும் நியாயம்தானே அத்தான்... நீங்கள் அவங்க வீட்டிற்குப் போய் சண்டை போட வேண்டாம்..."

"அவங்க சொன்னதற்காகவா... இப்படி அழுகிறாய்? மக்கு... உனக்கு நான் குழந்தை.. எனக்கு நீ குழந்தைடி..."

"நமக்கென்று ஒரு குழந்தை வேண்டும் அத்தான்... உங்கள் குழந்தைக்கு நான் அம்மாவாக வேண்டும்..."

அனுபமாவின் வார்த்தைகளில் தாய்மையின் தவிப்புத் தெரிந்தது... அவள் விட்ட கண்ணீரைக் காணச் சகிக்காமல் சுந்தரம் அவளை மருத்துவ மனைக்கு அழைத்துச் சென்றான்...

"கொஞ்சம் பலவீனமாக இருக்கிறாங்க... இந்த மாத்திரை மருந்துகளைச் சாப்பிடச் சொல்லுங்க... தவறாமல்... வாராவாரம் செக்கப்பிற்கு அழைத்துக் கொண்டு வாங்க..."

லேடி டாக்டர் கொடுத்த மருந்து மாத்திரைகளை ஒருபக்கம் விழுங்கிக் கொண்டே... இன்னொரு

பக்கம்... கோவில்...கோவிலாகச் சுற்றினாள் அனுபமா...

சுந்தரம்... மாலை நேரத்தின் மயக்கத்தில்... மனைவியிடம் பாடச் சொல்லிக் கேட்டால்...

*" சொல்லடா... வாய்திறந்து...*
*'அம்மா' என்று...*
*துன்பமே மறந்து விட்டேன்*
*உன்னால் இன்று..."*

என்று பாடி வைத்தாள்... அவளின் தாய்மையுற வேண்டுமென்ற தவிப்பைக் கண்டு சுந்தரம் நொந்து போய்விட்டான்...

''கடவுளே... சீக்கிரம் என் அனுவை அம்மாவாக்கு..."

அவனின் வேண்டுகோள் கடவுளின் காதுகளில் விழுந்தது... அனுபமா தாய்மையுற்றாள்.. சுந்தரம் அவளைக் கண்ணுக்குள் வைத்துப் பார்த்துக் கொண்டான்...

திருமணமாகி ஆறு வருடங்கள் கழித்து... ஆயிரத்து தொள்ளாயிரத்து எழுபத்தி ஒன்பதாம் ஆண்டு.... அனுபமாவை "அம்மா...! என்று அழைக்க முகுந்தன் பிறந்தான்...

"இதோ உங்கள் மகன் அத்தான்... உங்களை அப்பாவாக்கிவிட்டேன்.. உங்கள் மகனுக்கு நான் அம்மாவாகி விட்டேன்..."



காதலுடன்... கசிந்துருகினாள்... அனுபமா... அவளது வார்த்தைகளில் தொனித்த குதூகலத்தை ரசித்தபடி அவளைப் பார்த்தான் சுந்தரம்.

## 34

ஒரு குழந்தைக்காக தவம் இருந்த அனுபமா விற்கு... மூன்று குழந்தைகள் பிறந்தன... மூன்று வருட இடைவெளிவிட்டு முகுந்தனுக்கு அடுத்ததாக ஆயிரத்து தொள்ளாயிரத்து எண்பத்தி இரண்டில் வைகுந்த் பிறந்தபோதே... சுந்தரம் கூறினான்...

''நாம் இருவர்... நமக்கு இருவர் அனுபமா..." ஆனால் அனுபமா... பெண் குழந்தையொன்றை பெற்றெடுக்க ஆசைப்பட்டாள்..

''நீங்கள் வைகுந்த் பிறக்கும் போதே... பெண் குழந்தைதான் வேண்டும்ன்னு ஆசைப்பட்டிங்க..."

''என் ஆசைக்காக இன்னொரு குழந்தையை பெற்றுக் கொள்ளப் போகிறாயா? போடி பைத்தியம்..."

''இல்லை அத்தான்... உங்களுக்கு பெண் குழந்தைகள் என்றால் எவ்வளவு பிரியமுன்னு எனக்குத் தெரியும்... உங்களுக்கு... நீங்கள் ஆசைப் பட்டபடி... ஒரு பெண் குந்தையைப் பெற்றுக் கொடுப்பேன்..."

"என் ஆசையை மட்டும் பார்... உன் உடல் நலத்தைப் பற்றி யோசிக்காதே... ஏற்கனெவே பலவீனமான உடம்பு... மூன்றாவது பிரசவத்தை நீ தாங்க மாட்டாய் அனு..."

ஆனால்... அனுபமா அதைத் தாங்கிக் கொண்டாள்... பிடிவாதமாக... பெண் குழந்தையொன்றைப் பெற்றெடுத்தாள்... ஆயிரத்து தொள்ளாயிரத்து எண்பத்தி ஐந்தில் பிறந்த அந்தப் பெண் குழந்தைக்கு... ஆசையாய்... லாவண்யா... என்று அவர்கள் பெயர் வைத்தார்கள்...

பிள்ளைகள் வளர ஆரம்பித்தபோது... அனுபமா... சுந்தரத்திடம் காட்டிய அக்கறை குறைந்தது... அவனுடன் கழித்த நேரமும் குறைந்தது...

அவளது அன்பையும்... அக்கறையையும்... சுந்தரத்தின் பிள்ளைகள் பறித்துக் கொண்டார்கள்..

அவளின் நேரத்தை... அவர்கள் ஆக்ரமித்துக் கொண்டார்கள்... அனுபமாவின் மூச்சுக்காற்று... பிள்ளைகள்தான் என்று ஆகிப்போனபின்... சுந்தரம்... அவளது தாய்மையுணர்வை தவித்தபடி விலகி நிற்க ஆரம்பித்தார்...

முகுந்தன்... இயல்பிலேயே சுயநலவாதி... முதல் குழந்தையாய் பிறந்த காரணத்தினாலும்... தவமிருந்து பெற்ற மகன் என்று பெற்றவர்கள் சீராடியதை மூன்று வருடங்கள் தனியனாக இருந்த அனுபவித்த



காரணத்தினாலும்... எதிலும் தனக்கே முன்னுரிமை வேண்டுமென்று நினைப்பான்...

"அனு... உனக்கு நான் வாங்கிக் கொடுத்த பேனா எங்கே..."

"முகுந்தன் ஆசைப்பட்டான்ங்க... கொடுத்து விட்டேன்..."

"முட்டாள்... அது தங்க மூடிபோட்ட பேனாடி..."

"இருக்கட்டுமே... என் தங்கப் பிள்ளையை விட அந்தப் பேனா ஒன்றும் எனக்குப் பெரிதில்லை..."

பிள்ளைப் பாசத்தில் அவள் உருகிக் கொடுத்த பேனாவை... நண்பனின் பிறந்த நாளுக்கு... அவனுக்கு அன்பளிப்பாக கொடுத்து விட்டு வந்து முகுந்தன் நின்றபோது... சுந்தரம்... அவனை முறைக்க... அனுபமாவோ... அப்போதும்... அவனுக்கு வக்காலத்து வாங்கினாள்...

"பரிசு என்பது எதுங்க...?"

"எதுடி...?"

"தான் நேசிப்பதை... பிறருக்கு கொடுப்பது..."

"ஓஹோ..."

"என் பிள்ளையும் அதைத்தான் செய்திருக்கிறான்..."

"நீ இப்படியே சொல்லிக் கொண்டிரு..."

"உங்களுக்கு அவன் எதைச் செய்தாலும் தப்பாகத்தான் தோன்றும்... பாராட்டத் தோன்றாது..."

"அதுதான் எனக்கும் சேர்த்து நீ பாராட்டு கிறாயே... போதும்..."

இளையவன் வைகுந்த்... முகுந்தனுக்கு நேர்மாறான குணம் கொண்டவன்... அவனுக்கு அனுபமாவை மிகவும் பிடிக்கும்...

அன்னை மூத்த மகனைக் கொண்டாடிக் கொண்டிருந்தால்... இவன்... அவளைக் கொண்டாடிக் கொண்டிருப்பான்...

அனுபமாவின் அருகில் வந்து நின்றுகொண்டு... தோளில் சாய்ந்துகொள்வான்... அவளது சேலை முந்தானையைப் பிடித்துக் கொண்டே சுற்றுவான்...

"இவன் அப்படியே என் ஜெராக்ஸ் காபிடி..." என்பான் சுந்தரம்...

"ஏன்அப்படிச் சொல்கிறீங்க...?"

"உன் முந்தானையை விடாமல் பிடித்துக் கொண்டு சுற்றுகிறானே... எனக்கே இவனைப் பார்த்தால் பொறாமையாக இருக்கிறது... எனக்குப் போட்டியாக அன்பைப் பொழிகிறானே..."

"போதுமே... மூன்று பிள்ளைகளைப் பெற்றத் தகப்பன் போலப் பேசுங்கள்... போங்க..."



கடைக்குட்டி லாவண்யா... முழுக்க முழுக்க அப்பாவின் செல்லமாக வளர்ந்தவள்... சுந்தரத்தின் அனைத்துக் குணங்களின் வார்ப்பு அவள்... படிப்பில் கெட்டிக்காரி... பேச்சில் அமைதி... பார்வையில் கண்டிப்பு... தீட்சண்யமான பேச்சு...

"வைகுந்த் உங்கள் ஜெராக்ஸோ இல்லையோ... இந்த லாவண்யா குட்டி... அச்சு அசல்... வேடி சுந்தரம்தான்" அனுபமா அதிசயமாகச் சொல்வாள்...

அது ஒரு பொற்காலம்... காதலனும்... காதலியும் கணவன்... மனைவியாக மாறி... மூன்று குழந்தை களுக்கு தகப்பனும்... தாயுமாக ஆகி... வாழ்ந்து வந்த காலம்... நினைக்க... நினைக்க இனிக்கும் நிலாக் காலம்...

தாய் பறவையின் சிறகடியில் குஞ்சுகள் இருந்த போது... தாயின் சிறகு... இதமாய் இருக்கும்... குஞ்சு களுக்கு சிறகு முளைத்தால்... அவை தாயின் சிறகுக் கடியில் இருக்குமா...?

## 35

முகுந்தன் கல்லூரியில் படித்து... பொறியியல் படிப்பை முடித்து வெளியே வந்தவுடன்... சுந்தரத்தின் கம்பெனிகளில் ஒன்றின் பொறுப்பை எடுத்துக் கொள்ளத் துடித்தான்... ஆனால் சுந்தரம் அதை

மறுத்துவிட்டார்... கேள்வியாகப் பார்த்த அனுபமாவிடம் கண்டிப்புடன் பதில் கூறினார்...

"அனு... இதில் நீ தலையிடாதே..."

"ஏன்..? நமக்கு இத்தனை தொழில்கள் இருக்க நம் மகன் ஏன்... இன்னொருவரிடம் கைகட்டி வேலை பார்க்க வேண்டும்? நம் தொழில்களில் ஒன்றை அவன் பொறுப்பில் விட்டால் என்ன...?"

"நான் பெரியவனானபோது... என் அப்பா அவருடைய தொழிலை... என் பொறுப்பில் விடத் துடித்தார்... நான் மறுத்துவிட்டேன்... இத்தனைக்கும்... நான் அவருக்கு ஒரே பிள்ளை... அவருக்குப்பின் அந்தத் தொழிலின் உரிமையாளன் ஆகப் போகிறவன்..."

"ஏன் வேண்டாமுன்னு சொன்னீங்க...?"

அனுபமா அப்பாவியாய் கேட்டாள்... மனைவியின் அந்தக் குழந்தைத்தனத்தை ரசித்தபடி பதில் கூறினார் சுந்தரம்...

"ஏண்டி... பரம்பரைச் சொத்தில் குளிர்காய்ந்தவன் என்ற பெயர் எனக்கு எதற்கு...? நான் சாதிக்க வேண்டாமா?"

"ஆமாமாம்... பெரிய சாதனையாளர்தான் நீங்க..."

"இல்லையென்று சொல்கிறாயா...?"



"அப்படி நான் சொல்லுவேனா...? நீங்கள் சாதிக்க நினைத்ததால்தானே... என்ஜினியரிங் காலேஜை ஆரம்பித்தீங்க... அதை ஆரம்பித்தால்தானே.... நீங்களும் - நானும் சந்தித்துக் கொள்ள முடிந்தது... சந்தித்துக் கொண்டதால்தானே..."

"போதும்டி... விட்டால்... இன்றைக்கு பூராவும் இதைப் பற்றியே பேசிக் கொண்டிருப்பாய்... அனு... என் மகனும் என்னைப் போல்தான் இருக்க வேண்டும்..."

"அவன் சின்னப் பையன்ங்க... உங்க காலம் வேறு... இந்தக் காலம் வேறு... உங்கள் காலத்தில் போட்டிகள் அதிகம் இல்லை... எல்லோரும் கால் காசு உத்தியோகம் என்றாலும் கவர்ன்மெண்ட் உத்தியோகம் பார்க்கனும்ன்னு நினைத்தாங்க... வியாபாரத்தை விரும்பி... யாரும் அதில் இறங்கவில்லை... இப்போது இருக்கும் காலகட்டமே வேறு... ஒரு தொழிலில் ஆயிரம் போட்டியாளர்கள் களத்தில் இருக்கிறார்கள்... அவர்களைத் தாண்டி ஜெயிப்பது கடினம்... இப்போது யாரும் கவர்ன்மெண்ட் வேலையை விரும்புவது இல்லை அத்தான்... எல்லோருமே அதிகமாய் பணம் சம்பாதிக்க ஆசைப் படுகிறார்கள்..."

"நீ என்னதான் சொல்ல வருகிறாய் அனு..."

"முகுந்தனை உங்கள் அளவுக்கு பார்க்காதீங்க... அவன் தனியாகத் தொழில் தொடங்கினால் நஷ்டப்பட்டு நிற்பான்..."

"நம் தொழிலைப் பார்த்துக் கொண்டாலும்... நஷ்டப்படத்தானே வைப்பான்...?"

"அதற்காக... அவனை அப்படியே விட்டுவிட முடியுமா?"

"நான் அப்படிச் சொன்னேனா...? எனக்குத் தெரிந்தவர்களின் கம்பெனியில் மேனேஜர் வேலை காலியாக இருக்கிறது... இவன் அதில் சேரட்டும்... வேலையையும்... நிர்வாகத்தையும் கற்றுக் கொள்ளட்டும்..."

"அதை நம் கம்பெனிகளிலேயே செய்யக் கூடாதா? நாம் பலபேருக்கு சம்பளம் கொடுத்துக் கொண்டிருக்க... நம் பிள்ளை... வேறு ஒருவரிடம் கைகட்டி வேலை பார்த்து சம்பளம் வாங்குவதா...?"

"நம் கம்பெனியில் அவன் முதலாளிடி.. வேறு இடத்தில் தொழிலாளி... முதலாளியாக இருப்பதற்கு முன்னால்... அவன் ஒரு தொழிலாளியாக இருந்து வேலையைக் கற்றுக் கொள்ளட்டும்..."

சுந்தரம் ஏன் அவ்வளவு பிடிவாதமாக இருக்கிறார் என்று புரியாமல் அனுபமா விழித்தாள்... அவளால்



இந்த விசயத்தில் முகுந்தனுக்கு ஆதரவாக செயல்பட முடியாமல் போய்விட்டது..

முகுந்தன் வேலைக்குச் சேர்ந்த கம்பெனியில்... அவனுக்கு கீழே வேலை பார்த்தவள்தான் நீபா... பார்க்க வெகு அழகாக இருந்தவளைக் கண்டதும் காதலில் விழுந்தான் முகுந்தன்... அவனின் பின்புலத்தைப் பற்றி நன்கு தெரிந்து வைத்திருந்த நீபாவிற்கு... அதை நம்பவே முடியவில்லை... ஆனாலும் பிடிகொடுக்காமல் அவனை அலைய விட்டாள்...

"என்னடி நீபா இது... அவன் காதல் கிடைக்கக் கொடுத்து வைத்திருக்க வேண்டுமென்று என்னிடம் சொல்லிவிட்டு... அவனைக் கண்டு கொள்ளாமல்... அலைய விடுகிறாயே..."

நீபாவின் தோழி கேட்டபோது... நீபா அலட்சியமாக நகைத்தாள்..

"அவன் கேட்டவுடனே ஓகே சொல்லிவிட்டால்... எனக்கு வேல்யூ இருக்காதுடி... என் கைக்குள் அவனை வைத்துக் கொள்ள வேண்டுமென்றால்... அவனை இழுத்தடித்து விட்டுத்தான் பதில் சொல்ல வேண்டும்..."

சொன்னதுபோல்... முகுந்தனை நன்றாக ஏங்க விட்டுவிட்டு... அதன் பின்னால்தான் அவன் காதலை

ஏற்றுக் கொண்டாள் நீபா... தான் கிடைப்பதற்கு அரியவள் என்று அவனை நினைக்க வைத்தாள்... அவள் என்ன சொன்னாலும் மறு பேச்சின்றி முகுந்தனை ஏற்றுக் கொள்ள வைத்தாள்...

நீபாவிடம் சாதுர்யமும்... சாகசமும் நிறைய இருந்தன... முகுந்தனின் சொத்து எங்கே... எவ்வளவு இருக்கின்றன... அவற்றின் மதிப்பு என்ன என்று முகுந்தனுக்கு கொஞ்சம்கூட தெரியாது... ஆனால்... அத்தனை விவரங்களையும்... விரல் நுனியால் வைத்திருந்தாள் நீபா...

அவள் முகுந்தனை விரும்பியது அவனுக்காக அல்ல... அவனுடைய பணத்துக்காக...

## 36

தன் காதலைப் பற்றித் தாயிடம்தான் முதலில் தெரிவித்தான் முகுந்தன்... அதை சுந்தரத்தின் கவனத்திற்கு அனுபமா கொண்டு போனாள்...

"தெரியும்..." என்றார் சுந்தரம் நிதானமாக...

"தெரியுமா...? தெரிந்திருந்துமா இதைப்பற்றி என்னிடம் சொல்லாமல் மறைத்து வைத்தீர்கள்...?"



"சொல்லக் கூடாதுன்னு நினைக்கவில்லை அனு... எனக்கு அந்தப் பெண்ணைப் பற்றிய விவரங்கள் அத்தனை திருப்திகரமாய் தோன்றவில்லை... உன்னிடம் அவசரப்பட்டு சொல்ல வேண்டாமென்று நினைத்தேன்... அவ்வளவுதான்..."

"ஏன்... அந்தப் பெண் நல்லவள்தான்னு முகுந்தன் சொல்கிறானே..."

"மயக்கத்தில் இருக்கிறான்..."

"நீங்களும் என்னிடம் மயங்கியவர்தானே..."

"உனக்கு அந்தப் பெண் இணையில்லை அனு..."

"நமக்கு என்னங்க தெரியும்? வாழப் போகிறவன் அவன்... அவன் விரும்புகிறபோது... நாம் எதற்கு குறுக்கே நிற்க வேண்டும்...?"

"உனக்குச் சொன்னால் புரியாது அனு... வீட்டிற்கு வரும் மருமகளால் வீடு வாழவேண்டும்... வீட்டில் விரிசல் விழுந்துவிடக் கூடாது... அந்தப் பெண்ணின் குடும்பம்... பெருந்தன்மையான குணம் கொண்டதில்லை..."

"மிடில் கிளாஸ் பேமிலி என்பதால் சொல்கிறீங்களா...? அப்படிப் பார்த்தால்... நான் அந்தப்

பெண்ணைவிட ஏழ்மையான குடும்பத்தில் பிறந்தவள்... என்னை நீங்கள் ஏற்றுக் கொள்ளவில்லையா...?"

"ஏண்டி... எப்போது பார்த்தாலும் உன்னையும்... அவளையும் இணை கூட்டியே பேசுகிறாய்...?"

"உங்களுக்கு நான் உயர்த்தியாய் தெரிவதுபோல் முகுந்தனுக்கு அந்தப் பெண் உயர்த்தியாய் தெரிய மாட்டாளா...?

சுந்தரம் எதுவும் பேசாமல் மனைவியையே கூர்ந்து பார்த்தார்... இது அவரின் இயல்பு என்பதை... இத்தனை வருடங்களாய் அவருடன் சேர்ந்து வாழ்ந்திருந்ததால் அனுபமா புரிந்து கொண்டு விட்டிருந்தாள்...

அதனால்... அவருடைய விரலுடன் தன் விரல் களைக் கோர்த்துக் கொண்டாள்... அமைதியாய் தன்னுள் யோசனையில் மூழ்கி விடுபவரை... தன் பக்கம் இழுக்க அவள் கையாளும் உத்திகளில் இதுவும் ஒன்று...

அவள் எதிர்பார்த்தது போலவே சுந்தரத்தின் கண்கள் மின்னின... அவர் அனுபமாவின் விரல் பற்றி விளையாடியவாறு ஆழ்ந்த குரலில் கேட்டார்...

"ஏன் என்னை விரும்பினாய் அனுபமா...?"



"இது என்னங்க அர்த்தமில்லாத கேள்வி... பிள்ளைக்கு பெண் பார்க்கப் போகிறோம்... இப்போது போய் இப்படியொரு கேள்வியைத் தேடிப் பிடித்துக் கேட்கறீங்களே..."

அனுபமாவின் முகத்தில் புரியாத தன்மை இருந்தது... அதை அறிந்து கொள்ளாததுபோல்... மேலும் பேச்சை வளர்த்தார் சுந்தரம்...

"எனக்குப் பதில் வேண்டும் அனு..."

"என்ன பதிலைச் சொல்ல...? உங்களைப் பிடித் திருந்தது... விரும்பினேன்... இது ஒரு கேள்வியா...-"

"எதனால் பிடித்திருந்தது...? நான் பணக்காரன் என்பதினாலா...? இப்படியொரு கோடிஸ்வர வாழ்க்கையை வாழலாம் என்ற ஆசையினாலா...?"

சுந்தரம் நிதானமாய் கேட்க... துடித்துப் போய் நிமிர்ந்து அவரை அடிபட்ட பார்வையொன்றைப் பார்த்தாள் அனுபமா... அவளது விழிகள்... 'நீயா... இதைக் கேட்பது?' என்று அவரைப் பார்த்துக் கேட்டன...

"இப்படியொரு நல்ல அபிப்ராயத்தை மனதில் வைத்துக் கொண்டுதான்...இத்தனை நாள்களாய் என்னுடன் குடும்பம் நடத்தினீர்களா...?"

"காரணமாகத்தான் நான் இந்தக் கேள்வியைக் கேட்கிறேன் அனு... நான் பணக்காரன் என்பது உண்மைதானே..."

"அதைத்தாண்டி வேறு எந்த அடையாளமும் உங்களுக்கென்று இல்லையா...? என்னைப் பொறுத்தவரை நீங்கள் எனக்குத் தாய்... உங்களிடம் பணமில்லாமல் பரம ஏழையாக நீங்கள் இருந்திருந்தாலும்... யாருமில்லாமல் அநாதையாக நின்ற எனக்கு சாய்ந்து கொள்ளத் தோள் கொடுத்த உங்களின் மேல் எனக்குக் கட்டாயம் காதல் வந்திருக்கும்..."

அனுபமாவின் விழிகளில் கசிந்த கண்ணீரைத் துடைத்துவிட்ட சுந்தரம்... தன் மார்பில் அவளைச் சாய்த்துக் கொண்டார்...

"அழாதே அனு... உன்னை அழவைக்க வேண்டும் என்பதற்காக நான் இதைக் கேட்கவில்லை... நீ உன்னுடன் அந்தப் பெண்ணை ஒப்பிட்டுப் பேசுகிறாயே... அது தவறு என்று உணர்த்தத்தான் அப்படி நான் பேசினேன்... அனு... இதைக் கேட்டு நீ அதிர்ச்சியடைந்து விடக்கூடாது... அந்தப் பெண் நீபா... முகுந்தனை... அவனுக்காக விரும்பவில்லை... அவனுடைய பணத்திற்காக விரும்புகிறாள்..."



அனுபமா வாயடைத்துப் போனாள்... அவள் முகத்தில் அதிர்ச்சி அப்பட்டமாய் தெரிந்தது..

"யாரோ வேண்டாதவங்க சொன்னதைக் கேட்டு. நீங்கள் அவசரப்பட்டு... எந்த முடிவிற்கும் வந்து விடாதீங்க..."

"இல்லை அனு... நம் முகுந்தன் அந்தப் பெண்ணுடன் சுற்ற ஆரம்பித்த போதே.. நான் அந்தப் பெண்ணைப் பற்றிய எல்லா விவரங்களையும் விசாரித்து விட்டேன்..."

அனுபமாவின் விழிகளில்... முதன் முறையா பயம் வந்தது....

## 37

அதுவரை வாழ்க்கையில் எந்தவிதமான சிக்கலான சூழலையும் அனுபமா சந்திக்க நேர்ந்ததில்லை... அவளுக்கு அப்படிப்பட்ட சூழல்கள் நேரும்படி... சுந்தரமும் விட்டதில்லை...

அன்று முதன்முதலாக... முகுந்தனின் திருமணத்தில் என்ன முடிவு எடுப்பதென்ற சிக்கலான சூழ்நிலையைச் சந்தித்தாள் அவள்...

"அம்மா... கல்யாணம் என்ற ஒன்றைப் பண்ணிக் கொள்வதாக இருந்தால்... நீபாவைத்தான் கல்யாணம் பண்ணிக் கொள்வேன்... இல்லாவிட்டால்... சாமியாராகப் போய் விடுகிறேன்...'' என்றான் முகுந்தன்...

அனுபமா பதறிப்போய்... இந்த விசயத்தை கணவனின் காதுகளுக்கு கொண்டு போனாள்... சுந்தரம் சிரித்தார்...

''சாமியாராகப் போகப் போகிறானா...? யார் இவனா...? வேளைக்கொரு உணவும்... காலையிலும்... மாலையிலும் வித... விதமான உடைகளும்... காரும்... பங்களாவும்... கைநிறைய செலவளிக்க பணமும் இல்லாமல் இவனால் வாழ முடியுமா...? சாமியாராகப் போக வேண்டுமானால் முற்றும் துறக்க வேண்டும்டி... இவன் நான் சொன்னவற்றில் ஒன்றைக் கூடத் துறக்க மாட்டானே...''

இதை எப்படி மகனிடம் சொல்வது...? அனுபமா இருதலைக் கொள்ளி எறும்பாகத் தவித்தாள்...

''அப்பா மட்டும் உங்களைக் காதலித்துக் கல்யாணம் பண்ணிக் கொள்ளலாம்... நான் நீபாவைக் காதலித்துக் கல்யாணம் பண்ணிக் கொள்ளக் கூடாதா..?'' என்ற மகனின் கேள்விக்கு.

''என்னைக் காதல் கல்யாண விசயத்தில் மட்டும்... அவன் பின்பற்ற நினைக்க வேண்டாம்



அனு.... நான் சாதித்த சாதனைகளை செய்வதிலும் பின்பற்றச் சொல்... நான் என் அப்பாவின் பணத்தில் குளிர் காயவில்லை... இவனும் அதே போல் சாதித்து விட்டு... விரும்பும் பெண்ணைக் கல்யாணம் பண்ணிக் கொள்ளட்டும்...'' என்று சுந்தரம் பதில் கொடுத்தார்.

இதை மனைவியிடம் சொன்னால்... கட்டாயம் மகனிடம் சொல்லமாட்டாள் என்பதால்... சாப்பாட்டு மேஜையில் வைத்து... எல்லோரின் முன்னாலும் அவர் சொல்லி வைக்க... முகுந்தன் சாப்பிடாமலே எழுந்து சென்று விட்டான்...

''ஆயிரம்தான் நீங்கள் காரணம் சொன்னாலும் நீங்கள் செய்தது தவறு. அப்படிச் சொல்லியிருக்கக் கூடாது... அவன் அவர்களுக்கு அண்ணன் இல்லையா...? குடும்பத்திற்கு மூத்தவன் இல்லையா...? அந்த மரியாதையை நீங்கள் அவனுக்குக் கொடுக்க வேண்டாமா?'' என்று அனுபமா கணவனைக் கடிந்து கொண்டாள்...

''மரியாதையை எதிர்பார்ப்பதில் மட்டும் அவன் மூத்தவன் என்ற நிலையில் இருக்கக்கூடாது... மற்ற செயல்களிலும் அவன் மூத்தவனாக நடந்து கொள்ள வேண்டும்... நாளைக்கு அவனைக் கல்யாணம் பண்ணிக் கொண்டு வரும் பெண்ணினால் இந்த வீட்டில் குழப்பங்கள் வந்தால்... அது அவனை மட்டுமா பாதிக்கும்...? அவனோடு சேர்த்து எல்லோரையும் பாதிக்காதா...?''

சுந்தரத்தின் தொலை நோக்கான கவலை ஒருநாள் உண்மையாகக் கூடும் என்று அனுபமா கண்டாளா என்ன...? அவள் மூத்த மகனை சமாதானம் செய்வது எப்படி என்ற கவலையில் இருந்தாள்... இப்படியே போராட்டத்தில் ஒரு வருடம் ஓடிவிட... நீபா... முகுந்தனுக்கு வழி சொல்லிக் கொடுத்தாள்...

"போராட்டம் பண்ணுங்கள் முகுந்த்... ஜெயித்து விடலாம்..."

"எப்படிப் போராடுவது...?"

"பட்டினிப் போராட்டம் நடத்துங்களேன்... நீங்கள் பட்டினி கிடந்தால் உங்களுடைய அம்மா தாங்க மாட்டாங்க... உங்க அம்மா சொல்வதை உங்க அப்பா கண்ணை மூடிக்கிட்டு கேட்பாருன்னு சொல்கிறீங்க... அப்புறம் என்ன...?"

"எனக்குப் பசி தாங்காது நீபா..."

'இவன் மட்டும் பணக்காரனாக இல்லாமல் இருந்திருந்தால் திரும்பியே பார்த்திருக்க மாட்டேன்...' என்று மனதிற்குள் எரிச்சல் பட்டாள் நீபா...

"உங்களை வீட்டில் சாப்பிட வேண்டா மென்றுதான் சொன்னேன் பட்டினி கிடக்கச் சொல்லிச் சொல்லவில்லை..."



"என் அப்பா இதை எளிதாக கண்டுபிடித்து விடுவார்..."

"அம்மா கண்டுபிடிக்க மாட்டாங்க இல்லையா...? நமக்கு அதுபோதும்... தாய்பாசம்... மகனின் பட்டினியை தாங்கிக் கொள்ளாது..."

நீபாவின் கணிப்பு மிகச் சரியாக இருந்தது... முகுந்தன் ஒரே ஒருநாள்தான் வீட்டில் உணவைத் தவிர்த்தான்... அதையே அனுபமாவினால் தாங்கிக் கொள்ள முடியவில்லை... அவள் கணவனிடம் முறையிட்டாள்...

"ஏய்ய்.. அவன் ஹோட்டலில் மொக்கியிருப் பாண்டி..."

"உங்கள் மனது எப்போது இப்படிக் கல்லாக மாறிப் போனது அத்தான்... நான் காதலித்த அந்த கருணை எங்கே போனது...?"

"சொன்னால் கேளு அனு... அந்தப் பெண் முகுந்தனுக்கு வேண்டாம்..."

"அதைத் தீர்மானிக்க நீங்களும்... நானும் யார் அத்தான்...? மனதுக்குப் பிடித்தவங்களுடன் வாழ்வதற்குப் பெயர்தான் வாழ்க்கை... அந்தப் பெண் வருவதால் நமக்குத்தானே பாதகம் வரும்..?வந்தால் வந்து விட்டுப் போகட்டும்... முகுந்தன் அவளுடன்

சந்தோசமாக வாழ்வான் இல்லையா... அது எனக்குப் போதும்..."

"அவள்... நம் மகனை நம்மிடமிருந்து பிரித்து வைப்பாள்... அனு..."

இந்த வார்த்தை அனுபமாவின் மனதைத் தாக்கியது... அவள் உடலும்... மனமும் நடுங்க... கணவனை ஏறிட்டுப் பார்த்தாள்...

"பிரித்து விடுவாளா...? என் மகனை என்னிடமிருந்து பிரித்து விடுவாளா...? என் மகன்... அவள் சொன்னால்... என்னை விட்டுப் பிரிந்து விடுவானா...? அது ஒரு நாளும் நடக்கக் கூடாது அத்தான்... நடந்தால் நான் தாங்கிக் கொள்ள மாட்டேன்..."

அனுபமாவினால் தாங்கிக் கொள்ள முடியாமல் தான்போனது... அவளுக்கு மருமகளாக நீபா வந்தபின் வீசிய சொல்லம்புகளைத் தாங்க முடியாமல் அவளது மென்மையான மனம் அதிர்ச்சியில் விழுந்தது... கைகால்கள் செயலிழந்துபோனவளாய் ஒருநாள் அனுபமா நடக்க முடியாமல் படுக்கையில் வீழ்ந்தாள்...

எதைச் சொன்னாலும் மனைவி கேட்காமல் போக... சுந்தரம் வேறு வழியின்றி நீபாவின் வீட்டிற்குப் பெண் கேட்கப் போனார்... முகுந்தனை முடுக்கி விட்டு மனைவியாகஆவதற்கு முன்னாலேயே தன் முதல் வெற்றியைச் சந்தித்தாள் நீபா...



## 38

இரண்டாயிரத்து ஏழாம் ஆண்டில் மிக விமரிசையாக முகுந்தன்... நீபாவின் திருமணம் நடந்தது... மருமகளாக அவள் அந்த வீட்டில் காலடி வைத்து மறு வருடமே... அனுபமா... முதன் முதலாக கைகால்களில் மரத்துப் போன உணர்வை சந்தித்தாள்...

"ஸ்ட்ரோக்காக இருக்கும் சான்ஸ் இருக்கிறது சுந்தரம்..."

சுந்தரத்தின் குடும்ப டாக்டர் கவலையுடன் கூற... சுந்தரம் ஆடிப் போனார்... சென்னையின் பிரபல மருத்துவமனைக்கு மனைவியைத் தூக்கிக் கொண்டு ஓடினார்... அனுபமாவிற்கு வந்திருப்பது பக்கவாதம் தான் என்பதை மருத்துவர்கள் உறுதி செய்தனர்... மனைவியை சக்கர நாற்காலியில் உட்காரவைத்துக் கொண்டு தஞ்சாவூருக்குத் திரும்பினார் சுந்தரம்...

"அம்மா என்ன செய்வாங்கப்பா... வாயைத் திறந்தால் விசத்தைக் கொட்டும் மருமகளிடம் இருந்து தப்பித்து ஓடி ஒளிந்து கொள்ள அவங்களுக்கு இடமேது அப்பா..." வைகுந்த் ஆத்திரப்பட்டான்...

சுந்தரத்திற்கு அது நன்றாகத் தெரியும்... நீபாவிடம் பேசுவதை அவர் முற்றிலும் தவிர்த்தார்... குடும்ப நிர்வாகத்தைக் கைப்பற்றிக் கொள்ள அவள் திட்டமிட்டு முகுந்தனை முடுக்கிவிட... அவன் சுந்தரத்திடம் வந்து நின்றான்...

"அப்பா..."

"சொல்லுடா..."

"அம்மாவிற்கோ நடக்க முடியாது... சக்கர நாற்காலியில் விழுந்து விட்டாங்க..."

இதைக் கொஞ்சம் கூட வருத்தமில்லாமல் சொல்லும் மகனை உற்றுப் பார்த்தார் சுந்தரம்... அவர் மனதில் புயலடித்தது...

"அதற்காக.. இப்போது என்ன செய்யனும்ங் கிற...?"

"குடும்பப் பொறுப்பை நீபா பார்த்துக் கொள்ளட்டும்..."

முகுந்தனின் பின்னால் ஏதோ வேலை செய்வது போல் பாவனை செய்துகொண்டே நடப்பதைக் கேட்டுக் கொண்டிருந்த நீபாவை அவர் முறைத்தார்... அவள் அதைக் கண்டு கொண்டதாகவே காட்டிக் கொள்ள வில்லை...

'இவள் சாகஸக்காரி...'



அதற்கு மேல் அவளைப் பற்றி யோசிக்க... மருமகள் என்ற உறவும்... உணர்வும் தடுக்க... சுந்தரம் கண்டிப்புடன் மகனை நேருக்கு நேராகப் பார்த்தார்...

"முகுந்த்... வீட்டுப் பொறுப்பை நான் பார்த்துக் கொள்வேன்... நீ உன் வேலையை மட்டும் பார்... போதும்..."

"அப்பா..."

"பேக்டரியின் ஜெனரல் மேனேஜர் பொறுப்பில் இருக்கிறாய்... அதை ஒருங்காகப் பார்... இது என் வீடு... இதை நிர்வகிக்க எனக்குத் தெரியும்..."

"அப்பா... நீபா என்ன சொல்கிறாள் என்றால்..."

"ச்ச்... உன் மனைவி சொல்வதை நீ கேட்டு நடந்து கொள் முகுந்த்... என் காதுகளுக்கு கொண்டு வராதே..."

நீபா ஆத்திரப்பட்டாள்... வார்த்தைக்கு வார்த் தை... அவள் அந்த வீட்டின் மருமகள்... எஜமானி... என்ற உரிமையை நிலைநாட்ட ஆரம்பித்தாள்...

சுந்தரம் யோசித்தார்... அனுபமா வேறு... வைகுந்தையும்... லாவண்யாவையும் பற்றிக் கவலைப் பட ஆரம்பிக்க... உடனடியாக இருவருக்கும் திருமணத்தை நிச்சயம் செய்தார்...

இரண்டாயிரத்து எட்டாம் ஆண்டின் இறுதியில் வைகுந்தின் திருமணமும்... லாவண்யாவின் திருமணமும் ஒன்றன்பின் ஒன்றாக நடந்துவிட... நீபா கொதித்துப் போனாள்...

"அவள் மட்டும் மருமகளாக இருந்த வீட்டில்... ரேகாவும் மருமகளாக வந்து சேர... அவளது தனி உரிமை பறிபோனது... போதாத குறைக்கு... தன் வைர நகைகள் அனைத்தையும் மகளுக்கு அனுபமா கொடுத்துவிட... மனதிற்குள் கொதித்துப் போனாள் நீபா... முகுந்தனை வேறு விதமாக தூண்டிவிட்டாள்...

"உங்க அப்பாம்மாவிற்கு இருக்கும் ஓரவஞ்சனையைப் பார்த்தீங்களா முகுந்த்..."

"நீ என்ன சொல்ல வருகிறாய் நீபா...?"

"உங்கள் கல்யாணத்திற்கு எவ்வளவு தூரம் போராடினீர்கள் அதுவே உங்களைவிட மூன்று வயது இளையவரான உங்கள் தம்பிக்கு.. நம் கல்யாணம் நடந்து முடிந்த அடுத்த வருடமே... கேட்காமலேயே கல்யாணம் நடக்கிறது என்றால்... அது உங்களுக்கு நடக்கும் அநியாயம் இல்லையா...?"

"நம்முடையது காதல் கல்யாணம் நீபா... வைகுந்த்... வீட்டில் பார்த்த பெண்ணைக் கேள்வியே



கேட்காமல் கல்யாணம் பண்ணிக் கொண்டான்... நான் அப்படியில்லையே..."

முகுந்தன் சொன்ன சரியான பதிலைக் கேட்டு நீபா மனதிற்குள் வெகுண்டாள்... மனைவியிடம் விட்டுக் கொடுக்காமல் பேசினாலும் முகுந்தனின் மனதிலும் முள் தைத்துக் கொண்டுதான் இருந்தது... அவன் அனுபமாவிடம் அமர்ந்து பேசுவதை கூடுமான வரை தவிர்த்தான்...

நீபா மனதிற்குள் சந்தோசம் கொண்டாள்... நகைகளையெல்லாம் ஒட்டு மொத்தமாக மகளுக்கு தாரை வார்த்துக் கொடுத்துவிட்ட மாமியாரைப் பழிவாங்கி விட்ட மனத்திருப்தி அவளுக்கு வந்தது...

ரேகாவின் வெகுளியான குணத்தை கண்டு கொண்ட நீபா... அவள் மனதைக் கலைக்க ஆரம்பித்தாள்...

"இதோ பார் ரேகா.. என் அம்மாதான் எனக்கு தெய்வம்... அவங்க மனம் கஷ்டப்படும்படி நீ ஒரு வார்த்தை பேசினாயென்று எனக்குத் தெரிந்தால்... அன்றோடு உன்னை வெறுத்து ஒதுக்கி வைத்து விடுவேன்..."

அண்ணனின் மனைவியின் அட்டகாசத்தை நினைத்துப் பயந்து... முன்னெச்சரிக்கையாக வைகுந்த் ஒரு வார்த்தையை முதலிரவன்று சொல்லி வைக்கப்

போக... கணவனின் மேல் கரை காணாத காதலுடன் இருந்த ரேகாவிற்குள்... பயம் பற்றிக் கொண்டது...

அதைக் கணித்து விட்ட நீபா... ரேகாவின் பயத்தை அதிகப்படுத்த ஆரம்பித்தாள்...

''பாவம் ரேகா நீ.. என் கணவர் என் மேல் உயிரையே வைத்திருக்கிறார்... ஆனால் உன் கணவர்... அவரின் அம்மாவின் மேல் உயிரை வைத் திருக்கிறார்... அவருடைய அம்மா பார்த்து ஒரு வார்த்தை குறைவாக உன்னைப் பற்றிச் சொல்லி விட்டால்... உன் நிலைமை என்ன ஆகுமோ...?''

விதைத்த விதை முளைத்து விருட்சமாக வேர்விட... ரேகா...அனுபமாவை வில்லியாக பார்க்க ஆரம்பித்தாள்.

## 39

நீபா ஆரம்பித்து வைத்த விபரீத விளையாட்டு... பாகப் பிரிவினையில் போய் முடிந்தது... சுந்தரமும்... அனுபமாவும்... தனிமையான வாழ்க்கையை வாழ ஆரம்பித்தனர்...

அன்று ஒரு நாள்... குழந்தை பிறக்கத் தாமதமானபோது... சுந்தரம் அனுபமாவைத் தேற்ற..



''உனக்கு நான்... எனக்கு நீ...'' என்று ஆறுதல் சொன்னார்..

அது உண்மையாகிப் போன துயரத்தில்... அனுபமா மனதிற்குள் ஊமை அழுகையை... அழுது கொண்டிருந்தாள் விசாலமும்... கோவிந்தனும்... வீட்டைப் பார்த்துக் கொண்டார்கள்... சுந்தரம் அனுபமாவை கண்ணும் கருத்துமாய் பார்த்துக் கொண்டார்... வைகுந்த்... காலையில் கம்பெனிக்குப் போவதற்கு முன்னாலும்... மாலையில் கம்பெனி விட்ட பின்னாலும்... அனுபமாவைப் பார்க்க வந்து... அவளுடன் தினமும் தன் நேரத்தைச் செலவிட்டான்...

''ரேகா எப்படியிருக்கிறாள் வைகுந்த்...?''

''ம்ம்... இருக்கிறாள்...''

''நீங்கள் இரண்டு பேரும் சந்தோசமாக இருக்கிறீர்களா...?''

''ம்ம்... இருக்கிறோம்...''

வைகுந்தின் விட்டேற்றியான பதில் அவனது வாழ்க்கையை அனுபமாவிற்கு உணர்த்திவிட... அவள் யோசிக்க ஆரம்பித்தாள்... சுந்தரம் வினவியபோது...

''நீபாவின் குணம் சரியில்லையென்றாலும்... அவள் முகுந்தன் விரும்பிய பெண்...அவர்களின் வாழ்க்கை சந்தோசமாகத்தான் இருக்கும்... ஆனால் வைகுந்த் அப்படியில்லையே... இவன் என்னை

நினைத்துக் கொண்டு... ரேகாவை தள்ளி வைக்கிறானோ... என்று எனக்குப் பயமாக இருக்கிறது..." என்று பதில் கூறினாள்..

"வைகுந்த் குழந்தையில்லை அனு... அவனுக்கு... அவனுடைய வாழ்க்கையை வாழத் தெரியும்... மனைவியைத் திருத்த நினைத்திருப்பான்... நீ அதை உன் மனதில் போட்டு உழப்பிக் கொண்டு இருக்காதே..." சுந்தரம் அறிவுரை கூறினார்...

அனுபமாவின் மனம் சமாதானம் அடையவில்லை... அடுத்த நாள் வைகுந்த் அவளைப் பார்க்க வந்தபோது... அவனது கையைப் பிடித்துக் கொண்டு நலிந்த குரலில் பேசினாள்...

"வைகுந்த்..."

"என்னம்மா..."

"எனக்கு ரேகாவைப் பார்க்க வேண்டும் போல் இருக்குடா... அவளை நாளைக்கு அழைத்துக் கொண்டு வருகிறாயா...?"

தாயின் சொல்லைத் தட்டாத தனயனாக வைகுந்த் மறுநாள் ரேகாவை அழைத்துக் கொண்டு வந்தான்... ரேகா இளைத்துப் போய்... கண்களில் ஒருவித சோகத்துடன் இருந்தாள்..

"வைகுந்த் உன் அப்பா இன்றைக்கு காலேஜின் கணக்குகளைப் பார்க்கப் போக வேண்டுமென்று



சொன்னார்... ரேகா என்னுடன் துணைக்கு இருக்கட்டுமா...? நீ சாயந்திரம் வந்து அவளைக் கூப்பிட்டுக் கொண்டு போகிறாயா...?"

சுந்தரம் மனைவியின் நோக்கத்தைப் புரிந்து கொண்டார்... அவள் மருமகளைத் தன்னுடன் நிறுத்திக் கொள்ளக் கண்டுபிடித்த காரணத்தை உண்மையாக்குவதற்காக கல்லூரிக்குக் கிளம்பினார் வைகுந்த் கம்பெனிக்குச் சென்றுவிட்டான்...

ரேகா எதுவும் பேசாமல்... குற்ற உணர்வுடன் தலை குனிந்து அமர்ந்திருக்க... அனுபமா அவளை ஆதரவுடன் அழைத்தாள்...

"ரேகா... இங்கே வாம்மா..."

"என்ன அத்தை...?"

"ஏன்... என்னவோ போல் இருக்கிறாய்?"

"என்னால்தானே இந்தக் குடும்பம் பிரிந்தது...?"

"அப்படி யார் சொன்னது...?"

"அவர்தான்... தினமும் சொல்கிறார்..."

"யார்... வைகுந்தா அப்படிச் சொல்கிறான்...?"

"ஆமாம்..."

"நீ என்னம்மா செய்வாய்...? நீ சூது வாதில்லாத பெண்...'"

"அப்படியிருப்பதும் தப்புத்தானே அத்தை... சொல்வார் பேச்சைக் கேட்டு... என் வாழ்வை நானே பாழடித்துக் கொண்டேனே..."

"இப்போது வருந்தி ஆகப்போவது ஒன்றுமில்லை ரேகா... நீ சொல்வதும் ஒருவகையில் சரிதான்... சூதுவாது தெரியாமல் இருப்பதும் கூட ஒருவகையில் தவறுதான்... 'களவும் கற்று மற...! என்று பெரியவர்கள் ஏன் சொல்லி வைத்திருக்கிறார்கள்...? களவைக் கண்டுபிடித்து... அதிலிருந்து நம்மைக் காப்பாற்றிக் கொள்வதற்காகத்தான் அப்படிச் சொல்லி வைத்திருக் கிறார்கள்..."

"நான் என்ன செய்திருக்க வேண்டும் அத்தை..."

"எடுப்பார் கைப்பிள்ளையாக இருந்திருக்கக் கூடாது... ஏமாற்றுவது தவறு ரேகா... ஏமாறுவது அதைவிடத் தவறு... நீ அடுத்தவரைக் கெடுக்கக் கூடாது... அதே சமயம் அடுத்தவர்கள் உன் வாழ்வைக் கெடுக்க இடம் தரவும் கூடாது..."

"இது எனக்குத் தெரியாமல் போய்விட்டதே..."

"போனது போகட்டும்... இனித் தெரிந்துகொள்... வெகுளிக்கு இன்னொரு பெயர் ஏமாளி... இனியும் நீ ஏமாளியாக இருக்காதே... உன்னை விட இன்னொருவரைக் கெட்டிக்காரராக இருக்கவிடாதே..."

"இனி அப்படியிருக்கமாட்டேன்அத்தை..."



"எனக்கு இது போதும்... வைகுந்த் ஒரு பெரிய கம்பெனியின் எம்.டி. அவன் மனைவி கெட்டிக்காரியாக இருக்க வேண்டாமா?"

"இனிமேல் இருப்பேன்..."

"வைகுந்த் உன் மேல் பாசமாகவும்... காதலாகவும் இருக்க நான் ஒரு வழி சொல்லித் தரட்டுமா...?"

"நிஜமாகவா... என் வைகுந்த்... என்னைக் காதலிப்பாரா...?"

"ம்ம்... காதலிப்பான்... நீ நம் குடும்பத்தைப் பற்றி உயர்வாகப் பேசு... அவன் ஒதுங்கிப் போனால்... நீயும் ஒதுங்கி நிற்காதே... எல்லாம் சரியாக விடும்..."

அன்று மாலை வைகுந்த் அலுவலகத்தில் இருந்து திரும்பி வந்தபோது... ரேகா... அனுபமாவிற்கு காபியை ஆற்றிக் கொடுத்துக் கொண்டிருப்பதைப் பார்த்தான்... அவன் முகம் மலர்ந்துவிட்டது...

## 40

அனுபமா அத்துடன் நிற்கவில்லை... அன்று இரவு வைகுந்தையும் ரேகாவையும் அங்கேயே சாப்பிட்டு விட்டுப் போகச் சொன்னாள்... சாப்பாட்டின்

போது... மகனைத் தவிர்த்து... மருமகளிடமே அவள் பேசிக் கொண்டிருக்க... ரேகா பாசத்துடன் பதில் சொல்லிக் கொண்டிருந்தாள்... வைகுந்தின் மனதில் இருந்த முள் நீங்கிவிட்டது...

கிளம்பும் போது மகனைத் தனியாக அழைத்து... அவனிடம் வேண்டுகோள் ஒன்றை வைத்தாள் அனுபமா...

''வைகுந்த்... எனக்கு... என் பேரன்... பேத்திகளை கொஞ்ச வேண்டுமென்று ஆசையாக இருக்கிறதுடா... நீபா குழந்தை பெற்றுக் கொள்வதைத் தள்ளிப் போடுகிறாள்... அவளிடம் போய் நான் என் ஆசையைக் கேட்க முடியுமா...? உன்னிடம்தான் கேட்க முடியும்...''

வைகுந்த்... வீட்டிற்குத் திரும்பியதும்...அன்று இரவு ரேகாவை ஆசையுடன் நெருங்கினான்... நூல் கிடைத்தாலும் போதும்... அதை இறுகப் பற்றிக் கொண்டு...இரும்புச் சங்கிலியாக்கி விடு என்று மாமியார் செய்த போதனையை மனதில் உருவேற்றி வைத்திருந்த ரேகா... கணவனின் காதலை இறுகப் பற்றிக் கொண்டாள்...

அடுத்த இரு மாதங்களில்... தான் அன்னையாகப் போகும் இனிய செய்தியை சுமந்து கொண்டு... முகம் சிவக்க மாமியாரைப் பார்க்க வந்தாள் ரேகா...

தனக்கு முன்னால்... தம்பி... அப்பாவாகப் போகும் செய்தியைக் கேட்டதும் முகுந்தனின் மனதில்



புயலடித்தது... அவன் நீபாவிடமிருந்து விலக ஆரம்பித்தான்... காரணத்தை அவள் கேட்டபோது வெறுப்பாக அவளைப் பார்த்தான்...

''கல்யாணமாகி நான்கு வருடங்கள்தான் ஆகியிருந்ததாம்... என் அம்மாவை... பிள்ளை பெற்றுக் கொள்ளவில்லையென்பதை குறையாக மற்றவர்கள் சொன்னார்களாம்... அதைக் கேட்டுவிட்டு... என் அம்மா... என் அப்பாவிடம் வந்து கதறி அழுதாங் களாம்... அவங்க பெண்...''

முகுந்தனின் பேச்சைக் கேட்டு நீபா விக்கித்துப் போனாள்... அவளுடைய மாமியார்தான் பெண் என்றால்... அவள் யார்...?

அத்தனை நாள்களாக... முகுந்தனை கைக்குள் வைத்திருக்க வேண்டும்... குழந்தை பெற்றுக் கொண்டால்...இளமையும்... அழகும் போய் விடும் என்ற நினைவில் குழந்தை பெறுவதை தள்ளிப்போட்டுக் கொண்டு இருந்தவள்.. முதன் முதலாக மனதிற்குள் தாழ்வுணர்ச்சியை அனுபவித்தாள்...

''என் தம்பி கொடுத்து வைத்தவண்டி... சொல்பேச்சு கேட்கும் பெண்டாட்டியைக் கல்யாணம் பண்ணிக் கொண்டிருக்கிறான்... எனக்கு முன்னால்... அவன் அப்பாவாகப் போகிறான்டி... இது எனக்கு எவ்வளவு தலைகுனிவு தெரியுமா...? உன்னிடமோ... என்னிடமோ குறையிருந்தால்... இதை நான் ஜீரணித்துக் கொள்வேன்... உன் பிடிவாதத்தால் இந்த

நிலை எனக்கு வருகிறது என்றால்... எப்படி இதை நான் ஜீரணித்துக் கொள்வது...? ஒரு ஆண் பிள்ளைக்கு புருசனாவது மட்டும் பெருமையாகி விடுமா... அவன் அப்பாவாக வேண்டும்... ஒரு பெண்ணுக்கு 'தாய்' என்ற அந்தஸ்தில் கிடைக்கும் சந்தோசம்...வேறு எதிலும் கிடைக்காது... அதெல்லாம் பெண்களின் உணர்வு... உனக்கெங்கே அதைப் பற்றித் தெரியப் போகிறது...?"

இவ்வளவு உதாசீனமான வார்த்தைகளை... இதற்கு முன் முகுந்தன் பேசி... நீபா கேட்டதில்லை... அவள் சங்கடப்பட்டுப் போனாள்...அதைவிட அவளை மனக்கிலேச்சத்திற்கு ஆளாக்கியது... முகுந்தன்... அவனுடைய அம்மாவை அடிக்கடி போய்ப் பார்க்க ஆரம்பித்தது...

கணவனை மீண்டும் தனதாக்கிக் கொள்ளத் துடித்தாள் நீபா... அதன் பலனாக... அவள் மறு மாதமே... முகுந்தனைத் தந்தையாக்கும் செய்தியைக் கூற.. முகுந்தன் மகிழ்ந்து போனான்...

தன் இரு மகன்களும் அப்பாவாகப் போகும் செய்தியை அறிந்து அனுபமா ஆனந்தப் பட்டபோது... லாவண்யா தாய்மையடைந்திருக்கும் செய்தி... போனில் வந்தது...

ரேகாவிற்கும்... நீபாவிற்கும்... தங்களின் வீட்டிலேயே அனுபமாவின் கண்பார்வையில் வளைகாப்பை நடத்தி வைத்தார் சுந்தரம்... வளைகாப்பு



முடிந்து.. அனுபமாவின் பாதம் பணிந்து அவரவரின் தாய் விட்டிற்கு பிரசவத்திற்குப் போனார்கள்... அனுபமாவின் மருமகள்கள்...

அனுபமாவை... உடல் குலுங்காமல்... மெதுவாக காரை ஒட்டச் செய்து... காரில் அழைத்துக் கொண்டு போய்.. லாவண்யாவிற்கு வளைகாப்பு செய்து... மகளை தலைப் பிரசவத்திற்காக... தாய் வீட்டிற்கு அழைத்துக் கொண்டு வந்தார் சுந்தரம்...

லாவண்யாவை... தாய் கவனித்துக் கொள்ள வில்லை என்ற குறை வராமல்... தான் கவனித்துக் கொண்டார்... விசாலம் லாவண்யாவின் வாய்க்கு ருசியாக சமைத்துப்போட... லாவண்யா மகனைப் பெற்றெடுத்தாள்...

மூன்றாம் மாதம்... முறைப்படி செய்ய வேண்டிய சீர்களை செய்து... மகளையும் பேரனையும்... அழைத்துக் கொண்டு போக வந்த... அவளின் புகுந்த வீட்டினரோடு அனுப்பி வைத்தார் சுந்தரம்...

முகுந்தன் பெண் குழந்தைக்கு தந்தையாக... வைகுந்த் ஆண் குழந்தைக்கு அப்பாவானான்...

இரண்டு மருமகள்களையும் அழைக்க வேண்டிய முறைப்படி அழைத்துவர... அனுபமாவை அழைத்துக் கொண்டு போனார் சுந்தரம்...

நாள்கள் இறக்கை கட்டிக் கொண்டு பறந்தன... மாதங்கள் உருண்டன... பேரன் பேத்திகளின் காதணி விழாக்களையும் கண்டுவிட்ட அனுபமா... மன

நிறைவுடன் சுந்தரத்தின் மடியில் படுத்துக் கொண்டு கூறினாள்...

"எனக்கு இது போதுங்க... வாழ வேண்டிய வாழ்க்கையை மனநிறைவோடு வாழ்ந்துவிட்டேன்... இனி நிம்மதியாக கண் மூடுவேன்..."

எந்த நேரம்... அப்படிப்பட்ட வார்த்தைகளைச் சொன்னாளோ... அனுபமா... மரணப் படுக்கையில் விழுந்தாள்.

## 41

வீடு பூராவும்... நிறைந்திருந்தது... முகுந்தனும்... வைகுந்தும்... மனைவி... குழந்தையுடன்... சுந்தரத்தின் வீட்டிற்கே வந்துவிட்டார்கள்... லாவண்யா... கணவனுடனும்... குழந்தையுடனும் ஓடிவந்து விட்டாள்... மனைவியையும் குழந்தையையும்... சுந்தரத்தின் வீட்டிலேயே விட்டு விட்டு... லாவண்யாவின் கணவன் சென்னைக்கு சென்று விட்டான்...

சுந்தரம் மனைவியை விட்டு...நகரவில்லை... உயிரும் மனமும் துடிக்க.. அவளின் அருகிலேயே அமர்ந்திருந்தார்... அவளின் இறுதிக் கட்டம் நெருங்குவதை உணர்ந்துவிட்டவர்... அன்றைய இரவின் தனிமையில்... மனைவியின் கையைப்



பிடித்துக் கொண்டு... மன்றாடும் குரலில் பேச ஆரம்பித்தார்...

"அனு... உன்னிடம் நான் பேசவேண்டும்..."

"பேசுங்கள் அத்தான்..."

"நான் உனக்குச் சில கொடுமைகள் செய்துவிட்டேன்..."

அனுபமாவின் நலிந்த கரம்... அவரது கன்னத்தை வருடியது... அவள் சோகையாக புன்னகைத்தாள்... சிரமப்பட்டுப் பேசினாள்...

"உங்களால் எனக்குக் கனவில் கூடக் கெடுதல் நினைக்க முடியாது அத்தான்..."

"இல்லை அனு... நான் உனக்குக் கெடுதல்கள் செய்தேன்..."

"ச்ச்... வேறு பேசுங்கள்..."

"இதை நான் சொல்லித்தான் ஆகவேண்டும் அனு... நான் பாவி ஒருவகையில் நான் உன் காதலுக்கு வில்லனாக நின்றேன்... இது உனக்குத் தெரியாது..."

"தெரியும் அத்தான்..."

அனுபமா நிதானமாக இதைக் கூறவும்... சுந்தரத்திற்கு தூக்கி வாரிப்போட்டது... அவர் அதிர்ச்சியுடன் மனைவியைப் பார்த்தார்...

"என்ன தெரியும் அது..."

"எல்லாமும் தெரியும்..."

"நான் வாகீசனை உன் வாழ்க்கையில் இருந்து விலக்கியது உனக்குத் தெரியுமா..."

"தெரியும்..."

"முகிலனை உன் காதலை மறக்க வைத்ததும் நான்தான் என்பது உனக்குத் தெரியுமா...?"

"தெரியும்..."

"எப்படி அனு..."

"ஒருமுறை... உங்கள் டைரியை நான் படிக்க வேண்டி வந்தது..."

"தெரிந்துமா... என்னுடன் சந்தோசமாக வாழ்ந்தாய்...? தெரிந்துமா என்னை வெறுக்காமல் காதலித்தாய்...?"

அனுபமா தன் கணவனை விழிகளால் அருகில்அழைத்தாள்... அவர் தாய்மடி தேடும் குழந்தையாக... அவளின் தோள் வளைவில் முகம் புதைத்தார்... சுந்தரத்தின் முடி கோதியபடி... மென்மையான குரலில் பேசினாள் அனுபமா...

"வாகீசன் என்னைக் காதலிக்கவில்லை அத்தான்... அவன் காதலித்தது என்னுடன் இருந்த முக்கியத்துவத்தை... காலேஜில் என்னைக்



காதலிப்பதாகச் சொன்னால் அவனுக்கு ஒரு கௌரவம் கிடைக்கும் என்பதற்காக அப்படிச் சொன்னான்..."

"ஆனால்... முகிலன்...?"

"காதலுக்காக எதையும் தியாகம் செய்யலாம்... ஆனால் எதற்காகவும் காதலைத் தியாகம் செய்யலாமா...? அவன் அதைச் செய்தான்... எப்போது அவன் என் காதலை தூக்கியெறிந்தானோ அப்போதே... அவனையும் என் மனதிலிருந்து நான் தூக்கி எறிந்துவிட்டேன்..."

"ஆனாலும்... நான் செய்தது தவறுதானே..."

"இல்லை அத்தான்... உங்களின் காதல் உண்மையானது... காதலுக்காக எதையும் செய்யத் துணிந்த ஆண்மை உங்களுடையது... வாகீசனின் காதல் உண்மையானதாக இருந்திருந்தால் அவன்... அவனுடைய அப்பாவை எதிர்த்து நின்றிருப்பான்.. முகிலனின் காதல் உண்மையானதாக இருந்திருந் தால்... அவன் உழைத்து தன் குடும்பத்தைக் கரை சேர்த்திருப்பான்.. என்னைக் கைவிட்டிருக்க மாட்டான்... அவர்கள் இரண்டு பேருமே... சந்தர்ப்ப வாதிகள்... நிறம் மாறும் பச்சோந்திகள்... அவர்களின் கயமையான குணத்தை நீங்கள் உங்களுக்குச் சாதகமாக பயன்படுத்திக் கொண்டீர்கள்... அவ்வளவு தான்... என்னை அடைய எதையும் செய்யும் துணிவு உங்களிடம் இருந்தது... என்னை இழக்காமலிருக்க

சிறு துரும்பைக் கூடக் கிள்ளிப் போடும் பொறுப்பு அவர்களிடம் இல்லை... அவ்வளவுதான்... நீங்கள் காதல் போர்க்களத்தில் ஜெயித்தவர்... என் ஆண்மகன்... என்னை ஜெயித்து... என் மனதையும் ஜெயித்தார்... உங்களைக் காதலிக்காமல்... என்னால் எப்படியிருக்க முடியும்?"

சுந்தரத்தின் மனதிலிருந்த பாரம் அகன்றது... அவர் உணர்ச்சிப் பெருக்குடன் மனைவியின் கன்னங்களில் முத்தமிட்டார்...

"இவ்வளவு செய்த நீங்கள் என் அப்பாவிற்கு கொடுத்த வாக்குறுதிக்காக என்னை இழக்கத் துணிந்தீர்களே...அப்போது என் மனதில் இமயமாக உயர்ந்து நின்றீர்கள்... உங்களைப் போன்ற ஒரு ஆண்மகனுடன் வாழும் பாக்கியம் எனக்குக் கிடைத்தது... எனக்கு அதைவிட வேறு என்ன வரம் வேண்டும் அத்தான்..."

சுந்தரம் மனைவியை தன் மார்பில் சாய்த்துக் கொண்டார்... அனுபமா மெல்லிய குரலில் வினவினாள்...

"அத்தான்... எனக்குப் பாடவேண்டும் போல இருக்கிறது..."

"பாடு அனு..."

*"தன்னந் தனிமையிலே - உடல்*
*தள்ளாத வயதினிலே...*



*உங்கள் அன்புமுகம் பார்த்துவிட்டால்...*
*துன்பம் ஓடோடிப் போகாதோ..."*

பாடல் பாதியிலேயே நின்றுவிட... சுந்தரம் பதறிப்போய் மனைவியை உலுக்கினார்... அவள் தலை தொய்ந்து விழுந்தது...

"அனு..."

சுந்தரம் அவளைத் தன்னுடன் இறுக்கிக் கொண்டு துடித்தார்... அவரது அனுபமா.. அவரைவிட்டுப் பிரிந்துவிட்டாளென்ற உண்மை உறைத்ததுமே... அவரும் உறைந்து போனார்...

விடிந்ததும்... அவர்கள் இருவரின் உயிரற்ற உடல்களைக் கண்டு... வீடே கதறி அழுதது...

## 42

விடிந்து வெகு நேரமாகியும்... அறைக் கதவு திறக்கப்படாததால் பதறிப் போன முகுந்தனும்... வைகுந்தனும் கதவைத் தட்டிப் பார்த்தார்கள்.. கதவு திறக்கப்படவில்லை... சுந்தரம்... அனுபமா... இருவரின் செல்போன்களிலும் மணியோசை போய் கொண்டே யிருக்க... வைகுந்த் கதவை உடைத்துவிட்டான்...

அனைவரும் உள்ளே ஓடினர்... கட்டிலில் கால் நீட்டி சுந்தரம் மனைவியை அணைவாக பிடித்தபடி படுத்திருக்க... அவரது மார்பில் தலை சாய்த்திருந்தாள் அனுபமா... இருவரின் விழிகளும் மூடியிருந்தன... அவர்களின் அசைவற்ற தோற்றம் உண்மையை உணர்த்த... வைகுந்தும்... லாவண்யாவும்... அடிவயிற்றிலிருந்து அலறினார்கள்...

"அம்மா...!"

"அப்பா...!"

முகுந்தன் அப்படியே சிலை போல் நின்று விட்டான்... அவர்கள் மூவரையும் பெற்று வளர்த்தவர்கள்... இந்த உலகத்தில் இல்லையென்ற உண்மை... அவனது இதயத்தைத் தாக்கியது... அவர்கள் உயிரோடு இருந்தபோது... தெரியாத மதிப்பு.. அவர்கள் இறந்தபோது அவனுக்குப் புரிந்தது...

அவர்களின் காலடியில் சரிந்து அவன் குலுங்கி அழுதான்.

"அம்மா.. அப்பா..."

விசாலமும்.. கோவிந்தனும்... விக்கித்து நின்று விட்டார்கள்...

"யோய்... என்னய்யா இது... பறவைகள்ல ஏதோ ஒன்னுதான்துணையைப் பிரிஞ்சதும்... தானும் செத்துப்



போகுமாம்... நம்ம ஐயாயும்... அதைப் போலவே... அம்மா கூட போயிட்டாரே..."

"வாழ்ந்தால் இவங்களைப் போல் வாழனும்டி.... வயசான காலத்திலயும் இவங்க இரண்டுபேரும்... ஒருத்தர் மேல ஒருத்தர் காட்டிய பிரியத்தையும்... காதலையும் நினைத்துப் பார்த்தாலே சிலிர்த்துப் போகுதுடி விசாலம்... இவ்வளவு அன்யோன்யமாய் யாராலும் வாழ முடியுமா...?"

"என்னய்யா கொடுமை இது... இவங்க காலடியில் கிடந்துவிட்டு...இனி இன்னொருத்தங்க கிட்ட நம்மாலே வேலை பார்க்க முடியுமா...?"

"நீ ஏண்டி மருகுற... என் கிராமத்தில் எனக்குன்னு சொந்தமாய் குடிசை இருக்கு... கையகல நிலம் இருக்கு... நான் உழைச்சு உன்னையும்... நம் பிள்ளைகளையும் காப்பாற்ற மாட்டேனா..."

அதுதான் சுந்தரத்தின் நிழல் தந்த உணர்வு தன்னை நம்பி வந்தவளைக் கண்ணுக்குள் வைத்துக் காப்பாற்றும் துடிப்பு... பெண்மையை தன் சிறகின் அடியில் வைத்துக் காப்பாற்றும் ஆண்மையின் பொறுப்பு...

முகுந்தன் மனம் உடைந்து போயிருந்தான்... பெற்றோரின் வாழ் நாளிலேயே... வைகுந்த்... தாயைப் போற்றும் தனயனாக தன் பாசத்தை முழுமையாக அனுபமாவிடம் காட்டிவிட்டான்...

லாவண்யா தந்தை சொல் மிக்க மந்திரமில்லை யென்று... சுந்தரத்திடம் தன் அன்பை முழுமையாகக் கொட்டிவிட்டாள்...அவன் என்ன செய்தான்...?

சுந்தரம்... அனுபமாவின் இறுதிக் காரியங்கள் முடிந்து... அவர்கள் இருவரும்... புகைப் படங்களின் சட்டங்களில் புன்னகை பூத்த முகத்துடன் அடங்கி விட்டார்கள்...

நெருங்கிய உறவினர்கள் மட்டுமே இருக்க... மற்றவரெல்லாம் கிளம்பிப் போய் விட்டிருந்தனர்... விசாலமும்... கோவிந்தனும் அந்த மாத இறுதியில் கிளம்புவதாக இருந்தார்கள்...

குடும்ப வக்கீல் வந்ததும்... உறவினர் மத்தியில் சலசலப்பு...

"சுந்தரம் உயில் எழுதி வைச்சிருக்காராம்..."

"ஆமாமில்ல... இன்ஜினியரிங் காலேஜ்... இரும்பு வியாபாரம்... இந்த வீடு... ஊரில் இருக்கிற தோப்பும்... தோட்டமும்... இதையெல்லாம்... இன்னும் பாகம் பிரிச்சுக் கொடுக்கலையில்ல...?"

குடும்ப வக்கீல் உயிலைப் படிக்க ஆரம்பித்த தும்... வரவேற்பு அறையில் குண்டுசி விழுந்தால் கூடக் கேட்டும் அளவிற்கு நிசப்தம் நிலவியது...

அது உயிலாக இல்லாமல்... சுந்தரத்தின் கடிதமாக இருந்தது...



"என் அன்பிற்குரிய பிள்ளைகளுக்கு...

அனுபமாவும்... நானும் வாழ்ந்த வாழ்க்கையின் வழித் தோன்றல்கள் நீங்கள்... உங்களுக்கு இடையே நாங்கள் பாரபட்சம் பார்க்கவில்லை... மழை நீரைப் பொழியும் மேகம்... பூமி பதிலுக்கு தனக்குப் பாசத்தைத் தரவேண்டும் என்று எதிர் பார்ப்பதில்லை... அது போலத்தான் நாங்களும்... எங்களிடம் பாசமாக இருந்தால்தான் அது நாங்கள் பெற்ற பிள்ளை என்று நினைத்தால்... நாங்கள் பெற்றவர்கள் ஆகிவிட முடியாது... எங்கள் மேல் பாசமாக இருந்தாலும்... இல்லாவிட்டாலும்... நாங்கள் பெற்ற பிள்ளைகளின் மேல்... எங்களுக்கு இருக்கும் பாசம் குறையாது... எங்களுக்கு மூன்று பிள்ளைகளும் சரிசமம்தான்...

முகுந்தனின் மனைவிக்கு... நாங்கள் வாழ்ந்த இந்த வீட்டின் மேல் ஆசை உண்டு... அதனால் அனுபமாவின் விருப்பப்படி இந்த வீட்டை... முகுந்தனுக்கு கொடுக்கிறேன்...!

நீபா விசும்பி அழ ஆரம்பித்தாள்... முகுந்தன் வெறுமையுடன் அவளைப் பார்த்துவிட்டு துக்கத்துடன் விலகி நின்றான்...

"...வைகுந்த்... அனுபமாவின் மேல் மட்டற்ற பாசம் வைத்திருக்கிறவன்... அவனுக்கு

அனுபமா படித்த பொறியியல் கல்லூரியைக் கொடுக்கிறேன்..."

"அம்மா..." என்று வைகுந்த் அழ ஆரம்பித்து விட்டான்... ரேகாவும் கணவனுடன் சேர்ந்து கதறினாள்.

"... இரும்பு வியாபாரத்தை... லாவண்யா வின் கணவருக்கு கொடுக்கிறோம்... அனுபமா வின் நகைகள் மூன்று பங்காக பிரிக்கப்பட்டு... என் இரண்டு மருமகள்களுக்கும்... ஒரு மகளுக்கும் கொடுக்கப்பட வேண்டும்... ஊரில் இருக்கும் பூர்விக நிலங்கள் சரிபாகமாக பிரிக்கப்பட்டு... முகுந்தனுக்கும்... வைகுந்தனுக் கும் கொடுக்கப்பட வேண்டும்... பூர்வீக சொத்துக்களை மகன்கள் வைத்துக் கொள்ள வேண்டும் என்ற தர்மத்தின்படி இதை நான் செய்திருக்கிறேன்... பதிலுக்கு என் மகன்கள் இருவரும்... அவர்களின் கடைசி மூச்சுவரை... அவர்களின் ஒரே தங்கையான லாவண்யாவை ஆதரித்து... பிறந்து வீட்டுச் சீதனம் அளித்து வர வேண்டும் என்று கட்டளையிடுகிறேன்... எங்களுக்குப் பின்னால்... என் மகளுக்கு தாய் வீடு இல்லாமல் போய்விடக் கூடாது..."

"அப்பா... அம்மா..." என்று லாவண்யா கதற... 'நாங்கள் இருக்கிறோம்...' என்ற



பாவனையில் முகுந்தனும்... வைகுந்தனும் அவளை அணைத்துக் கொண்டார்கள்...

"...இறுதியாக... பேங்கில் இருக்கும் என் சொந்தப் பணம்... பத்து லட்சத்தையும்... எங்களின் இறுதிக் காலத்தில் எங்களுடனே இருந்து வந்த கோவிந்தனுக்கும்... விசாலத் திற்கும் கொடுத்துவிட வேண்டும்... என் விட்டிலிருக்கும் அவுட் ஹவுஸை ஏற்கனவே அவர்களின் பெயருக்கு எழுதிக் கொடுத் திருக்கிறேன்... என் பூர்வீக கிராமத்தில் நான் வாங்கிய ஐந்து ஏக்கர் நிலமும்... அவர்களையே சேர வேண்டும்...!

"ஐயா... தர்மதுரையே... வள்ளலே... உங்க காலடியில் கிடந்த புண்ணியம் எங்களுக்குப் போதுமய்யா... இந்த காசையும்... பணத்தையும் எதிர்பார்த்தா நாங்க இங்கே வேலை செய்தோம்...? உங்க பாசத்துக்கு கட்டுப்பட்டு நின்னோமுய்யா..."

கோவிந்தன் தலையில் அடித்துக் கொண்டு அழுதான்... விசாலம்... முந்தானையில் முகத்தை மூடிக் கொண்டு கேவினாள் அந்த வரவேற்பறை யிலிருந்த டிவியில் பாடல் ஒன்று ஒலித்தது...

"வாழ்ந்தால்... உங்களைப் போல் வாழ வேண்டும்...

வயதான காலத்திலும் நேசம் வேண்டும்..."

எல்லோருக்கும் நிறைவாக கொடுத்துவிட்டு... நிறைவான வாழ்வை வாழ்ந்துவிட்ட நிம்மதியுடன்... சுந்தரமும்... அனுபமாவும்... மலர்மாலை சூட்டப்பட்ட புகைப்படத்தில் நின்று சிரித்தார்கள்.